

# கோபுரம்




தகவல் இதழ் சர்வதாரி வருடம் ஆவணி 2008












மத விவகார ஒழுக்க மேம்பாட்டு அமைச்சு
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்



# கோபுரம்

## தகவல் இதழ்

**சர்வதாரி வருடம்** **ஆவணி 2008**
மலர் 16 இதழ் 02

# தொகுப்பு

## ஆய்வுப்பிரிவு

### மலர்க்குழு

**திருமதி சாந்தி நாவுக்கரசன்**
பணிப்பாளர்

**திரு.சீ. தெய்வநாயகம்**
உதவிப்பணிப்பாளர் (ஆராய்ச்சி)

**திரு.ம.சண்முகநாதன்**
உதவிப்பணிப்பாளர் (இந்துவிவகாரம்)

**திருமதி தேவகுமாரி ஹரன்**
சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர்

**திருமதி நித்தியவதி நித்தியானந்தன்**
ஆராய்ச்சி அலுவலர்

**செல்வி நந்தினி சண்முகலிங்கம்**
அபிவிருத்தி உதவியாளர் (ஆராய்ச்சி)

**இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்**
**இல. 248 1/1, காலி வீதி, கொழும்பு - 04**

தொலைபேசி இல: 2552643 தொலைநகல்: 2552825

# எண்ணம்

மக்களின் அன்றாடத் தேவைகளும், அபிலாசைகளும் அதிகரித்து வரும் இந்நாளில் சமயப் பாரம்பரியங்கள் மருவி வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. சமயப் பாரம்பரியங்கள் மாற்றமடைவதால், மக்கள் வாழ்க்கையில் நம்பிக்கை இழக்கப்பட்டு நிம்மதியற்றவர்களாக வாழ்கின்றனர். கடவுளிடம் நம்பிக்கை வைத்துக் காரியங்கள் ஆற்றும்போது அது வெற்றியளிக்கின்றது.

நம்பிக்கைதான் வாழ்க்கை. மக்களின் உயர்ந்த நோக்கத்திற்கும், நிம்மதியை அடைவதற்கும் இறையருளைத் தேடிக்கொள்ள வேண்டும். இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை இந்துக்களின் வாழ்க்கை நெறிமுறைகளுக்கேற்ற கடமைகளை நிறைவேற்றி வருவதை யாவரும் அறிவர்.

ஆலயங்களையும் அதனுடன் இணைந்த அறநெறிப்பாடசாலைகளையும் மேம்படுத்தும் திட்டங்களே திணைக்களத்தில் முக்கிய இடம் வகிக்கின்றன. ஆனால் இந்த இரண்டினதும் செயற்பாடுகளும் எதிர்பார்த்தளவு முன்னேற்றம் அடையவில்லை. ஆலயங்கள் சமூகத்துடன் இணைந்து கருமங்களை முன்னெடுப்பதற்குப் பதிலாக தாங்கள் நினைத்தமாதிரி நடந்துகொள்வது சமூகத்தைப் புறக்கணிக்கும் செயலாகும். ஆடம்பர திருவிழாக் கேளிக்கைகளுக்குச் செலவு செய்வதைத் தவிர்த்து அந்த நிதியைக் கொண்டு சமூகத்தின் தேவைகளில் ஒரு சிறு பகுதியையவாது நிறைவேற்றினால் அது சமூக மேம்பாட்டிற்கும், இறைநம்பிக்கைக்கும் உதவுவதாக அமையும்.

சமூகத்தின் தேவைக்குரிய அறநெறிக் கருத்துக்களை வளர்த்தெடுக்கும் பங்கு அறநெறிப்பாடசாலைகளுக்கு உரியனவாக உள்ளதால், ஆலயங்களில் செய்யப்படும் ஆடம்பரச்செலவுத் தொகையை அறநெறிப் பாடசாலைகளுக்குக் கொடுத்து அவைகளை வளர்த்தெடுக்க முன்வரவேண்டும். அப்போது சமூகம் நல்ல அறநெறிக் கருத்துக்களை உள்வாங்கி சீரிய சமூக வளர்ச்சி காண்பதுடன், ஆலயங்களும் அதனால் பெருமைபெறும்.

இந்துக்கள் இந்துக்களாக வாழ முற்படும் போது இறையருள் தானாகவே குடிகொள்ளும். அந்த இறையருளைத் தேடி கொள்வதற்கு, ஆலயங்களும் முக்கிய பங்காற்றுகின்றன. வருவாய்க்கு மட்டும் ஆலயங்களாகச் செயற்படாமல் அறநெறிக் கருத்துக்களைப் போதிக்கும் மையங்களாக திகழ வேண்டும்.

இந்து ஆலயங்களில் இடம்பெறும் திருவிழாக்களும், அபிஷேகங்களும், ஆராதனைகளும் பெருமைக்காகவே செய்யப்படுகின்றன. இதனால் எத்தனைபேர் இறையருளைப் பெற்றுக்கொண்டார்கள் என்றால் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே அதில் அடங்குவர். எவ்வளவு வருவாய் வந்தது, அதைவிட இது சிறப்பாக இருந்தது என யாரும் கூறாமல், சமூகத்திற்கு உயர்ந்த எண்ணங்களையும், உயரிய கருத்துக்களையும் வாரி வழங்கும் வள்ளல்களாக ஆலயங்கள் செயற்பட்டால் அந்த ஆலயத்தைச் சார்ந்த சமூகம் இறையருள் நிரம்பிய சமூகமாக மாறும். அப்போது அச்சமூக வளர்ச்சிக்கு ஆரம்பிக்கப்பட்ட அறநெறிப்பாடசாலைகள் உரிய நோக்கத்தையடைந்து அறநெறிக் கருத்துக்களை உள்வாங்கும் சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் நிலையங்களாக திகழும். இதனால் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் எண்ணம் நிறைவேறிட வாய்ப்பு உண்டு.


**மலர்க்குழு**

# வாழ்த்துரை!



எமது நாட்டில் இந்து சமய, கலாசார திணைக்களத்தின் பாராட்டத்தக்க பணிகளை நாம் வரவேற்க வேண்டும். கொழும்பில் இயங்கி வரும் இந்நிறுவனத்திற்கு இருபது ஆண்டுப் பூர்த்தி விழா நடைபெற இருக்கிறது. மக்களுக்கு ஆற்றிய, ஆற்ற வேண்டிய நற்பணிகளை விழா மலரின் மூலம் அறிய வைப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். சமூக நலன் இவற்றால் பேணப்படுகின்றது. பேச்சிலே வெளிப்படுத்துவதிலும் பார்க்க, எழுத்திலே வெளிப்படுத்துவது பலரும் அறியக் கூடியதாக அமையும்.

"இந்து கலாசாரம்" என்பது எம்மவர் வளர்த்து வந்த புராதனக் கலாசாரமாகும். இதன் மூலம் உண்மை பேசல், மது விலக்கல், தேவைப்பட்டோருக்கு உதவுதல், பெற்றோர்களையும், பெரியோர்களையும் மதித்தல், கடவுள் நம்பிக்கை ஆகியவை பேணப்படுகின்றன. எனவே கிராமங்கள் தோறும், நகரங்கள் தோறும் திணைக்களப் பணிகள் விரிவுபெற வேண்டும். தன்னலம் கருதா ஆன்மீகப் பணிகளை இத்திணைக்களம் மூலம் வழங்கி நிற்பது தலையாய கடமையாகும்..



கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, ஸ்ரீலங்கா

# கண்ணீர் அஞ்சலி

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் 20வது ஆண்டு நிறைவைக் கொண்டாடிய வேளையில், கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் திணைக்கள வளர்ச்சிப் பாதையை மனதார உளமார வாழ்த்தி வழங்கிய வாழ்த்துரை.

இன்று அவர் நம்மைவிட்டுப் பிரிந்து விட்டார். சைவ உலகிற்கு ஆற்றிய பணிகள் அளப்பரியன. ஆலயம் ஊடாக சமயத்தை வளர்த்து அறநெறிப் பாதையைத் திறந்து விட்டவர். தனது பணிகள் மூலம் உயர்ந்த எண்ணங்களையும், போதனைகளையும் இந்நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறியவர்.

ஆலயம் என்றால் அது சமூகத்துடன் இணைந்திருக்க வேண்டும். சமூகத்திற்கு முடிந்தவரை தொண்டாற்ற வேண்டும் என்ற உயரிய நோக்கை வெளிக் கொணர்ந்த பெருமை அம்மையாரைச் சாரும்.

கல்விதானம். அன்னதானம். வஸ்திரதானம் போன்ற பல தானங்களிற்குப் புகலிடமாகத் திகழ்ந்தவர். சிறுவர் இல்லம் மூலம் துயர் துடைத்த பெருமை துர்க்கா துரந்தரிக்கே உரியது. சைவமும், தமிழும் தழைத்தோங்கத் தன் இறுதி மூச்சுவரை சேவையாற்றி மனநிறைவுடன் இறைபதமடைந்த சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு மத அலுவல்கள் ஒழுக்க மேம்பாட்டு அமைச்சும், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து தங்கள் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றன.

## *ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்*

**மத அலுவல்கள் ஒழுக்க மேம்பாட்டு அமைச்சு**
**இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**

# திணைக்களச் செய்திகள்

## திணைக்கள நூல் வெளியீடு

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆய்வுப்பிரிவின் நூல்களுக்கான வெளியீட்டு வைபவம் 06.06.2008 ஆம் திகதி கொழும்பு, இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் இந்துக் கலைக்களஞ்சியம்-09 ஆம் தொகுதி, இரகுவம்மிசம், (கிடைத்தற்கரிய நூல்), ஔவைக்குறள் ஆகிய நூல்கள் வெளியீடு செய்து வைக்கப்பட்டன.

இவ்வைபவத்தில் பிரதமவிருந்தினராக சமய விவகார அமைச்சின் செயலாளர் திரு.எச்.எம். ஹேரத் அவர்களும், சிறப்புவிருந்தினர்களாக பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் எஸ்.சண்முகவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்

வரவேற்புரையை உதவிப்பணிப்பாளர் திரு.ம.சண்முகநாதன் அவர்களும், ஆசியுரையை சுவாமி சர்வரூபானந்தாஜி அவர்களும், தலைமையுரையை திணைக்களப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்களும், அறிமுகவுரையை உதவிப்பணிப்பாளர் திரு எஸ்.தெய்வநாயகம் அவர்களும் சிறப்புரையை பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களும், பிரதமவிருந்தினர் உரையை செயலாளர் திரு.எச்.எம்.ஹேரத் அவர்களும் நிகழ்த்தினர்.

அமைச்சின் செயலாளர் நூல்களின் முதற்பிரதியினை சுவாமி சர்வரூபானந்தா அவர்களுக்கு வழங்கி நூல்களின் தொகுதியினை வெளியிட்டு வைத்தார். நூல்களுக்கான விமர்சனவுரைகளை திரு. க. சண்முகலிங்கம் (இந்துக்கலைக்களஞ்சியம்), திரு.க. இரகுபரன் (இரகுவம்மிசம்), திரு. ஸ்ரீ. பிரசாந்தன் (ஔவைக்குறள்) ஆகியோர் வழங்கினர். இவ்வைபவத்தில் மதவிவகார அமைச்சின் செயலாளர் திரு எச். எம். ஹேரத், பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் எஸ். சண்முகவேல் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். சைவசித்தாந்த பயிற்சி நெறியில் கலந்து கொண்டோருக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

## இந்துக்கலைக்களஞ்சியம்

இந்துக்கலைக்களஞ்சியம் ஆய்வுப்பிரிவின் முக்கிய செயற்திட்டங்களுள் ஒன்றாகும். பன்னிரண்டு தொகுதிகள் வெளியிடப்படல் வேண்டும் என்ற உத்தேசத் திட்டத்தின் பிரகாரம் இந்துக் கலைக்களஞ்சியம் ஒன்பதாவது தொகுதி பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இத்தொகுதியும் ஏனைய தொகுதியைப் போன்றே இந்துசமயம், இந்துசமய வரலாறு, இந்துசமய தத்துவம், இந்துக்கலைகள், இந்துசமயப் பெரியார்கள், தொடர்பான ஆய்வுக்கட்டுரைகளைக் கொண்டவை. இத்தொகுதியில் உயிர்மெய்யெழுத்துக்களான ந-நௌ வரையான எழுத்துக்களில் தொடங்கும் 134ஆய்வுக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

## இரகுவம்மிசம்

திணைக்களத்தின் கிடைத்தற்கரிய, ஈழத்து தமிழ் நூல்கள் பதிப்பித்தல் தொடர்பான செயற்திட்டத்தின் கீழ் கடந்த வருடம் (2007) இரகுவம்மிசம் என்னும் இந்நூல் பதிப்பிக்கப்பட்டது.

இந்நூல் வடமொழி கவிஞர் காளிதாசர் இயற்றிய இரகுவம்மிசத்தின் தமிழ்மொழி

பெயர்ப்புநூலாகும். யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்திகளின் வழி வந்த அரசசேகரி என்பவரினால் இந்நூல் இயற்றப்பட்டதாகும். இந்நூலுக்கு வித்துவ சிரோன்மணி சி.கணேசய்யர் உரையெழுதியுள்ளார். இந்நூல் தேர்ந்தெடுக்கப்பட்டு பதிப்பிக்கபட்டமை சிறந்ததொரு பணியாகும்.

## ஔவைக்குறள்

சமய ஔவையார் எனப் போற்றப்படும் இரண்டாவது ஔவையாரால் இயற்றப்பட்ட ஔவைக்குறள் எனும் நூலே பதிப்பிக்கப்பட்டுள்ளது. திருக்குறள் போன்று இதுவும் தமிழில் தெளிந்த நடையில் உள்ளதால் மாணவர்கள் இலகுவாகக் கற்கமுடியும் என்பதனை உணர்ந்து திணைக்களம் இந்நூலினை மறுபதிப்புச் செய்துள்ளது. இதன் பதிப்பாசிரியராக உதவிப்பணிப்பாளர் சீ.தெய்வநாயகம் பணியாற்றியுள்ளார். இலவச வெளியீடான இந்நூல் இந்து அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு பெரிதும் பயன்படும் எனலாம்.

## சைவசித்தாந்த வகுப்பு

சைவசித்தாந்தம் தொடர்பாக பயிற்சி வகுப்புகள் கொழும்பு, இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் மே மாதம் 23 முதல் யூன் மாதம் 06 ஆம் திகதி வரை காலை மாலை வகுப்புகளாக நடைபெற்றன. இப்பயிற்சி வகுப்பில் 150 பேர் வரை கலந்து கொண்டு பயன்பெற்றனர். 15 நாட்கள் தொடர்ச்சியாக இவ்வகுப்புக்கள் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவிக்குமுகமான கொள்வனவும், நூலகங்களுக்கான நூல்கள் வழங்கலும்

இவ்வருட காலாண்டிற்கான கொள்வனவாக உள்ளூர் எழுத்தாளரிகளிடமிருந்து 907 நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டன. கொள்வனவு செய்யப்பட்ட நூல்களுடன் திணைக்கள வெளியீடுகளும் சேர்ந்து 25இற்கும் மேற்பட்ட நூலகங்களுக்கு நூற்பொதிகள் வழங்கப்பட்டன.

கொள்வனவு செய்யப்பட்டநூல்கள் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்குவதற்காகவும் இந்நூல்கள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பண்பாடு

2008 ஆம் ஆண்டிற்காக பண்பாடு மலர்-17 இதழ் 02 வெளிவந்துள்ளது. இப்பண்பாட்டு மலரில் பல்வேறு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

1. இந்து தத்துவ சிந்தனை - உலகாயுதம்
   கலாநிதி முப்பால்மணி
2. ஈழத்து சைவர்கள் சைவசித்தாந்தத்திற்கு புரிந்த பணிகள் - திரு.எஸ்.துஷ்யந்த்
3. சமயச் சான்றோர் போற்றிய சமத்துவம்
   கலாநிதி ஞானசிங்காரம்
4. திருக்குறளில் சைவசித்தாந்தம்
   கலாநிதி கஸ்தூரிராஜா
5. தொன்மை சமுதாயத்தில் இந்துப் பெண்கள்
   பேராசிரியர் தெ. அழகம்மை

என்பவையாகும்.

இவ்விதழைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் சுயமுகவரியிட்ட கடித உறையுடன் தொடர்பு கொள்ளவும்.

## பக்திநெறியும் பண்பாட்டு கோலங்களும்

திணைக்களத்தினால் வருடாந்தம் நடைபெறும் ஆய்வரங்குகளில் சமர்பிக்கப்படும் கட்டுரைகள் நூலுருவாக்கப்படுகின்றன. அவ்வகையில் 2007 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள்

- நூலுருவாக்கத்திற்காக அச்சில் உள்ளது.

## வருடாந்த ஆய்வரங்கு

### சோழப்பேரரசும் சமயப்பெருநெறியும்

இந்துசமய, தமிழிலக்கிய ஆய்வரங்கானது வருடாந்தம் திணைக்களத்தால் நடத்தப்படுகின்றது. இவ்வருடம் "சோழப்பேரரசும் சமயப்பெருநெறிகளும்" எனும் தலைப்பில் ஆகஸ்ட் மாதம் 22,23,24 ஆம் திகதிகளில் கொழும்பு, இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வாய்வரங்கானது சோழர் அரசியலும் வரலாறும், சமயமும் தத்துவமும், கோயில்களும் கலைகளும், சோழர்கால இலக்கியங்கள் எனும் தலைப்பிலான அமர்வுகளின் கீழ் பல ஆய்வுக்கட்டுரைகளை தென்னிந்திய அறிஞர்களும், இலங்கைப் பல்கலைக்கழக அறிஞர்களும் சமர்ப்பிக்கவுள்ளனர். தென்னிந்தியாவிலிருந்து கலாநிதி எ. சுப்பராயலு, பேராசிரியர் என். முத்துமோகன், கலாநிதி இரா.சங்கரன், கலாநிதி இரா. இராஜவேலு, திரு.சேதுமுருகபூபதி, கலாநிதி வெ. வேதாசலம், பேராசிரியர் கு. சேதுராமன் ஆகியோர் இவ்வாய்வரங்கில் கலந்து கொள்ளவுள்ளனர். இவ்வாய்வரங்கு பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தர்மாசிரியர் கருத்தரங்கு

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பரீட்சைத் திணைக்களத்தினால் இந்து தர்மாசிரியர் பரீட்சை நடத்தப்படுகின்றது. இந்துசமய வரலாறு. பன்னிரு திருமுறைகள், சமயஞானிகளும் சமயப்பெரியார்களும், கோயில்களும் நுண்கலைகளும், வேதங்களும் ஆகமங்களும் ஆகிய ஐந்து பாடங்களில் இப்பரீட்சை நடைபெறும், இப்பரீட்சைக்கு வழிகாட்டியாக கண்டி, மாத்தளை, முல்லைத்தீவு, பதுளை, கொழும்பு, காலி, மாத்தறை, மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா, மன்னார், கம்பஹா, இரத்தினபுரி, களுத்துறை, போன்ற 20 மாவட்டங்களில் இக்கருத்தரங்குகள் நடைபெற்றன. இக்கருத்தரங்குகள் மூலம் 1500 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் நன்மை பெற்றனர். தர்மாசிரியர் பரீட்சைகள் தொடர்பாக உசாத்துணை நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன. அவை மேல் வருவனவாகும்.

1. வடமொழி இலக்கிய வரலாறு
2. இந்திய மெய்யியல்
3. சைவசமயம்
4. சமத்துவம் நாடிய சான்றோர்கள்
5. ஆறுமுகநாவலர்
6. தென்னிந்திய சிற்பவடிவங்கள்
7. சைவசித்தாந்தம்

மேற்படி நூல்களுடன் "சமயஞானிகளும் பெரியார்களும்" எனும் நூலும் வழங்கப்படுகின்றது. இந்நூல் திணைக்கள வெளியீடாகும்.

## பண்ணிசைக் கருத்தரங்கு

பண்ணோடு திருமுறைகளைப் பாடும் இசை அறிவினைப் புகட்டும் முகமாக முதற்கட்டமாக ஆசிரியர்களுக்கான பண்ணிசைக் கருத்தரங்குகள் மாவட்டங்கள் தோறும் நடைபெற்றன. அதன் பிரகாரம் அம்பாறை, மட்டக்களப்பு,கண்டி, மாத்தளை, பதுளை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய 15 மாவட்டங்களில் இக்கருத்தரங்குகள் நடைபெற்றன. இதன்மூலம் 1200 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பயனடைந்தனர்.

## இந்து அறநெறிப்பாடசாலை இறுதிநிலைப் பரீட்சைக்கான கருத்தரங்கு

இந்து அறநெறிப்பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், இந்து

இறுதிநிலைப் பரீட்சைக்கு தோற்றும் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்குமான கருத்தரங்குகள் 25 மாவட்டங்களில் நடைபெற்றன. இதன்மூலம் 5000இற்கும் மேற்பட்டோர் பயனடைந்தனர்

## பண்ணிசை வகுப்புக்கள்

அறநெறிப்பாடசாலை மாணவர்களிடையே பஞ்சபுராணம் இசையோடு பாடும் அறிவினை வளரக்கும் முகமாக மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்ப்பாணம், பதுளை, வவுனியா, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் பண்ணிசை வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. இச்செயற்பாட்டிற்கு திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களே பண்ணிசை வகுப்புக்களை நடத்தி வருகின்றனர். இவர்களுக்கான வேதனம் திணைக்களத்தாலேயே வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இந்துசமய பொது அறிவுப்போட்டிப் பரீட்சை

இந்துசமய அறிவினை இந்துசமய அறநெறிப்பாடசாலை மாணவர்களிடையே விருத்தி செய்யும்முகமாக வருடாந்தம் இந்துசமய பொது அறிவுப்போட்டிப் பரீட்சையொன்று திணைக்களத்தால் நடத்தப்படுகின்றது. அதன் அடிப்படையில் இவ்வருடத்திற்கான இந்துசமய பொது அறிவுப் போட்டிப் பரீட்சை 28.06.2008 ஆம் திகதி நாடளாவியரீதியில் நடத்தப்பட்டது. பாலர்பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என்று நான்கு பிரிவுகளில் நடததப்பட்ட இப்பரீட்சை 23 மாவட்டங்களில் 55 பரீட்சை நிலையங்களில் நடைபெற்றது. இப்பரீட்சையில் 38 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் தோற்றினார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இந்து அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான சீருடை, கல்வி உபகரணங்கள் வழங்கல்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நாடளாவிய ரீதியில் இயங்கும் இந்து அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு சீருடை, கல்வி, உபகரணங்கள் ஆசிரியர்களுக்கான சீருடை ஆகியவற்றை வழங்கி வருகின்றது.

அவ்வகையில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 100 அறநெறிப்பாடசாலைகளுக்கு அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகளும், பாடப் புத்தகங்களும், 450 இந்து அறநெறி ஆசியர்களுக்கு சீருடைகளும் வழங்கப்பட்டன. இவை திணைக்களத்தினால் கப்பல் மூலம் யாழ் மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தெரிவு செய்யப்பட்ட அறநெறிப்பாடசாலைகளுக்கு இசைக்கருவிகள் வழங்கப்படுகின்றன. அவ்வகையில் 30 பாடசாலைகளுக்கு சுருதியும் தாளமும் வழங்கப்பட்டன. அத்துடன் இந்து அறநெறிப்பாடசாலைகளின் தளபாடக் கொள்வனவிற்காக நிதிதவியும் வழங்கப்படுகின்றது. அவ்வகையில் இக்காலாண்டில் நிதியுதவி 64 பாடசாலைகளுக்கு 30 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

## இந்து அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு

இந்து அறநெறிப்பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் முகமாக திணைக்களத்தால் வருடம் ஒருமுறை 2000 ரூபா கொடுப்பனவாக வழங்கப்படுகின்றது. அவ்வகையில் இவ்வருடத்திற்கான ஆசிரியர் கொடுப்பனவாக 3716000 வழங்கப்பட்டுள்ளது.

## இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான நூல் விநியோகம்

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் இந்து அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான சைவபோதினி நூல்கள்

அச்சடிக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன. இவை நாடளாவிய ரீதியில் உள்ள அறநெறிப் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. அவற்றுடன் திருக்குறள், பெரியபுராணமும், திருவாதவூரடிகள் புராணமும் ஆகிய நூல்களும் கொள்வனவு செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன 134 அறநெறிப்பாடசாலைகளுக்கு இந்நூல்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

### நாவலர் மணிமண்டபம்

நாவலர் மணிமண்டபத்திலே இந்துசமயம், கலாசாரம் தொடர்பாக பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் பிரகாரம் ஏப்பிரல், மே, யூன், ஆகிய மூன்று மாதங்களில் 23 பண்ணிசை வகுப்புகளும், 23 மிருதங்க வகுப்புகளும், 26 வயலின் வகுப்புகளும் 38 யோகாசன வகுப்புகளும், 08 நோயாளர்களுக்கான யோகாசன வகுப்புகளும் நடைபெற்றன. இவ்யோகாசன வகுப்பில் 200 இற்கும் மேற்பட்ட பயிற்சியாளர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வுகள் யாழ்ப்பாண கலாசார அவிவிருத்தி உத்தியோகத்தர் திரு.த.பிரதீஸ்வரன் மேற்பார்வையில் நடைபெற்றன.

### இந்து கலாசார நிலையம், நாவற்குடா

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்துசமய அபிவிருத்தியில் முக்கிய பங்களிப்பினை இந்து கலாசார நிலையம் மேற்கொண்டுவருகின்றது. இக்கலாசார நிலையத்தில் ஏப்ரல் மாதம் பண்ணிசைக் கருத்தரங்கு நடைபெற்றுள்ளது. இதில் 100 இற்கும் மேற்பட்ட இந்து அறநெறிபாடசாலை ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றுள்ளனர். அத்துடன் இந்நிலையத்தில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசையும் இடம்பெற்றது. 32 இந்து ஆலயங்களுக்கான நிதியுதவிகளும் வழங்கப்பட்டன.

### தமிழ் சிங்களப் புத்தாண்டுக் கொண்டாட்டம்

தமிழ் சிங்களப் புத்தாண்டினைக் திணைக்களம், அமைச்சு, அமைச்சின் கீழ் இயங்கும் சகல திணைக்களங்களும் இணைந்து முறையே 15.04, 16.04, 26.04 ஆகிய திகதிகளில் கொண்டாடின. திணைக்களத்திலும் அமைச்சிலும் நடைபெற்ற புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் சமய அனுட்டானங்களுடன் புத்தாண்டு கொண்டாடப்பட்டது. அமைச்சு. அமைச்சின் கீழ் இயங்கும் திணைக்களங்கள் இணைந்து நடாத்திய புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் பாரம்பரிய விளையாட்டுக்கள், கலாசார நிகழ்வுகள் பல இடம்பெற்றன. இவ்விழாவின் பிரதம அதிதியாக அமைச்சின் செயலாளர் திரு எச்.எம். ஹேரத் அவர்கள் கலந்து கொண்டார். இவ்விழாவில் அமைச்சர், மேலதிக செயலாளர், உதவிச் செயலாளர்கள், உயர் அதிகாரிகள், அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இவ்விழாவில் அலுவலர்களது குடும்ப அங்கத்தவர்களும் கலந்து கொண்டமை இவ்விழாவின் சிறப்பாகும்.

### ஆன்மீகப் பயிற்சிப் பட்டறை

இந்து இளைஞர், யுவதிகள் ஆன்மீகப் பயிற்சிகளைப் பெறுவதற்காகவும் ஆளுமை, தலைமைத்துவப் பண்புகளையும் வளர்த்துக் கொள்வதற்காகவும், பயிற்சிப்- பட்டறைகள் நடைபெற்றுவருகின்றன. அவ்வகையில் இம்முறை ஆன்மீகப் பயிற்சிப்பட்டறை மாத்தளை மாவட்டத்தில் இந்துக்கல்லூரியிலும், பாக்கியம் மகளிர் கல்லூாயிலும் நடைபெற்றது. இப்பயிற்சிப் பட்டறையில் 103 இந்து இளைஞர்களும், 186 இந்து யுவதிகளும் பல்வேறு மாவட்டங்களிலும் இருந்து கலந்து கொண்டனர்.

இந்துசமய, கலாசார திணைக்கள இந்துவிவகார உதவிப்பணிப்பாளர் திரு ய.அநிருத்தனன் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சிப் பட்டறையில் ஆன்மீகச் சிறப்புப் பயிற்சிகளை இந்தியாவிலிருந்து வருகை தந்த சுவாமி ஸ்ரீவேதாந்த ஆனந்தாஜி (ஸ்ரீசாரதா பிரம வித்தியா கேந்திரா) மற்றும் இலங்கை சின்மியா

மிஷன் சுவாமி யாக்ரத்சைத்தன்யர் ஆகியோர் வழங்கினர். இந்துசேவா சங்கத்தினர் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து இப்பயிற்சி வகுப்பினை நடத்தனர். இதற்குப் பொறுப்பாக திரு. ரமேஷ்பாபு அவர்கள் செயற்பட்டார். இப்பயிற்சிப் பட்டறையின் வெற்றிக்கு அப்பயிற்சிப் பட்டறை நடைபெற்ற கல்லூரி அதிபர்கள் பூரண ஒத்துழைப்பை நல்கினர். இப்பயிற்சி வகுப்பின் இறுதிநாள் நிகழ்வு வைபவத்தில் பயிற்சியாளர்களுக்கும், பயிற்றுவிப்பாளர்களுக்கும் சான்றிதழ்களும், பாராட்டுப்பத்திரங்களும் வழங்கப்பட்டன.

இப்பயிற்சிப் பட்டறையின் மூலம் இந்து இளைஞர், யுவதிகள் சமயப் பண்புகள், ஒழுக்க மேம்பாடு, ஆன்மீக முன்னேற்றம் என்பனவற்றினூடாக சிறந்ததோர் பிரஜைகளாக உருவாக்க முடியும் எனக் கருதப்படுகின்றது.

## ஆலயங்களுக்கான நிதியுதவி

இந்துசமய கலாசார திணைக்களம் ஆலயங்களுக்கான நிதியுதவி, நந்திக்கொடி வழங்கல், ஆலயங்களைப் பதிவுசெய்தல், இந்துசமய நிறுவனங்களைப் பதிவு செய்தல், இந்துமத குருமார்களுக்கான அடையாள அட்டை வழங்குதல், இந்துசமய அலுவல்கள் தொடர்பாக வருகை தரும் வெளிநாட்டவர்களுக்கான உள்வருகைக்கான விசா, தங்குமிட விசா, என்பனவற்றிற்கான சிபாரிசுக்கடிதம், ஆலயத்திற்கான சிலைகள், பூசைப்பொருட்கள் என்பனவற்றின் மீதான வரிச்சலகை பெற்றுக் கொளவதற்கான சிபாரிசுக்கடிதம் வழங்கல் போன்ற பல்வேறு பணிகளை இந்து ஆலயப் பிரிவின் மூலம் செயற்படுத்தி வருகின்றது.

## ஆலயங்களுக்கான நிதியுதவி - 2008

### (வடக்கு / கிழக்கு)

| தொ. இல. | மாவட்டம் | ஆலயங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 01. | அம்பாறை | 05 | 450,000.00 |
| 02. | மட்டக்களப்பு | 240 | 21,250,000.00 |
| 03. | யாழ்ப்பாணம் | 18 | 3,300,000.00 |
| 04. | திருகோணமலை | 17 | 2,950,000.00 |
| 05. | வவுனியா | 08 | 1,150,000.00 |
| | | **288** | **29,100,000.00** |

### (வடக்கு / கிழக்கு தவிர்ந்த மாவட்டங்கள்)

| தொ. இல. | மாவட்டம் | ஆலயங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 06. | பதுளை | 13 | 1,600,000.00 |
| 07. | கொழும்பு | 04 | 800,000.00 |
| 08. | அம்பாந்தோட்டை | 01 | 500,000.00 |
| 09. | களுத்துறை | 02 | 175,000.00 |
| 10. | கண்டி | 04 | 368,000.00 |
| 11. | கேகாலை | 01 | 75,000.00 |
| 12. | குருநாகல் | 01 | 248,413.50 |
| 13. | மாத்தளை | 03 | 300,000.00 |
| 14. | மாத்தறை | 01 | 150,000.00 |
| 15. | மொனராகலை | 02 | 250,000.00 |
| 16. | நுவரெலியா | 10 | 925,000.00 |
| 17. | புத்தளம் | 04 | 750,000.00 |
| 18. | இரத்தினபுரி | 04 | 350,000.00 |
| | | **50** | **6,491,413.50** |

## நந்திக்கொடி வழங்கல்

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்துசமய நிறுவனங்கள், இந்து ஆலயங்கள் ஆகியவற்றிற்கு நந்திக் கொடிகளை வழங்கி வருகின்றது. நிறுவனங்கள், ஆலயங்களின் கோரிக்கையின் பிரகாரம் சிறிய நந்திக்கொடி 1,848ம், பெரிய நந்திக்கொடி 464 வழங்கப்பட்டன.

## இந்துசமய நிறுவனங்களைப் பதிவு செய்தல்

இந்துசமய மேம்பாட்டிற்கான செயற்பாட்டத் திட்டங்களுள் ஒன்றாக இந்துசமய நிறுவனங்களைப் பதிவு செய்யும் பணியினை மேற்கொள்கின்றது. அவற்றைப் பதிவு செய்தும், அவற்றின் செயற்பாட்டிற்கான நிதியுதவியை அளித்தும் வருகின்றது. இக்காலாண்டில் 20 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டன.

## மாணிக்கவாசகர் குருபூசை

யாழ் மாவட்ட தீவகப் பகுதியில் சரவணை ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி கோயிலில் 06.07.2008 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு மாணிக்கவாசகர் குருபூசை கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் திரு பொ. அருணகிரிநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இக் குருபூசையில் ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## திருஞானசம்பந்தர் குருபூசை

யாழ் மாவட்ட தீவக செயலகப் பிரிவில் திருஞானசம்பந்தர் குருபூசை 22.05.2008 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 2.00 மணிக்கு நாராந்தனை ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் கொண்டாடப்பட்டது. இக்குருபூசை நிகழ்ச்சிகள் திரு எஸ். உதயபாலன் தலைமையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக திரு கே. காண்டீபன் அவர்கள் கலந்து கொண்டார். இக்குருபூசை நிகழ்வில் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும், சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெற்றன.

திருகோணமலை மாவட்டத்தில் சிவானந்த தபோவனத்தில் 22.05.2008ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கு திருஞானசம்பந்தர் குருபூசை கொண்டாடப்பட்டது. பூசை வழிபாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக திருமதி எஸ்.ஜலதீபன் (பிரதேச செயலாளர்) கலந்து கொண்டார். குருபூசை நிகழ்வுகளில் நடன நிகழ்ச்சிகளும் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன. இக் குருபூசை நிகழ்வுகள் திரு மகேந்திராஜாவின் தலைமையில் நடைபெற்றன

## திருநாவுக்கரசர் குருபூசை

யாழ் மாவட்டம் தென்மராட்சிப் பிரிவில் 30.04.2008ஆம் திகதி திருநாவுக்கரசர் குருபூசை மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இக்குருபூசை நிகழ்வுகள் செல்வி சீ.மகிந்தினி (அபிவிருத்தி உதவியாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்) தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம அதிதியாக திரு கு. சிவபாலன் (அதிபர், வீரசிங்கம் மகாவித்தியாலயம்) அவர்கள் கலந்து கொண்டார். இவ்விழாவில் சிறப்புச் சொற்பொழிவும், அறநெறிப்பாடசாலை மாணவர்களின் பேச்சு, பண்ணிசை, நடனம் போன்ற நிகழ்வுகளும் நடைபெற்றன. குருபூசையை ஒட்டி மாணவர்களிடையே பேச்சு, கட்டுரை, பண்ணிசைப் போட்டிகள் நடாத்தப்பெற்று வெற்றியீட்டிய மாணவர்களுக்குக் குருபூசை விழாவில் பரிசில்கள் வழங்கப்பட்டன.

தீவகப் பிரதேச செயலகப் பிரிவில் இப்பூசை நிகழ்வு புங்குடுதீவு திருநாவுக்கரசர்

அறநெறிப்பாடசாலையில் நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக திரு எஸ். பஞ்சலிங்கம் கலந்து கொண்டார். இக் குருபூசை விழாவில் திரு இ. நவராஜ் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவும் திருநாவுக்கரசு அறநெறிப்-பாடசாலை மாணவர்களின் பேச்சு, நடனம், கோலாட்டம், இசைக்கச்சேரி ஆகிய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

வலிகாமம் செயலகப் பிரிவில் சீரணி நாகம்மாள் அறநெறிப்பாடசாலையில் பி.ப.1.30 மணிக்கு திருநாவுக்கரசர் குருபூசை திரு த. பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. அக்குருபூசை விழாவில் பிரதம விருந்தினராக பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களும், சிறப்பு விருந்தினராக கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களும் கலந்து கொண்டனர். கடவுள் வணக்கம், அறநெறிக் கீதத்துடன் ஆரம்பித்த குருபூசை நிகழச்சியில் சிறப்புச் சொற்பொழிவு, தனிநடனம், குழுநடனம், பண்ணிசைக் கச்சேரி, பேச்சு, கவியரங்கு போன்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## காரைக்கால் அம்மையார் குருபூசை

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரிய ஊறணியில் 30.03.2008ஆம் திகதி காரைக்கால் அம்மையாரின் குருபூசை கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் ஆத்மீக அதிதியாகச் செல்வன் வி.உமாசங்கர்ஐயர், திரு இராமதாஸ் குருக்கள் ஆகியோரும் பிரதம அதிதியாக திருமதி எழில்வாணி பத்மகுமார், திரு கே. அரியநாயகம் ஆகியோரும் சிறப்பு அதிதியாக திரு சீ.யோகேஸ்வரன் ஐயா, திருமதி பாரதிதாசன் அம்மணி, ஆகியோரும் கௌரவ அதிதிகளாக திரு ந. ஜெகதீஸ் திரு ரமணிஐயா ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆலய வழிபாடு, பூசை நிகழ்வுகளுடன் ஆரம்பித்த குருபூசை நிகழ்வில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பேச்சு, நாடகம் ஆகியனவும் இடம்பெற்றன.

## திருவள்ளுவர் குருபூசைவிழா

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கோகுலம் அறநெறிப்-பாடசாலையினர் மற்றும் ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயத்தினர் இணைந்து 23.02.2008 ஆம் திகதி கண்டி மாவட்டத்தில் திருவள்ளுவர் குருபூசையினைக் கொண்டாடினர். ஸ்ரீமதி மாணிக்கராஜா அனந்தலெட்சுமி தலைமையில் நடைபெற்ற இக்குருபூசை நிகழ்வில் பிரதம அதிதியாக திருமதி ப. சரஸ்வதி, திரு. D.M.N.G.G. கருணாரத்ன (பிரதேச செயலாளர், கம்பஹா), திரு P.C.K. விஜயநாயக்க (கிராம சேவையாளர், கலஹா) அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக திரு எஸ். விஸ்வநாதராஜா, திருமதி வி. ஸ்மாலிகா (அதிபர்) திரு மோகன் (ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயம்) ஆகியோரும் கலந்து கொண்டனர். இக்குருபூசை நிகழ்வுகளில் ஆசியுரை, சிறப்புரை, பிரதம, சிறப்பு அதிதிகள் கௌரவிப்பு கலைநிகழ்வுகள், பரிசளிப்பு வழங்கல் ஆகியன இடம்பெற்றன.

## புண்ணிய கிராமத்திட்டம்

கிராமங்கள் ரீதியாக மக்களிடையே ஆன்மீக ஒழுக்க மேம்பாட்டை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு மேதகு சனாதிபதி மஹிந்த இராஜபக்ஷ அவர்களினால் இச்செயற்திட்டம் உருவாக்கப்பட்டது. இச் செயற்திட்டம் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் செயற்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ் மாவட்டம் தீவகப் பிரதேசத்தில் நாராந்தனை தான்தோன்றிஸ்வரர் ஆலயத்தில் 30.05.2008ஆம் திகதி இச்செயலமர்வு நடைபெற்றது. இச்செயலமர்வில் திரு கே. மோகன் (உதவி அரசாங்க அதிபர், நாராந்தனை)

அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக திரு கே. சுந்தரலிங்கம், திருமதி பிறேமவல்லி ஆகியோரும் கலந்து கொண்டனர். மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பித்து வைக்கப்பட்ட இச்செயலமர்வில் தியானப்பயிற்சி, மனித மேம்பாட்டு நடத்தைகள், ஆன்மீகமும் வாழ்வியலும், பெற்றோர் பிள்ளைகள் ஒருவரை ஒருவர் மனோதத்துவ அடிப்படையில் புரிந்து கொள்ளல், கலந்துரையாடல் மற்றும் அறிவுரை மூலம் குடும்பப் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளல், வழிநடத்துதல் போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக விரிவுரைகள் இடம்பெற்றன. இவ்விரிவுரைகளை முறையே திரு ஏ.தங்கமயில், திரு என்.பி. ஸ்ரீந்திரன், திரு கந்தசத்தியதாசன், திரு வி. சிவராஜன், திரு வ. நவராஜ் ஆகியோர் நிகழ்த்தினர். இச் செயலமர்வு திரு எஸ். உதயபாலன் (அபிவிருத்தி உதவியாளர், இந்துகலாசாரம்) அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

தென்மராட்சிப் பிரிவில் மட்டுவில் மகாவித்தியாலயத்தில் 01.05.2008ஆம் திகதி இச்செயலமர்வு செல்வி சீ. மகிந்தினி தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு பிறேமகாந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இச் செயலமர்வு வணக்கச் செயற்பாடுகளுடன் ஆரம்பமாகியது. மரநடுகை வைபவம். நந்திக்கொடியேற்றம், வரவேற்புரை, ஆசியுரை,பிரதம விருந்தினர் உரை, தியானம் பயிற்சி, சமயம் காட்டும் வாழ்க்கைநெறி, ஒழுக்கம் விழுப்பம் தரலால், ஆரோக்கிய வாழ்விற்கான அடிப்படைகள், கலந்துரையாடல் மற்றும் அறிவுரை மூலம் குடும்பப் பிரச்சனை-களைத் தீர்த்தல் ஆகிய தலைப்புக்களின் கீழ் விரிவுரைகள் என்பனவும் இடம்பெற்றன. இவ்விரிவுரைகளை திரு செ. பாலசுப்ரமணியம், திரு ந. முருகையா, திரு க. சண்முகலிங்கம், திரு செ. சுப்பிரமணியம் ஆகியோர் விரிவுரைகளை நடத்தினர்.

திருகோணமலை மாவட்டத்தில் நாகம்மாள் அறநெறிப்பாடசாலை மண்டபத்தில் 31.05.2008ஆம் திகதி புண்ணியகிராமத்திட்ட செயலமர்வு இடம்பெற்றது. திரு மகேந்திரராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சிரமதானம், பூசை வழிபாடு, திருமுறை ஓதல் என்பவற்றுடன் இந்துமதமும் இன்றைய சமுதாயமும் அடியார்களின் ஆன்மீக வழிகாட்டல், சமுதாய விழுமியங்களைக் காப்பதில் விரதங்களினதும், விழாக்களினதும் பங்களிப்பு ஆகிய விரிவுரைகளும் இச்செயலமர்வில் இடம் பெற்றன.

வலிகாமம் பிரதேச செயலகப் பிரிவில் குப்பிளான் கன்னிமார் கௌரி அம்பாள் ஆலயத்தில் புண்ணியகிராம செயலமர்வு 06.03.2008ஆம் திகதி நடைபெற்றது. இச்செயலமர்வு திரு த. பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இச்செயலமர்வில் ஆ.சி. நடராசா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இச்செயலமர்வு ஆலய பூசையுடன் ஆரம்பமாகியது. இதில் கோமாதபூசை, வரவேற்புரை, ஆசியுரை, முதியோரைக் கனம் பண்ணுதல்., வாழ்த்துதல், தலைமையுரை, பிரதமவிருந்தினர் உரை என்பவற்றுடன் உள நெருக்கடிக்கான சுயமுகாமைத்துவம். இந்துசமயத்தில் அறநெறி, யோகாசனப்பயிற்சி ஆகியனவும் இடம்பெற்றன.

திருகோணமலை மாவட்டத்தில் அன்புவழிபுரம் கிராமத்தில் தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயத்தில் 30.03.2008ஆம் திகதி இச்செயலமர்வு நடைபெற்றது. இச்-செயலமர்விற்கு பிரம்மஸ்ரீ சுப்ரமணியஐயா அவர்கள் தலைமை தாங்கினார். பிரதம விருந்தினராக திருமதி ச. ஜலதீபம் (பிரதேச செயலாளர், திருகோணமலை) அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கௌரி முகுந்தன்,திரு எஸ்.மகேந்திரராசா, திரு செ. சிவபாதசுந்தரம், திரு கு. நனிகாகாந்தன், பிரம்மஸ்ரீ ரவிச்சந்திரக்குருக்கள் ஆகியோர்களும் கலந்து

கொண்டனர். இச்செயலமர்வில் திருமுறைஓதல், சிறப்பு, பிரதம விருந்தினர் உரைகள், சைவ சித்தாந்தம் கூறும் அறநெறி வாழ்க்கை, பெரிய புராணத்தில் நாயன்மார்களின் சமூகப்பணி. இந்துசமய மேம்பாட்டில் விரதங்களினதும் விழாக்களினதும் பங்களிப்பு ஆகிய விரிவுரைகளும் இடம் பெற்றன. இச் செயலமர்வில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. அத்துடன் இந்துசமய போட்டிப் பரிசளிப்பு வைபவமம் இச் செயலமர்வில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்டத்தில் சேனைக்குடியிருப்புக் கிராமத்தில் புண்ணிய கிராம செயற்திட்டம் 1.03.2008ஆம் திகதி கணேஷ் மகா வித்தியாலய பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்றது. இச் செயலமர்வு கலாசார உத்தியோத்தர் திரு பத்மகுமார் தலைமையில் நடைபெற்றது. இச்செயலமர்வில் திரு வேதநாயகம் ஜெகதீசன், திரு எம். கோபாலரத்தினம் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

இச் செயலமர்வில் சிதைந்துபோன சமசங்களைப் பேணிபாதுகாப்போம். எனது குரவர்களைக் கனம் பண்ணுவோம், வாழுங்கலைப் பயிற்சியும் தியானமும் ஆகிய விரிவுரைகள் இடம் பெற்றன. இச்செயலமர்வில் நடன நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

குருநாகல் மாவட்டத்தில் பொல்காவெல கிராமத்தில் 27.03.2008ஆம் திகதி புண்ணிய கிராமத் திட்ட செயலமர்வு நடைபெற்றது. இவ் வைபவத்தில் சிறப்பு அதிதியாக இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு ய.அநிருத்தனன் கலந்து கொண்டார்.

இச் செயலமர்வில் பூசை வழிபாடுகளும் ஆன்மீக விரிவுரைகளும் இடம்பெற்றன.

---

## கோயில் தரிசனத்துக்கு ஈரத்துணி உடுப்பதனால் என்ன பயன்?

குளித்து ஈரத்துணி உடுத்து கோயில் தரிசனம் செய்யும்போது பூரண பரிசுத்தம் மட்டுமே அதிலிருந்து எதிர்பார்க்கின்றோம் என்று கருதி வருகின்றோம். நம் நாட்டின் பல கோயில்களிலும், குளத்திலோ, நதியிலோ குளித்து, ஈரத்துணியுடன் பக்தர்கள் கோயிலை தரிசனம் செய்வதும், கோயில் வலம் வருவதும் ஒரு காலைக் காட்சி.

இவ்வாறு செய்வதனால் வயிற்றுக்கு தீங்கு என்ற நம்பிக்கை பலர் கொண்டுள்ளனர். ஆனால் ஈரத்துணி உடுப்பதனால் தீமையல்ல நன்மையே உண்டாகின்றது. நாம் உண்ணும் உணவு மற்றும் குடிக்கும் நீரிலிருந்து ஏராளம் நோயணுக்கள் மற்றும் விஷப்பொருட்கள் உட்செல்கின்றன என்று பழைய காலத்திலிருந்தே நாம் அறிந்துள்ளோம். இவ்வகை விஷப்பொருட்களால் உணவு ஜீரணம் பாதிக்கப்படுகின்றது. சரியான ஜீரணம் நடக்காமலிருப்பதனால் மலக்கழிவு சரியாக நடப்பதில்லை. இதனால் மலம் சரியாகக் கழியவில்லையானால் வயிற்றுக்குள் வெப்பம் ஏற்படும். இதனால் பல நோய்கள் வரலாம். ஈரத்துணி உடுத்து கோயில் தரிசனம் செய்வதன் காரணம் வயிற்றின் வெப்பத்தை குறைப்பதற்காகவே. இதை இன்றைய நவீன மருத்துவத்துறையே ஒரு சிகிச்சையாக ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

# இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சைவசித்தாந்த வகுப்பு 2008

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஒழுங்கு செய்த சைவசித்தாந்த வகுப்பு கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் 2008 மே23ஆம் திகதி தொடக்கம் யூன் 06ஆம் திகதி வரை பதினைந்து நாட்கள் நடைபெற்றது. தினமும் காலை 8.30 தொடக்கம் 12.30. வரையும் மாலை 3.30 தொடக்கம் 6.30 வரையுமாக 7மணிநேரம் வகுப்பு நடைபெற்றது.

சைவசித்தாந்த வகுப்பை திருவாவடுதுறை ஆதீனச் சைவசித்தாந்தப் பேராசிரியர், சைவசித்தாந்த வித்தியாநிதி சு.சண்முகவேல் அவர்கள் நடத்தினார்கள். இந்த வகுப்பில் பல்கலைக்கழக விரிவுரையாளார்கள், பண்டிதர்கள், சைவப்புலவர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், பணிப்பாளர்களாயிருந்து ஓய்வுபெற்ற அறிஞர்கள், ஆசிரியர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், பல் சைவ நிறுவனங்களின் நிர்வாகிகள், சமயத் தொண்டர்கள், சைவசித்தாந்த ஆர்வலர்கள் எனப் பல திறப்பட்டோர் பங்குபற்றினர்.

இளைஞர் முதல் எண்பத்தைந்து வயதைக் கடந்த முதியோர் வரை தினமும் குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து முழுநேரமும் வகுப்பில் இருந்து தினமும் ஏழுமணி நேரம் குறிப்பெடுத்துப் பயன் பெற்றனர் என்றால் கற்பித்த ஆசிரியரின் திறமைக்கும், வகுப்பின் பயன்பாட்டுக்கும் வேறு சான்றும் வேண்டுமோ.

பலதரப்பட்டவர்கள் வகுப்பில் கற்றதால் சைவசித்தாந்த அடிப்படைக் கோட்பாடுகளை ஒவ்வொன்றாக எடுத்து விளக்கும் வகையில் வகுப்புக்களை நடத்தினார். சித்தாந்த சாத்திரங்கள், திருமுறைகள், புராணங்கள் என்பவற்றைச் சான்றாகக் கொண்டு மிகச்சுவைபட வள்ளுவர் குறிப்பிட்டது போலக்

"கேட்டார்ப்பிணிக்கும் தகைய வாய்க் கேளாரும் வேட்டு மொழிவதாம் சொல்"

என்பதற்கு இலக்கியமாக அவரது கற்பித்தல் அமைந்திருந்தது.

ஒவ்வொரு விடயத்தையும் எடுத்து விளக்கும் போது சாத்திர தோத்திரச் சான்றுகள் மட்டுமன்றி விஞ்ஞானபூர்வமான விளக்கங்களையும் வேதஉபநிடத ஆகம விளக்கங்களையும் சொல்லும் விதம் வியக்கக் கூடியதாயிருந்தது. அத்துடன் தமிழிலும், சமஸ்கிருதத்திலும், ஆங்கிலத்திலும் சமாந்தரமான விளக்கங்கள் தந்தமையும் மூன்று மொழிகளிலும் இலக்கண முடிவுகள் கூறி எடுத்த பொருளைத் திட்ப நுட்ப ஒட்பமாக நிலை நாட்டியமை மிகச்சிறப்பாக இருந்தது.

இந்திய நாட்டுச் சமய தத்துவங்கள் ஒவ்வொன்றையும் மட்டுமன்றி மேல்நாட்டுத் தத்துவ ஞானிகளின் பல்வேறுபட்ட தத்துவங்களையும் எடுத்துக்காட்டிச் சைவசித்தாந்தத்தின் நுட்பத்தையும், உயர்வையும் நிறுவும் முறை மிகச் சிறப்பாயிருந்தது.

ஆசிரியர் உத்தியோக முறையில் தொலைத்தொடர்பு எஞ்சினியராக இருந்து ஓய்வு பெற்றவர். ஆனால் கட்டடத்துறை பௌதிக, இரசாயன, உயிரியல் விஞ்ஞானம் உலகச் சரித்திரம் பற்றிய ஆழந்த அகன்ற நுண்ணிய அறிவுடன் சைவசித்தாந்தத்துக்கு ஆங்காங்கிருந்த சான்று காட்டிக் கற்பித்தமை அபூர்வமாயிருந்தது.

இசையுடன் பாடியும், பொருள் செறிந்த நகைச்சுவையுடனும் வகுப்பை நடத்தியமையால் அலுப்புச் சோர்வு என்பதை அறியாமலே தினமும் முதியவர்கள் கூட எழுமணி நேரம் இருந்து கற்றனர்.

சைவசித்தாந்தமென்றால் விளங்குவதற்குக் கடினமானது, நயந்து கற்க முடியாதது, சைவர்கள் என்று சொல்லப்படும் ஒரு குறுகிய கூட்டத்தினர்களால் பேசப்படுவது என்று எண்ணியிருந்தோரெல்லாம் மூக்கின்மேல் விரல் வைத்து வியக்கும் வண்ணம் கற்பித்தார்.

ஈழத்தில் வாழ்ந்த, இன்று வாழ்கின்ற சைவசித்தாந்த நல்லறிஞர்களுடைய நூல்களை ஆங்காங்கு எடுத்துக்காட்டி அவர்களின் அருமை பெருமைகளைப் பாராட்டியமை நம்மவர்களை நாமே அறிந்திருந்ததிலும் பார்க்கப் பன்மடங்கு அறிந்து போற்றுகிறாரே என எண்ணி வியக்க வைத்தது.

கலந்துரையாடலின் போது கேட்கும் வினாக்களுக்கெல்லாம் வினா கேட்டு முடியுமுன்னரே பதில் தருவார். சிலருடைய விதண்டா வாதங்களுக்குக் கூட முகம் சுழிக்காமல் அன்பான பதில் தருவார். முழுநேரமும் சாத்வீகக் குணம் மேலோங்கப் புன்முறுவலுடன் கற்பித்த ஆசானிடம் கற்கக் கிடைத்தமையைப் பெரும் பேறாகக் கருதும் அதேவேளை அடுத்த வருட வகுப்பு எப்போ வரும் என ஆவலுடன் காத்திருக்கின்றனர். பொருத்தமான ஆசானைத் தேடிக் கொணர்ந்து சைவசித்தாந்தக் கல்விக்கு மறுமலர்ச்சியை ஏற்படுத்தித் தந்த இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

**சைவப்புலவர் சு.செல்லத்துரை**

---

## தலைமூழ்கிக் குளித்தபின் உடலில் எண்ணை பூசக்கூடாது என்பது ஏன்?

பண்டைய பாரதத்தின் ஆசாரங்களையும் சட்டங்களையும் பற்றின மனுஸ்மிருதியில் தலைமூழ்கிக் குளித்தபின் உடலின் எந்த பாகத்திலும் எண்ணை தேய்த்தலாகாது என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

உடல் முழுவதும் எண்ணை தேய்த்து அழுத்தித் தடவும் போது நாம் உணராமலே 'மஸாஜிங்' நடக்கின்றது. இது இரத்த ஓட்டத்தை துரிதப்படுத்துகின்றது. உடலின் எந்த பாகமும் நோய்வாய்ப்படுவது அப்பாகத்தில் இரத்த ஓட்டம் குறையும் போது தான் என்பது பண்டைக் காலத்திலேயே புரிந்து கொண்டிருந்தனர். மேலும் உடலில் எண்ணை தேய்த்த பின் வியர்ப்பது உடல் செயல்பாடுகளைப் பாதிக்கும் என்பதும் கண்டறிந்துள்ளனர்.


சருமத்திலுள்ள வியர்வை துவாரங்கள் எண்ணை தேய்க்கும் போது அடைந்து போவதால் உடலிலுள்ள அசுத்தங்கள் சரியானபடி வெளியாக முடியாமல் போகும்.

# இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் கடந்த 06.06.2008 இடம்பெற்ற மூன்று நூல்களின் வெளியீட்டு விழா நிகழ்வுகள்






இராமகிருஷ்ணமிஷன் சுவாமி சருபருபானந்தா அவர்கள் ஆசியுரையையும், திணைக்களப் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் ஆரம்ப உரையையும் நிகழ்த்துகின்றனர்.






மதவிவகார ஒழுக்க மேம்பாட்டு அமைச்சின் செயலாளர். திரு. எச்என்.ஹேரத் அவர்கள் இராமகிருஷ்ணமிஷன் சுவாமியிடம் நூல்களின் முதல் பிரதியினை கையளித்து உரையாற்றுகின்றார்.







பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் அமைச்சின் செயலாளர் அவர்களுக்கு பொன்னாடை போர்த்துவதையும், பதிலுக்கு செயலாளர் பேராசிரியருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவம் செய்கின்றார்.






கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. சி. தில்லைநடராசா தமிழகப் பேராசிரியர் சண்முகவேல் இருவருக்கும் மதவிவகார ஒழுக்க மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் நூல் பிரதிகளை வழங்குகின்றார்.

## இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் கடந்த மே மாதம் 23 தொடங்கி யூன் மாதம் 06ம் திகதி வரை நடைபெற்ற சைவசித்தாந்த வகுப்பின் நிகழ்வுகள்





கலாபூஷணம் சைவப்புலவர் சு. செல்லத்துரை திருமுறை மன்ற உறுப்பினர் ஆகியோருக்கு சுவாமி சருபருபானந்தா, திணைக்களப் பணிப்பாளர் ஆகியோர் சான்றிதழ்களை வழங்கி வைக்கின்றார்.



சைவசித்தாந்த வகுப்பு இறுதிநாள் நிகழ்வு, மூன்று நூல்களின் வெளியீடு இவைகளில் கலந்து கொண்டோர்.





மட்டக்களப்பு பெரிய ஊறணி இந்து கலாசார மன்ற அறநெறிப்பாடசாலை, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து நடத்திய காரைக்கால் அம்மையார் குருபூசை






வவுனியாவில் இடம்பெற்ற திருநாவுக்கரசர் குருபூசை தினம்

புண்ணிய கிராமத்திட்ட எழுச்சிக் கருத்தரங்கின் நிகழ்வுகள் - 30.03.2008





## புண்ணிய கிராமத்திட்ட எழுச்சிக் கருத்தரங்கின் நிகழ்வுகள் - 30.03.2008





















இளைஞர் எழுச்சிக் கருத்தரங்கின் நிகழ்வுகள்







**இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அண்மையில் ஆலயங்கள், அறநெறிப் பாடசாலைகள் என்பவைகளுக்கு நிதியுதவியையும், உபகரணங்கள், சீருடைகள் என்பவற்றையும் வழங்கிய நிகழ்வுகள்**





மதவிவகார அமைச்சர் கௌரவ. பண்டு பண்டாரநாயக்க அவர்கள் கலந்துகொண்டு காசோலைகளை வழங்கி உரையாற்றுகின்றார்.



இவ்வைபவத்தில் உதவிப்பணிப்பாளர் (நிர்வாகம்) திரு. அநிருத்தனன் வரவேற்புரை நிகழ்த்துகின்றார்.







இவ்வைபவத்தில் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன், கணக்காளர் திரு. கோ. காண்டிபன், உதவிப்பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி, ஆகியோர் உரை நிகழ்த்துகின்றனர்.



கௌரவ மதவிவகார அமைச்சர் காசோலைகள், சீருடைகள், உபகரணங்களை வழங்குகின்றார்.







ஆலயங்களிலிருந்தும், நிறுவனங்களிலிருந்தும், அறநெறிப் பாடசர்லைகளிலிருந்தும் நிதியுதவி பெற வருகை தந்தோர்.

# பிள்ளையார் பெருமை

நம் நாட்டிலும், இந்து மதத்திலும் சிறப்பாகக் கொண்டாடப்படும் தெய்வங்களுள் பிள்ளையார் ஒருவர். பிள்ளையார் கோயில் இல்லாத ஊர் ஒன்றுகூட, நம் நாட்டில் இருத்தல் அரிது. பட்டிதொட்டிகளாகிய எல்லா ஊர்களிலும், மூலை முடுக்குகளிலும், சாலை சந்திகளிலும், ஆற்றங்கரை குளக்கரைகளிலும், ஆலமரத்தடியிலும், அரசமரத்தடியிலும், பிள்ளையார் அங்கிங்கெனாதபடி எங்கும் எழுந்தருளி விளங்குதல் காணலாம். அத்துணை அளவுக்கு மக்களால் பெரிதும் விரும்பித் தொழப் பெறுபவரும், எங்கும் எவர்க்கும் எளிதில் வந்தருளும் இயல்பினருமாகத் திகழ்பவர் பிள்ளையார்.

அமெரிக்க நாட்டில் இந்து மதத்தினைச் சிறப்பாகப் பரப்பியருளிய விவேகானந்த சுவாமிகள், அங்கு ஒரு பிள்ளையார் கோவிலைக் கட்டுவித்து, அவரை அனைவரும் தொழுது மகிழுமாறு செய்தருளினார். பல பிரிவுகளையும், கொள்கைகளையும் தன்னகத்தே கொண்ட இந்துமதத்தினர் அனைவருக்குமே பிள்ளையார் பொதுமையானவர். எல்லாரும் விரும்பிப் போற்றத்தக்கவர்.

பிள்ளையார் காட்சிக்கு எளியவர்; கருணைக்கு இனியவர்; தன்னை வணங்கும் அடியவர்களுக்கு எளிதாகவும், விரைவாகவும் அருள் வழங்கும் இயல்பினர். சைவரும், வைணவரும் சாக்தரும், சமணரும், பௌத்தரும் ஆகிய பல சமயத்தவரும் பிள்ளையாரைப் போற்றுகின்றனர்.

பிள்ளையார் வழிபாடு, நம் நாட்டில் மட்டுமேயன்றி இலங்கை, பர்மா, சயாம், ஜாவா, பாலி, போர்லியோ, சுமத்ரா, சம்பா, கம்போடியா, இந்தோசைனா, சைனா, நேபால், திபேத், துருக்கிஸ்தானம், ஆப்கானிஸ்தானம், கோடான், மங்கோலியா, ஜப்பான், மெக்சிகோ, பெரு, எகிப்து, கிரேக்கம், இத்தாலியம் முதலிய பற்பல நாடுகளிலும், பல நூற்றாண்டுகளாக வெவ்வேறு பெயர்களிலும், நிலைகளிலும் பரவி நிலவியமைக்குச் சான்றுகள் காணப்படுகின்றன. ஒருசில ஆராய்ச்சியாளர்கள், "நரசிம்மவர்மன் (**கி**.பி. 630-668) **என்னும்** பல்லவ மன்னன், சாளுக்கிய அரசர்களைப் போரில் தோற்கடித்து வாதாபி என்னும் நகரத்திலிருந்து பிள்ளையாரைக் கொண்டு வந்தான்; அதற்குப் பின்னர்தான், பிள்ளையார் வழிபாடு தமிழகத்தில் பரவுவதாயிற்று" என்று கூறிவருகின்றனர்.

கி.பி ஆறாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட சங்க கால இலக்கியங்களில், பிள்ளையாரைப் பற்றிய குறிப்பு ஏதும் காணப்படவில்லை என்பதால், அவர்கள் இங்ஙனம் கூறுகின்றனர். சங்ககால இலக்கியங்களில் குறிப்பு ஏதும் காணப்படாமை ஒன்றே பற்றி, அக்காலத்தில் பிள்ளையார் வழிபாடு கிடையாது என்று கூறுவது பொருந்தாது.

இற்றைக்குச் சுமார் மூவாயிரம் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் மக்களின் பழம்பெரும் நூலாகிய தொல்காப்பியத்தில், பிள்ளையார் வழிபாடு பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. இக்காலத்தில் சித்திரையை முதல் மாதமாக் கொண்டு ஓர் ஆண்டு கணிக்கப் பெறுகின்றது. இங்ஙனம் இன்றி மிகப் பழங்காலத்தில் ஆவணியை முதல் மாதமாகக் கொண்டு ஓராண்டின் மாதங்களை கணித்தல், பண்டை அறிஞர்களின் வழக்கமாக இருந்து வந்தது. சூரியனுக்குரிய ஓரை (ராசி), சிங்க ஓரை (சிம்ம ராசி) என்றும், அதற்குரிய மாதம் ஆவணி மாதமாதலின், ஆவணி தொடங்கியே மாதங்களை எண்ணுதல் முறையென்றும்

பண்டையோர்கள் கொண்டிருந்தனர். இவ்வுண்மை 'காரும் மாலையும் முல்லை' எனவரும் தொல்காப்பியச் சூத்திரத்தில், நச்சினார்க்கினியர் என்னும் சிறந்த உரையாசிரியரால் குறிப்பிடப்பெற்றுள்ளது.

இவ்வாறு ஆவணியை முதல் மாதமாகக் கொண்டு கணிக்கும் முறை, சுமார் ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வழக்கத்தில் இருந்திருத்தல் வேண்டும். என வானநூல் ஆராய்ச்சி வல்லார் (Astronomers) கூறுகின்றனர். ஆவணி மாதம், ஆண்டின் முதல் மாதமாகக் கருதிக் கணிக்கப்பெற்றுவந்த அப்பண்டைக்காலம் முதலே பிள்ளையார் வழிபாடும் தோன்றி நிலவி வந்திருத்தல் வேண்டும். பிள்ளையார் சதுர்த்தி விழா, ஆவணி மாதத்தில் இன்றும் கொண்டாடப்பட்டு வருவதனால், இவ்வுண்மை அறியப்படும். இதனால் பிள்ளையார் வழிபாட்டின் பழமையும் பெருமையும் யாவர்க்கும் இனிது விளங்கும்.

பிள்ளையார் வழிபாடு பற்றிய ஒருவகைக் குறிப்பு, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்குறளிலும் காணப்படுவதாகத் தோன்றுகிறது. திருவள்ளுவர் தம் திருக்குறளை எல்லாச் சமயத்தாருக்கும் பொதுவாக இயற்றி இருப்பதனால், மற்றைய நம் சமய ஆசிரியர்களைப் போலப் பிள்ளையாரை முதற்கண் குறிப்பிட்டுத் துதிக்கவில்லையாயினும், அவர் தமது முதற்குறளில் 'ஆதிபகவன்' என்றது பிள்ளையாரையும் கூடக் குறிப்பதாகும் எனலாம். ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன் அதன் தொடக்கத்தில் முதலில் முன்னர்த் தொழப்பெறுபவர் பிள்ளையார். 'முன்னனே யானை முகத்தவனே' என்று இராமலிங்க வள்ளலாரும் பாடியிருத்தல் காணலாம். திருவள்ளுவர் 'ஆதிபகவன்' என்றது பிள்ளையாரையும் கூடக் குறிப்பதாகக் கொள்ளலாம். அப்படியானால், பிள்ளையார் வழிபாடு, பண்டைக்காலம் முதலே இருந்து வந்தமை தெளியப்படும்.

பிள்ளையார் பெருமையை நம்பியாண்டார் நம்பிகள், மெய்கண்டதேவர், ஔவைப் பிராட்டியார் முதலிய அருளாளர்களின் வரலாறுகள், நமக்குச் செவ்விதின் உணர்த்தும். ஆயினும் சிவமகாபுராணம், பிரமவைவர்த்தபுராணம், மச்ச புராணம் முதலியனவற்றில், பிள்ளையாரைப் பற்றிய இழிந்த பல கதைகள் இடம்-பெற்றுவிட்டன. அக்கதைகள் பிற்காலத்தில் எவராலோ இடைச்செருகல்களாகப் புகுத்தப்பட்டி-ருக்கலாம். பிள்ளையாருக்கு யானை முகம் அமைய நேர்ந்தமைக்கு உரிய காரணத்தை விளக்க நினைத்து, அப்புல்லிய இழிந்த பொருந்தாக் கதைகள் புனையப்பட்டுள்ளன. பிள்ளையாருக்கு யானை முகம் அமைந்தமை அரிய பெரிய தத்துவ நுட்பக்கருத்தை உட்கொண்டதாகும்.

பண்டைய நம் பாரத நாட்டுப் பழம்பெரும் தவமுனிவர்கள், ஓசை ஒலிகளுக்கு எல்லாம் மூல முதலாக விளங்குவது 'பிரணவம்' என்னும் ஓங்காரம் என்பதனை, அருளாலும், அநுபூதியினாலும் கண்டறிந்து உணர்ந்தனர். ஓங்காரம் என்னும் பிரணவம் அரிய பெரிய மந்திரம் என்றும், அதன் உண்மைப் பொருள்கள் இன்னின்னவை என்றும், அம்முனிவர்கள் செம்மைபெறத் தெளிந்துணர்ந்திருந்தனர்.

தம் உள்ளத்தே தாம் கண்டுணர்ந்த ஓங்கார மந்திரத்தின் உருவத்தினை, ஒரு வகையில், நினைப்பிக்கும் அடையாளமாக நீண்ட துதிக்கையை உடைய யானையின் முகத்தின்கண், அவர்கள் புலங்கொளக் கண்டு வியந்து மகிழ்ந்தனர். இதுவே பிள்ளையார், யானை முகம் பெற்றுத் திகழ்தற்குரிய சிறந்த காரணமாகும்.

யானை எல்லா உயிர்களிலும் பெரியது. அது போலவே பிள்ளையாரும் எல்லாத் தேவர்களுக்கும் பெரியவர். யானை பேராற்றல் வாய்ந்தது. அதுபோலவே பிள்ளையாரும் பேராற்றல் மிக்கவர். யானை பகைவரைச் சீறி

அழிக்கும். பிள்ளையாரும் கொடியவர்களைத் தண்டித்து மறக்கருணை புரிவார். அடியவர்களுக்கு அவர் வேண்டுவனவெல்லாம் அளித்து எல்லா நலன்களையும் விளைவிப்பார். இத்தகைய பல ஒப்புமைகள் இருத்தலால், பிள்ளையாரை யானை முகம் உடையவராக மட்டும் இல்லாமல், யானையாகவே கொண்டு புகழ்ந்துரைத்து அருளாளர்கள் போற்றி மகிழ்வர்.

பிள்ளையாரின் திருவுருவம், பற்பல நுண்ணிய அற்புதத் தத்துவ நுட்பக் கருத்துக்களை உட்கொண்டது. அவற்றுள் சிலவற்றை மட்டும், ஈண்டுக் குறிப்பிடுதல் அமையும் :

01. பிள்ளையாரின் இரு திருவடிகளும் முறையே, அவர்தம் ஞானம், கிரியை என்னும் சக்திகளை உணர்த்தும்.

02. மிகப்பெரிய யானையின் முகமுள்ள பிள்ளையார், மிகச்சிறிய பெருச்சாளியை வாகனமாகக் கொண்டிருத்தல், அவரே எல்லாவற்றிற்கும் ஆதாரமாகவும், ஆதேயமாகவும் (தாங்குபவராகவும், தாங்கப்படுபவராகவும்) உள்ளார் என்பதனைக் காட்டும். பெருச்சாளி இருளை விரும்பும். கீழறுத்துச் சென்று கேடு விளைவிக்கும். ஆதலின் ஆணவமலத்தைக் குறிக்கும். எனவே பெருச்சாளியைப் பிள்ளையார் தமது காற்கீழ்க் கொண்டிருத்தல், அவர் அறியாமையையும் செருக்கையும் அடக்கி ஆட்கொள்பவர் என்பதனைப் புலப்படுத்தும்.

03. இளமைப் பருவம் மிக்க பிள்ளைகளே, தம் கால்களால் 'குறுகுறு நடந்து சிறு கை நீட்டி' விளையாடுவர். ஆதலின் பிள்ளையாரின் குறுந்தாள்கள், அவர்தம் என்றும் மாறாத நித்திய இளமைத் தன்மையைக் காட்டும்.

04. பிள்ளையார் தம் தந்தையாகிய சிவ பெருமானைப்போல, மூன்று கண்களை உடையவர். அவைகள் முறையே சூரியன், சந்திரன், அக்னி என்பவர்களைச் சுட்டும்.

05. பிள்ளையாரின் நீண்ட துதிக்கை, வேண்டுவோர் வேண்டுவன எல்லாம் தருகின்ற அவர்தம் வள்ளன்மையை உணர்த்தும். 'தரு கைநீண்ட தயரதன்' என்னும் கம்பர் பாடலால் இக்கருத்தையுணரலாம். நீண்ட கையினர் (ஆஜானுபாகு) ஆக இருத்தல், ஆண்டகைமைக்குரிய அரிய இலக்கணம் ஆகும்.

06. பிள்ளையாரின் யானை முகம், அவரே பிரணவப் பொருளாதலை அறிவிக்கும் 'பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்' என்பது வெற்றி வேற்கை.

07. பிள்ளையாரின் ஐந்து கைகளும், அவர் புரியும் ஐந்தொழில்களை அறிவிக்கும். கும்பம் ஏந்திய கை, படைத்தல்; மோதகம் தாங்கிய கை காத்தல்; அங்குசம் உள்ள கை, அழித்தல்; பாசம் பற்றிய கை, மறைத்தல்; தந்தம் வைத்த கை, அருளல் ஆகிய தொழில்களைப் புரிகின்றன.

இனி இவைகளே திருவைந்தெழுத்து மந்திர நிலையினை உணர்த்துவதாகவும், பெரியோர்கள் கூறுவர். அங்குசம் தாங்கிய வலக்கை, சிகரம். பாசம் பற்றிய இடக்கை, வகரம். தந்தம் ஏந்திய வலக்கை, யருசம். மோதகம் உள்ள இடக்கை நகரம். துதிக்கை, மகரம். இங்ஙனம் சிவயநம என்னும் திருவைந்தெழுந்து மந்திரத்தின் நிலையைப் பிள்ளையாரின் ஐந்து திருக்கைகள் உணர்த்துதல் நாம் ஊன்றியுணரத்தக்கது.

08. பிள்ளையார் ஆகிய கடவுள் மனிதர், தேவர், விலங்கு முதலிய அனைத்துயிர்களுக்கும் அருள்புரிவர். ஆதலின் அவர்தம் திருவுருவில் இடைக்குக்கீழ் மனிதக்கூறும், இடைக்கு மேல் கழுத்து வரை தேவக்கூறும், அதற்கும் மேல் விலங்குக்கூறும் அமைந்து காணப்படுகின்றன. அறிவிலும், பண்பிலும் உயர்ந்தால் விலங்குகளும் உயர்வாக மதிக்கப்பெறும். அவற்றில் தாழ்ந்தால் தேவரும், மனிதரும்கூட இழிந்தவர்களாக இகழப்படுவர் என்னும் தத்துவநுட்பமும், பிள்ளையாரின் திருவுருவில் விலங்கின் கூறாகிய யானை முகம், ஏனைய உறுப்புகளுக்கு மேலே அமைந்திருப்பதனால் அறியப்பெறும்.

09. கடவுள் ஆண், பெண், அலி என்னும் நிலைகளைக் கடந்தவர். இதனைப் பிள்ளையாரின் ஒற்றைக் கொம்புள்ள யானை முகம் உணர்த்துகின்றது. ஆண் என்றால் இருகொம்புகள் வேண்டும். பெண் என்றால் கொம்பு இல்லாமல் இருத்தல் வேண்டும். அலி என்றால் மதம் இல்லாமல் இருத்தல் வேண்டும். பிள்ளையார் ஒருவகையில் ஆண், பெண், அலி என்னும் நிலையினராகவும், அவையல்லாதவராகவும் விளங்குகின்றார்.

10. பிள்ளையாரின் பேழை வயிறு, அவர்தம் வரம்பிலின்பம், வரம்பிலாற்றல், சர்வவியாபகத்துவம் ஆகியவற்றைக் குறிக்கும். எல்லா உலகங்களையும், உயிர்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டு, அருளுடன் பாதுகாத்து வருதலைப் பிள்ளையாரின் பெருவயிறு புலப்படுத்துகின்றது.

11. பிள்ளையாரின் விரிந்து நீண்ட பெருங்காதுகள், தன் அடியவர்கள் எங்கிருந்து, எப்பொழுது நினைத்துத் தம்முடைய குறைகளை முறையிட்டுக் கொண்டாலும், அவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டாலும், அவற்றையெல்லாம் ஏற்றுக்கேட்டுப் பரிவுடன் அருள்புரிந்து நலம் புரியும் இயல்பினர் என்பதனை உணர்த்துகின்றன.

12. யானையாக விளங்கும் பிள்ளையாரே, யானையை அடக்கியாளும் கருவிகளாகிய அங்குசம், பாசம் என்னும் இரு கருவிகளையும் தம்முடைய இரு கைகளில் வைத்துக்கொண்டிருத்தல். பிள்ளையாரே எல்லோரின் எல்லோருக்கும் தலைவர்: அவருக்குத் தலைவர் எவரும் இலர் என்பதனை விளக்கும். மேலும், உயிர்களையெல்லாம் பற்றி அலைக்கழித்து வருகின்ற, ஆணவ மலம் என்னும் கொடிய மதயானையை அடக்கியழித்து, உயிர்களைக் காக்க வல்லவர் பிள்ளையாரே என்னும் உண்மையையும், அவர் ஏந்தியுள்ள அங்குச பாசங்கள் குறிக்கின்றன.

**(அருள்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் எழுதிய 'பிள்ளையார் பெருமை' நூல் வெளியீட்டு விழாவில் தலைமை ஏற்று ஆற்றிய உரை).**

---

## பன்னிரு பெயர் கொண்ட சீர்காழி

பிரம்மபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய் சிரபுரம்,
புறவம், சண்பை, காழி, கொச்சைவயம், கழுமலம்.

- சிவனருட் செல்வர்-

# அஷ்டப் பிரபந்தங்களில் சிவ வடிவங்கள்

பிள்ளைப் பெருமான் ஐயங்கார்: 'திவ்ய கவி' என்று வைணவப் பெரியோர்களால் பெரிதும் போற்றப் பெறுபவர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் ஆவார். அஷ்டப் பிரபந்தம் என்று சிறப்பாகப் போற்றப்பெறும் எட்டு சிற்றிலக்கியங்களை இயற்றியுள்ள பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் அவர்கள் பிறந்த ஊர் 'திருமங்கை' என்று குறிப்பிடப் பெறுகின்றது. இவர் வைணவப் பெரியார் கூரத்தாழ்வார் அவர்களின் பிரதம சீடர். இவர் பட்டர் பெருமான் அவர்களால் வைணவ சமயப் பஞ்ச சமஸ்கார தீக்கை பெற்ற பெருமையர்.

எட்டு பிரபந்தங்கள் இவரால் இயற்றப்பெற்ற எட்டுப் பிரபந்தங்கள் ஆவன.

**திருவரங்கம் பற்றிய சிற்றிலக்கியங்கள் - 04**

| | |
|---|---|
| 01. திருவரங்கக் கலம்பகம் | 101 |
| 02. திருவரங்கமாலை | 112 |
| 03. திருவரங்கத்தந்தாதி | 101 |
| 04. சீரங்கராயர் ஊசல் | 33 |

**திருவேங்கடம் பற்றிய சிற்றிலக்கியங்கள் - 02**

| | |
|---|---|
| 05. திருவேங்கடமாலை | 101 |
| 06. திருவேங்கடத்தந்தாதி | 101 |

**மற்றவை - 02**

| | |
|---|---|
| 07. அழகர் அந்தாதி | |
| 08. நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி | 109 |

## சிவன் குறிப்புகள்

இவர் தம் பாடல்களில் சிவபெருமான் மும்மூர்த்திகளுள் ஒருவராகவும், பிரம கபாலம் ஏந்திய பிட்சாடனர் வடிவினராகவும், அரியர்த்த வடிவினராகவும் பெரிதும் சுட்டப்பெறும் நிலையில் சிவபெருமானுடைய பல்வேறு சிறப்புக்குறிப்புகள் சுட்டப்பெற்றுள்ளன.

## சடை முடி

நீண்ட சடை முடியினை உடைமையின் சிவன் திருநாமங்களுள் ஒன்றாக 'ஜடாதரன்' என்னும் பெயர் இடம்பெற்றுள்ளது. சிவன் சடைமுடியைப் பற்றிய குறிப்பு.

· வேணி அரன் 5/5, கட்டுசடை 5/74, குஞ்சி 6/2, வார்சடையோன் 7/3, சடைத்தலை 7/12, செய்ய சடையோன் 8/20, படர்சடை 8/80 எனுந்தொடர்களால் பெறப்படுகின்றது. இவற்றுள் சிவன் சடை அமைப்பு கட்டு சடை, வார்சடை, படர்சடை என்று குறிப்பிடப் பெறுவதோடு சடையின் வண்ணம் செய்ய சடை எனவும் சுட்டப்பெற்றுள்ளது.

## கங்கை

கங்கையைச் சடையில் அணிந்துள்ளமையின் கங்காதரன் எனப்பெறும் சிவன் சடை மிசை காணப்பெறும் கங்கா நதியை அலை ஆறு சூடி 1/67, வார்சடை தேங்கு பாகீரதி 1/79, சடைநீர்க்கங்கை யேற்றான் 5/74, கங்கை தரித்தான் 6/84, கங்கை மத்தகர் 7/8, கங்கை வைத்த சடை 7/12 எனவரும் அஷ்டப் பிரபந்தத் தொடர்கள் சுட்டியுள்ளன. இத்தொடர்களுள் கங்கை, அலை ஆறு, பாகீரதி, நிர்க் கங்கை என்று குறிப்பிடப் பெறுவதோடு கங்கையைச் சிவன், சூடினான், ஏற்றான், தரித்தான், வைத்தான் என்று பல்வேறு தொடர்களால் குறிப்பிடப் பெற்றுள்ளது.

## பிறை

சடைமிசைச் சந்திரனைத் தாங்கிய சிவன் தாங்கிய சிவன் வடிவம் சந்திரசேகரர் எனப்பெறுகின்றது. சிவன் பிறையணிந்துள்ளமையை வகிரிளம் பிறையன் 1/79, பிறைசூடி 5/5, மாலைமதிக் கஞ்சி 6/2, அந்திக்கலை மதியன் 7/76 எனுந்தொடர்கள் குறித்துள்ளன. இவற்றுள்

சிவன் அணிந்த பிறை 'வகிர் இளம்பிறை', 'மாலை மதி', 'அந்திக் கலைமதி' எனுந்தொடர்களால் சிறப்பித்துரைக்கப் பெற்றுள்ளமை காணலாம்.

## நாகம்

நாகங்களைப் பல்வாறாக அணிந்த நாகாபரணன் சிவன், சிவன்முடிமேல் நாகம் காணப்பெறுவதனை பணிசூடி 5/5 எனுந் தொடரால் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் குறிப்பிட்டுள்ளார்.

## அணிந்துள்ள மலர்கள்

சிவன் முடிமேல் அணிந்துள்ள மலர் வகைகளாகக் கொன்றை, மத்தம், அறுகு ஆகியன அஷ்டப் பிரபந்தங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளன.

## கொன்றை

மலர்களுள் சிறந்த கொன்றை மலரைச் சூடியமையின் சிவன் கொன்றை வேந்தன் எனப்பெறுகின்றான். சிவனைக் 'கொன்றை சூடி' 5/5 என்று அஷ்டப்பிரபந்தம் குறிப்பிடுகின்றது.

## மத்தம்

சிவனை 'வெள்ளெருக்கம் சடைமுடியான்' என்று கம்பர் குறிப்பிடுவார். எருக்கு எனப்பெரும் மத்தத்தினைச் சிவன் சூடியுள்ளமையால், சிவனை 'பூமத்தன்' 7/57 என்று பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் சுட்டுகின்றார்.

## அறுகு

சிவன் தன் சடையில் அறுகணிந்துள்ளமையை 'அறுகு தரித்தான்' 6/84 என்று குறிப்பிட்டுள்ளார்.

## சிவன் தலைகள்

சிவன் அஞ்சுதலைக் கடவுளாக ஆகமங்களால் சுட்டப்பெறுகின்றான். அவை ஈசானம், தத்புருடம், அகோரம், வாமதேவம், சத்யோசாதம் எனப் பெயர் பெறும் இவ்வாறு சிவன் ஐந்தலையுடைமையினை 'சடைத்தலையாம் ஐயானவன்' 7/12 என்னும் தொடர் சுட்டி நிற்கின்றது.

## சிவன் முகங்கள்

தலைகள் ஐந்தாதல் போலச் சிவன் திருமுகங்களும் ஐந்தாதலின் சிவன் நாமம் 'ஐம்முகன்' 2/31 என்று சுட்டப் பெற்றுள்ளது.

## கண்கள்

கண்கள் மூன்றுடையதோர் கரும்பாகப் பேசப்பெறும் சிவன் நெற்றிக் கண்ணை 'நெற்றிக் கண் ஆனவனை' 1/55 எனவரும் தொடரானும் முக்கண் உடைமையின் 'முக்கண் ஈசன்' 1/45 எனவும் அஷ்டப் பிரபந்தம் சுட்டிக் காட்டுகின்றது.

## கண்டம்

ஆலகால விஷத்தை உண்டமையின் சிவன் கண்டம் கறுத்தவன். ஆதலின் சிவனைக் கறை களத்தன் 2/17 என்று திருவரங்கமாலை பேசுகின்றது.

## மழுவாயுதம்

சிவன் திருக்கரங்களில் ஏந்தியுள்ள ஆயுதமாக மழு மட்டும் அஷ்டப் பிரபந்தங்களால் குறிப்பிடப்படுகின்றது. அம்மழுவின் கூர்மையைக் 'கூர்மழுவாள்' 1/65 எனுந்தொடர் காட்டி நிற்கின்றது. மழுவாயுதத்தினை உடைமையின் சிவனை மழுவுடையோன் 2/41 மழுவலான் 4/4 எனும் பெயரால் அஷ்டப் பிரபந்தம் அழைத்து நிற்கின்றது. சிவன் சூலாயுதம் பற்றிப் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் எதுவும் குறிப்பிடாமையின் இவர் காலத்திலேயே சிவன் கைகளில் சூலாயுதும் காணப்பெறாமை புலனாகின்றது.

## மான்

சிவன் தன் திருக்கரங்களில் மானை ஏந்தி உள்ளமையால் "மான் ஏந்தி" 5/5 என்று சுட்டப்பெறுகின்றார். அம்மானை அவர் தம் இடக்கரத்தில் ஏந்தியுள்ளமையின் மான் இடர் 3/15 என்று குறிப்பிடப் பெற்றுள்ளது.

## சிவன் அணிந்துள்ள பொருட்கள்

சிவன் அணிந்துள்ள பொருள்களாக அக்கு, திருநீறு, புலித்தோலாடை ஆகியன

குறிப்பிடப்பெற்றுள்ளன.

### அக்கு
அக்கணிந்த சிவனை அக்கர் 6/40 என்றே குறிப்பிடும் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் சிவனை அக்கரவம் புனைந்த 3/28 அக்கரவம் பூண்ட 5/16 வடிவினராகவும் குறிப்பிட்டுள்ளார்.

### திருநீறு
பவளம்போல் மேனியில் பால் வெண்ணிறை அணித்தமையின் 'வெண்ணீற்றான்' 6/74 என்றும் வெண்ணீற்றன் 1/67 எனவும் சிவன் பெயர்கள் சுட்டப் பெற்றுள்ளன.

### புலித்தோலாடை
தோலாடையினைச் சிவன் உடுத்துள்ளமையைத் தோலுடுத்தார் 3/16 எனுந் தொடரால் சுட்டும் ஆசிரியர், அத்தோலாடை எதுவென்று தெளிவாய்ச் சுட்டுவாராய் 'புலியூர் வல்தொல் உடையான்' 8/11 என்று புலித்தோலைக் குறிப்பால் உணர்த்தியுள்ளார்.

### முருகன் தாதை
சிவன் திருமகனான முருகனைக் கந்தன் எனவும், சேந்தன் திருத்தாதை 5/38 கந்தன் அத்தன் 7/12 ஆகச் சிவபெருமானைக் குறித்துள்ளார். முருகன் கைவேல் செங்கதிர்வேல் 5/38 எனவும் சிறப்பித்துரைக்கப் பெற்றுள்ளது.

### ஐங்கரன் தாதை
ஐந்து கரத்தானாகப் பேசப் பெறும் விநாயகக் கடவுளின் தந்தையாகச் சிவனைச் சுட்டும் வகையில் 'அத்தம் ஐந்தான் திருத்தாதை' 5/38 எனும் தொடரை அமைத்துள்ளார்.

### சிவன் வாகனம்
சிவன் விடையேறித் திகழும் பான்மையினை இடபமூர்த்தார் 5/2 எனும் தொடர் சுட்டி நிற்கின்றது. சிவன் ரிஷபாரூட வடிவினை 'ஏறு கடாவுநர்' 7/68 என்னும் தொடரும் படம் பிடித்துக் காட்டி நிற்கின்றது.

### சிவன் திருமந்திரம்
சிவனைத் தியானிக்கும் திருமந்திர எழுத்தாக 'நமசிவாய' என்றும் திருவைந்தெழுந்து பேசப்பெறுகின்றது. இவ்வுண்மையினை 'அஞ்சக்கர வடமூலத்தன்' 6/26 எனுந்தொடர் சுட்டி நிற்கின்றது.

### சிவன் பொதுப் பெயர்கள்
சிவன் பொதுப்பெயர்களாக ஈசன் (1/10, 1/44) சிவன் (1/46, 1/52, 1/106, 5/17, 8/78) சங்கரன் (1/93) அரன் (4/5, 4/27, 7/31) ஆகியவை குறிப்பிடப்-பெற்றுள்ளன.

### பிட்சாடனர்
சிவன் மகேஸ்வர வடிவங்களுள் 'பலியுண்ணி' எனப்பெறும் பிட்சாடனர் வடிவமும் ஒன்றாகும். தாருகாவன முனிவர்களின் செருக்கை யழிப்பான் வேண்டிச் சிவன் மேற்கொண்ட இவ்வடிவின் பெயரைப் 'பலியுண்ணி' 1/67 என்று குறிப்பிட்டுள்ள பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் அவர்கள் 'சென்றிரைக்கும் போனகம் உண்ட வெண்ணீற்றன்' 6/74 என்றும் குறிப்பிட்டுள்ளார்.

### அர்த்தநாரி
தோடுடைய செவியனாய், இடப்பால் மாதொரு கூறனான சிவன் வடிவினை 'உமை ஒரு கூறுகொண்ட அரன்' 2/13, 'கயற் கண்ணி பங்களான்' 2/38, 'மாதங்கத்தான்' 3/1, 'ஆர் அணங்கும் ஓர் அத்தன்' 3/24, 'அங்கத்துத்தான் என்றும் பெண்' 6/44, 'உமையாள் வாமம் அரை பணியான்' 7/67 என வருந் தொடர்களால் அஷ்ட பிரபந்தங்கள் குறிப்பிட்டுள்ளன.

### ஏகபாதர்
கடையூழிக் காலத்திலே சிவன் தனித்து நின்றியங்கும் ஏகபாதவடிவினை 'அழிக்கும் உகாந்தத்திலே' 2/13 என்று குறிப்பிட்டுச் சுட்டியுள்ளார்.

### திரிபுராரி

திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளான சிவன் திரிபுராந்தக வடிவினை, 'திரிபுரம் கண்டது' 2/91, 'கொற்றவாளியொன்றால் அரணம் கடந்தவன்' 2/109, 'சிரித்துப் புரம் எரித்தான்' 5/77, 'புராரி' 6/66, 'புராந்தகன்' 7/60, 'புரஞ்சுட்டவன்' 8/59 எனுந் தொடர்களால் சுட்டியுள்ளார்.

### நடராசர்

காலைத்தூக்கி நின்றாடும் கடவுளான நடராச மூர்த்தி வடிவம் 'ஆடும் பொடிப்பூசி ஆனந்தமாயே' 1/67, 'பாண்டரங்கம் ஆடி' 8/80 எனுந்தொடர்களால் சுட்டப்பெற்றுள்ளது.

### காமாரி

காமனைக் கண்ணழகால் விழித்தெழித்த கண்ணுதல் வடிவினை 'அங்கவேள்குன்ற' என்று குறிப்பிடுவது புதுமையாயுள்ளது. திருமாலின் அவதாரங்களுள் ஒன்றான நரசிங்க வடிவினை வென்ற வரலாற்றை 'அங்கவேள் குன்ற அழல் சரபம்' 8/96 என்று மாற்றிக் கூறியுள்ள அஷ்டப் பிரபந்தப் பாங்கு குறிப்பிடத்தக்கது.

### உமா சகிதர்

உமாபதியாய்த் திகழும் சிவன் திருவடிவம் 'உமை கேள்வன்' 1/39 என்று சுட்டப் பெற்றுள்ளது.

### இராவண அனுக்ரக மூர்த்தி

கயிலை மலையைப் பெயர்க்க முயன்ற இராவணனை அடர்த்து அருள் செய்த இச்சிவவடிவினை 'கயற்கண்ணி பங்காளன் வாழ்வெள்ளிமால் வரையைப் பறிக்கும் கபடன் பணைப் புயம்' 2/38 எனவருந் தொடரால் அஷ்டப் பிரபந்தம் சுட்டிக்காட்டியுள்ளது.

### கயிலை மலை

சிவன் உறையும் திருக்கயிலை மலை 'குவட்டுவெள்ளி' 2/39, 'மலையான ஈசன்' 3/23, 'வெள்ளி மலை' 5/12 என வருந்தொடர்களால் குறிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாகப் பிள்ளைப் பெருமான் ஐயங்காருடைய அஷ்டப் பிரபந்தங்களுள் சிவன் திருவடிவங்கள் சுட்டப்பெற்றுள்ளன.

## தான தருமங்கள்

தான தருமங்கள் செய்து வாழவேண்டும் என்று பெரியவர்கள் கூறுவதுண்டு. ஒவ்வொரு தானத்திற்கும் ஒவ்வொருவிதமான பலன்கள் உண்டு. தானம் பெற்றவர் வாழ்த்தினாலும், வாழ்த்தாவிட்டாலும் கண்டிப்பாக அப்பலன்கள் தானம் செய்கிறவர்களுக்கு வந்துசேரும்.

| | | |
|---|---|---|
| 01. வஸ்திர தானம் | - | ஆயுள் விருத்தி |
| 02. பூமி தானம் | - | பிரம்ம லோகத்தை தரும் |
| 03. தேனை வெண்கலப் பாத்திரத்தில் வைத்து தானம் செய்தல் | - | புத்திரபாக்யம் உண்டாகும். |
| 04. நெல்லிக்காய் தானம் | - | ஞானத்தைத் தரும் |
| 05. கோவிலில் தீப தானம் | - | உயர்ந்த பதவி கிடைக்கும் |
| 06. விதை வித்துக்கள் தானம் | - | தீர்க்காயுளையும், சந்ததிவிருத்தியையும் தரும் |
| 07. அரிசி தானம் | - | பாபம் போகும் |
| 08. பழம் தாம்பூலதானம் | - | ஸ்வர்க்கத்தைத் தரும் |
| 09. கம்பளி தானம் | - | வாயு ரோகம் நீங்கும் |
| 10. அன்னதானம் | - | நினைத்தது கிட்டும். |

# ஆடி அமாவாசை

விரதம் என்பது தவம். தவத்திற்கு இலக்கணம் வகுத்த திருவள்ளுவர், உற்றநோய் நோன்றல், உயிர்க்குறுகண் செய்யாமை ஆகியவையே தவத்திற்கு வடிவமாகும் என்றார். தனக்கு வருகின்ற துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதாலும், பிற உயிர்களுக்குத் துன்பங்களைச் செய்யாதிருத்தலாலும் ஒருவர்க்கு அளப்பரிய ஆற்றல் கிடைக்கின்றது. இத்தகைய ஆற்றல் நிறையப் பெற்றவர்க்கு கூற்றம் குதித்தலும் கைகூடும் என்கிறது பொய்யாமொழி. விரதம் மேற்கொள்வதன் மூலம் விரும்பிய பயன்களை விரும்பியவாறே பெற்றுக்கொள்ள முடியுமாகையில், யாவராலும் விரதம் நோற்கப்பட வேண்டியதாக உள்ளது. விரதத்தில் வழிபாடு செய்தல் ஒரு முக்கிய அம்சமாகும். மாதா, பிதா, குரு, தெய்வம் என்போர் வணக்கத்திற்கும் வழிபாட்டிற்குமுரியவர்கள். விரதம் என்பது பிரதிக்ஞையும் ஆகும். விரதகாலங்களில் விதிக்கப்பட்டதைச் செய்வதும், விலக்கப்பட்டதை செய்யாதிருத்தலும் என்பது தீர்மானமாக உள்ளது. எமது சமயத்திலும் பல விரதங்கள் விதித்துரைக்க -ப்பட்டுள்ளன. விநாயகர், சிவன், சக்தி, முருகன், விஷ்ணு முதலிய தெய்வங்களாகிவிட்ட தந்தை, தாய் ஆகியோரை எண்ணி மேற்கொள்ளப்படும் விரதங்கள் என்றும் அவை பல வகைப்படும்.

அமாவாசை, பௌர்ணிமை ஆகிய இரண்டு விரதங்களும் முறையே, காலமான தந்தை, தாய் ஆகியோரைக் குறித்து அவர்கள் நற்கதியடைய அவர்களின் பிள்ளைகளால் அநுட்டிக்கப்படும் விரதங்கள் ஆகும். ஒவ்வொரு மாதத்திலும் இவ்விரதங்களுக்குரிய தினங்கள் வருகின்றன. இவ்விரதங்களை அனுட்டிப்பவர்கள் ஆசாரசீலர்களாக, உபவாசம் இருந்தும், அவ்வாறு இருக்க இயலாதவர் ஒருபொழுதும் உண்டும் அனுட்டிப்பர். இத்தினத்தில் புண்ணிய தீர்த்தங்களில் நீராடித், தூய்மையராய், பிதிர் தருப்பணம் செய்தும்: பிண்ட தானம், சிரார்த்தம் செய்தும்: இறைவனை வழிபட்டும்: அந்தணர்க-களுக்குத் தானமும், விருந்தினர், சுற்றத்தவர், ஏழைகள், ஆதரவற்றோரர் ஆகியோருக்கு உணவும் அளித்தும்: அவர்களுடன் போசனம் விரத் கொள்கை, தீர்மானங்களுடன் இருப்பர். இறந்த தந்தை, தாயாரின் பாவ வினைகளை நீக்குதற் பொருட்டும், அவர்கள் முத்தியின்பத்தை அடைதற்பொருட்டும் அமாவாசை, பௌர்ணிமை நாட்களில் விரதங்களைப் பிள்ளைகள் அனுட்டிக்கின்றனர். அமாவாசை, பௌர்ணிமைத் தினங்கள் மாதந்தோறும் வருகின்றன. அவற்றைத் தவறாது அனுட்டிக்க வேண்டியது தந்தை, தாயார்களை இழந்த பிள்ளைகளின் கடமையாகும்.

சித்திரை மாதத்தில் வரும் பௌர்ணமியும், ஆடி, தை மாதங்களில் வருகின்ற அமாவாசையும் சிறப்புப் பொருந்தியன என்று சைவ நூல்கள் கூறுகின்றன. அவரவர் தந்தை, தாயார் இறந்த திதிகளைத் தவற விட்டவர்கள், ஆடி அமாவாசைத் தினத்தில் தந்தையை நோக்கியும், சித்திரைப் பௌர்ணமித் தினத்தில் தாயின் பொருட்டும் சிரார்த்தம், தருப்பணம், பிண்டதானம் என்பவற்றைச் செய்யும் வழக்கம் உள்ளது.

இனி ஆடி அமாவாசை விசேடத்துவம் பற்றி நோக்குவோம். இந்துக்கள் ஒரு வருடத்தை இரண்டு அயனங்களாகப் பிரித்துள்ளனர். தை மாதம் தொடக்கம் ஆனிமாதம் வரையும் உள்ள ஆறு மாதங்கள் உத்தராயன காலம் என்பர். புவியின் தெற்கு அகலக்கோடு $23/^{1/2}$ பாகையிலிருந்து அதாவது மகரக் கோட்டிலிருந்து வடக்கு நோக்கி சூரியன் சஞ்சரிக்கும் காலம் இதுவாகும். கோடை காலப்பகுதியும் இதுவாகும்.

உத்தராயனம் தேவர்களுக்குப் பகற்காலம் ஆகும். ஆடிமாதம் தொடக்கம் மார்கழி வரையுள்ள ஆறு மாதங்கள் தட்சணாயன காலம் என்பர். புவியின் வடக்கு அகலக்கோடு 23/1/2 பாகையிலிருந்து அதாவது கடகக் கோட்டிலிருந்து தெற்கு நோக்கி சூரியன் சஞ்சாரம் செய்யும் காலம் இதுவாகும். கார்காலம் தொடங்கி நடைபெறும் காலப்பகுதியுமாகும். தேவர்களுக்குத் தட்சாணம் இரவுக்காலம் என்பர்.

தட்சணாயனத் தொடக்க மாதம் ஆடி என்பதால், பிதுர் காரியங்களுக்கு ஆடிமாதம் சிறப்பானது எனக் கொள்ளப்படுகிறது. ஆடி மாதத்தில் வருகின்ற அமாவாசைத் திதி பிதுர் வழிபாட்டிற்குப் புண்ணியமான தினம் எனச் சாஸ்திர நூல்கள் கூறுகின்றன.

வாரம், திதி, கரணம், நட்சத்திரம், யோகம் என்னும் ஐந்தும் பஞ்சாங்க உறுப்புக்கள் ஆகும். இவற்றில் திதி முப்பது என்பர். திதி என்பது சூரியனுக்கும், சந்திரனுக்கும் இடைப்பட்ட தூரத்தை குறிப்பிடும் சொல். பூர்வ பக்கப் பிரதமை தொடக்கம் அபரபக்க அமாவாசை ஈறாக உள்ள 30 காலப் பகுப்புக்கள் ஆகும். பூர்வபக்கம் என்பது அமாவாசையின் அடுத்த தினத்திலிருந்து பூரணை வரையுமுள்ள 15 நாட்கள். இக்காலத்தை வளர்பிறைக் காலம் என்றும், சுக்லபட்சம் என்றும் குறிப்பிடுவர். பூரணையின் அடுத்த தினத்திலிருந்து அமாவாசை வரையுமுள்ள 15 நாட்கள் அபரபக்கம் ஆகும். இதனைத் தேய்பிறைக் காலம் என்றும் கிருஷ்ண பட்சம் என்றும் கூறுவர்.

சூரியனும், சந்திரனும் ஒரே பாகையில் பூமிக்கு நேராக வரும்பொழுது ஏற்படுவது அமாவாசைத் திதி. அன்றைய தினம் பூமியிலுள்ளவர்ளுக்குச் சந்திரன் தென்படாது. சூரியனும், சந்திரனும் ஒரு இராசியில் நிற்கும் காலம் என்று சோதிட நூல் கூறும். "அமா" என்றால் ஓரிடத்தில் பொருந்தியது அல்லது சேர்ந்தது என்று பொருள் கொள்வர். "வாசி" என்றால் சாதகமான அல்லது வாய்ப்பான என்னும் கருத்தில் வருகின்றது. எனவே ஓர் இராசியில் சூரியனும் சந்திரனும் ஒன்று சேர்ந்து அல்லது பொருந்தி உறவாகும் வாசியான நாள் அமாவாசி எனப்பட்டது. மாதத்தில் ஒரு முறை இந்நிலை உண்டாகின்றது. அதாவது மாதமொரு தடவை அமாவாசை நாள் வருகின்றது.

சூரியனின் ஒளியும், வெப்பமுமே சகல சீவராசிகளுக்கும் உயிர்ப்பையும் பல்வேறு ஆற்றல்களையும் அளித்து வாழ்விக்கின்றன. மனிதப் பிறவிகளும் சூரியனிலிருந்துதான் சகல ஆற்றல்கள், வாழ்க்கைத் தேவைகள் அனைத்தையும் பெற்றுக் கொள்கின்றன. சந்திரன் மனிதர்களின் மனத்திற்கு அதிபதியாக நின்று ஆட்சி செலுத்துகின்றது. மனங்களில் ஏற்படுகின்ற பல்வேறு உணர்ச்சிகள் மற்றும் தெளிந்த அறிவு, உற்சாகம் என்பன சந்திரனின் செல்வாக்கிற்குட்பட்டவை ஆகின்றன. இந்நிலையில் சூரியனும், சந்திரனும் மக்கள் மீது எத்துணை பாதிப்பினை ஏற்படுத்துகின்றன என்பதை அறிந்து கொள்ளலாம். சூரியனும், சந்திரனும் நமக்கு பிரதியட்சமாகத் தோன்றுகின்ற தெய்வங்கள் என இந்துசமயம் கூறுகின்றமை நோக்கற்பாலது.

இத்துணை சிறப்பு வாய்ந்த சூரிய சந்திரர்கள் ஒன்று ஒரு இராசியில் சஞ்சரிக்கும் புனிதமான நாள் அமாவாசையாகும். அத்துடன் தேவர்களும் அமாவாசையின் அதிபர்களாக உள்ளனர். பூமியிலுள்ளவர்களைப் பொறுத்த மட்டில் ஒவ்வொரு அமாவாசையும் பிதுர் கருமத்திற்கு அதாவது தென்புலத்தார் வழிபாட்டிற்கு மிக உவந்த நாள. சூரிய மண்டலத்திற்கு அப்பால் தெண்மண்டலத்தில் பிதுர்கள் உறையும் பிதுர்லோகம் உள்ளது. பிதுர்களைத் தென்புலத்தார் என்று அழைப்பது தமிழர் மரபு. தென்புலத்தார் வழிபாடு, எள்ளும் தண்ணீரும் இறைத்தல், பிண்டம் போடுதல் என்பவை பழந்தமிழர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்தவை. அமாவாசையில் விரதம் இருந்து

இக்கருமங்களை ஆற்ற வேண்டும். ஆடி அமாவாசை பிதுர் கருமங்களுக்கு மிகவும் உவந்தது என்றும் பிதுர் வழிபாடு செய்ய வேண்டியவர்கள் தவறாது ஆடி அமாவாசையில் செய்ய வேண்டும் என்றும் நூல்கள் எடுத்துரைக்கின்றன. பிதுர் தருப்பணத்திற்கு மிகவும் ஏற்றது ஆடி அமாவாசை என்பது இந்துக்களின் கொள்கை.

ஆடி அமாவாசைத் தினத்தில் கடல், நதி, வாவி போன்ற தீர்த்தங்களில் நீராடினால் பழவினைகள் அறும் என்றும், பாவங்கள் நீங்கும் என்றும் கூறுவர். தீர்த்தங்களை இறைவனின் அருள் செறிந்த நீராக நினைந்து முன்னோர்களான பிதுர்களை எண்ணி அவர்களின் பாவங்களைப் போக்கி அவர்களுக்கு முத்தியளிக்கும்படி இறைவனை வேண்டி தீர்த்தமாடுதல் வேண்டும். அமாவாசை, பௌர்ணமி தினங்களில் கடல் பொங்கியெழும் நிலை உண்டு. இவ்வாறே இத்தினங்களில் மனித மன உணர்வுகளிலும் மாறுதல்கள் நிகழ்வதாகக் கூறப்படுகிறது. மானிடரின் ஆத்மீக வலுவும் குன்றும் காலமாக இத்தினங்கள் உள்ளன. எனவேதான் அமாவாசை போன்ற கனத்த நாட்கள் மிக அவதானமாகக் கழிக்கப்பட வேண்டும் என்றும், இந்நாட்களில் வேறு காரியங்களைச் செய்யாதும், மனங்களைப் புலன்கள் வழிச் செல்ல விடாதும் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் ஆன்றோர்கள் கூறிவைத்தனர். இத்தினங்களில் கடவுள் வழிபாடு, பிதுர் வழிபாடு என்பவற்றைச் செய்து நல்ல பயனைப் பெறுவதே முறையாகும்.

ஆடி அமாவாசையில், தீர்த்தமாடுதல்: பிதுர் வழிபாடு செய்தல், தருப்பணம், பிண்டதானம் நிறைவேற்றுதல் என்பவை ஆண்டுதோறும் கீரிமலை நகுலேஸ்வரத்திலும்: மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரத்திலும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவ்வாறு, வேறும் பல சிவஸ்தலங்களிலும் இந்நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன. நாங்கள் நோயின்றிச் சுகமான வாழ்வும், சகல செல்வங்களையும் பெற்று இனிதாக வாழவும் தெய்வங்களை ஆராதிக்கின்றோம். இதற்குப் பிதுர்களையும் திருப்தி செய்து மகிழ்விக்க வேண்டும். இவற்றிற்குரிய விதிமுறைகளையெல்லாம் நமது முன்னோர்கள் எழுதி வைத்துள்ளனர். பராசரர், மனு, லிகிதர், சாதாபர் போன்ற இருடிகள் எழுதி வைத்தவைகள் யாவும் சேர்த்து "தர்மசாஸ்திர நிபந்தனம்" எனும் கிரந்தநூல் தொகுக்கப்பட்டுள்ளது. அதனை ஆதாரமாகக் கொண்டே இந்துக்களின் கர்மானுஷ்டானங்கள் நடக்கின்றன. ஆடி அமாவாசையில் இறந்த பெற்றோர்களுக்குச் செய்யும் தர்ப்பணம், சிரார்த்தம் மூலம் காணிக்கையை, அன்பினை அவர்களுக்குச் செலுத்துகிறோம். அவர்களின் ஆசீர்வாதங்களும், பாதுகாப்பும் நமது நல்வாழ்விற்குத் தேவை. எமது சமயத்தின் விதிமுறைப்படி தெய்வத்தை நேராக வழிபட்டு அநுக்கிரகம் பெறும் நிலை மிக உயர்ந்த நிலையில் பக்குவமடைந்த சந்நியாசிகள் போன்றோருக்கே உரித்தானது. ஏனையோர் தேவதைகளைப் பிரீதி செய்து தெய்வங்களின் அநுக்கிரகம் பெற்று நன்மையடைய வேண்டும். தேவதைகளைப் பிரீதி செய்வது யாகங்கள், வேள்விகள், ஹோமங்கள் மூலமே ஆகும். இவ்வாறே பிதுர்களைப் பிரீதி செய்ய சிரார்த்தம், தர்ப்பணம், பிண்டதானம் என்பவை செய்யப்படுகின்றன. இவற்றின் மூலமே நாம் நன்மையடைய வேண்டும். எனவே அமாவசை, பௌர்ணமி விரதங்கள் மற்றும் சிராத்தம் முதலியவற்றைத் தவறாது அனுட்டித்து வரவேண்டும் என்று நூல்கள் கூறுகின்றன. இவ்வாறு இவற்றை அனுட்டிக்காதவர்களுக்கு பிதுர் சாபம் ஏற்படுகிறது என்றும், பிதுர்சாபம் வாழ்வில் இன்னல்களையும், தொல்லைகளையும் தருகின்றன என்றும் ஆன்றோர்கள் கூறியுள்ளனர்.

மனிதர்கள் தம் வாழ்நாட்களில் குற்றங்களைத் தெரிந்தும் செய்கின்றனர்: தெரியாமலும் செய்கின்றனர். குற்றங்கள் எனத் தெரிந்துகொண்டு செய்யப்படுபவை புத்தி

பூர்வமாகச் செய்யப்படுபவை. இவற்றை அனுபவித்தே ஆக வேண்டும். தெரியாமல் செய்யப்படும் குற்றங்களுக்குப் பிராயச்சித்தம் உண்டு. அபுத்தி பூர்வமாக செய்யப்பட்ட இத்தகையன. இறந்த பின் இவர்களுக்குச் செய்யப்படுகின்ற தகனக்கிரியை, அந்தியேட்டி, சபிண்டீகரணம், மாசிகம், சிரார்த்தம் மற்றும் அமாவாசை பூரணை விரதங்கள் ஆகியவற்றின் மூலம் அகற்றப்பட்டு விடுகின்றன. குறிப்பிட்ட அபரக் கிரியைகளைப் பிள்ளைகள் விதிப்படி செய்வதன் மூலமும்: அமாவாசை, பௌர்ணமி விரதங்களை மேற்கொள்வதன் மூலமும், இறந்த பெற்றோர்கள் அபுத்திபூர்வமாகத் தாம் வாழ்ந்த காலத்தில் இயற்றிய பாவ வினைகள் வேரோடு களையப்படுகின்றன. அவர்களின் உயிர்கள் ஆன்ம ஈடேற்றம் பெறுகின்றன. இதுவே மகன் தன் தந்தை, தாயாருக்கு ஆற்றும் மகத்தான உதவியாகும். அப்பொழுதுதான் "இவன் தந்தை என்நோற்றான் கொல் எனுஞ்சொல்" என்ற வள்ளுவர் வாக்கு மெய்ம்மை பெறுகின்றது.

"மைந்தனைப் பெறுகின்றது மாசிலாப்
புந்தியன்பொடு போற்றி வளர்ப்பதுந்
தந்தை மாண்டுழித் தம்முறைக் கேற்றிட
வந்தமில் கடனாற்றுதற் கேயன்றோ"

மைந்தனைப் பெற்று, அன்போடு வளர்த்து, சிறந்த கல்வியளித்து, அவையில் முந்தியிருக்கச் செய்வதற்குத் தந்தை, தாயார் எடுக்கும் இடையறா முயற்சிக்கு என்ன காரணம்? காரணம் உண்டு. ஆம் தந்தை, தாயார் இறந்தபின் முறைப்படி செய்யவேண்டிய கடன்களை நிறைவேற்றுவதற்கும், பின்னர் ஆண்டுதோறும் அவர்களை நோக்கி சிரார்த்தம் செய்வதற்கும், ஒவ்வோர் அமாவாசை, பௌர்ணமைத் தினங்களில் விரதம் அனுட்டிப்பதற்கும் அவற்றின் வழி இறந்த உயிர்கள் பழவினைகள் நீங்கப் பெற்று சாந்தி, ஈடேற்றம், முத்தி ஆகியவற்றை அடைவதற்கும், இப்புத்திரர்களின் அறிவுபூர்வமான, சிரத்தை-பூர்வமான உதவி தேவை என்பதற்கா-கவேயாகும். 'புத்' எனும் கொடிய நரகத்தில் வீழாது பெற்றோர்களைக் காப்பாற்றுபவனே புத்திரன் ஆவன். எனவே ஆடி அமாவாசையின் மகத்துவத்தை உணர்ந்து, அத்தினத்தில் முறைப்படி தென்புலத்தார் வழிபாடு செய்து சைவ ஆசாரங்களைப் பேணி, இறந்த நம் முன்னோர்களின் நல்லாசிகளைப் பெற்று உய்வோமாக.

# 16 வகை அபிசேகங்களும் அதனதன் பலன்களும்

**ஒவ்வொரு அபிசேகத்துக்கும் கீழ்க்கணடவாறு உலகப் பயன் கிட்டுகிறது**

| | | | |
|---|---|---|---|
| 01. | தீர்த்தம் அபிசேகம் | - | மனச்சுத்தம் |
| 02. | எண்ணெய் அபிசேகம் | - | பக்தி |
| 03. | நெல்லிப்பொடி அபிசேகம் | - | நோய் தீர்த்தல் |
| 04. | மஞ்சள்பொடி அபிசேகம் | - | மங்களம் |
| 05. | பால் அபிசேகம் | - | சாந்தம் |
| 06. | தயிர் அபிசேகம் | - | உடல் திடம் |
| 07. | நெய் அபிசேகம் | - | சுக வாழ்வு |
| 08. | பன்னீர் அபிசேகம் | - | புகழ் |
| 09. | கரும்பு சர்க்கரை அபிசேகம் | - | சோதிடம் |
| 10. | விபூதி அபிசேகம் | - | ஞானம் |
| 11. | சந்தன அபிசேகம் | - | சொர்க்க லோகம் |
| 12. | தேன் அபிசேகம் | - | குரலினிமை |
| 13. | பழச்சாறு அபிசேகம் | - | ஜனவசீகரம் |
| 14. | பஞ்சாமிர்தம் அபிசேகம் | - | நீண்ட ஆயுள் |
| 15. | பஞ்சகவ்வியம் அபிசேகம் | - | பாவநிவர்த்தி |
| 16. | இளநீர் அபிசேகம் | - | நன்மக்கட்பேறு |
| 17. | அன்னம் அபிசேகம் | - | அரசு தரும் |
| 18. | மாயப்பொடி அபிசேகம் | - | குபேர காபத்து |

ஆதாரம் :- "ஏரல் சேர்மன் அருணாசலசுவாமி வரலாறு"

# ஆவணிச் சதுர்த்தி

சதுர்த்தி என்பது ஒரு திதி. ஒவ்வொரு மாதமும் அமாவாசைக்குப் பின்னர், நான்காம் நாள் வருகின்ற சதுர்த்திதிதியன்று விநாயகப் பெருமானை நோக்கி விரதம் அனுட்டிப்பது இந்துக்களிடையே வழக்கமாக இருந்து வருகின்றது. ஆவணிமாதப் பூர்வபக்கச் சதுர்த்தி அவற்றுள் விசேடமாகக் கூறப்படுகிறது. மாதச் சதுர்த்தி எல்லாவற்றிலும் விரதம் அனுட்டிக்க முடியாவிட்டாலும், ஆவணிச் சதுர்த்தியன்று ஆதல் விநாயகரை நோக்கி விரதமிருந்து அனுக்கிரகத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

தனக்கு மேலே வேறொரு தலைவன் இல்லாதவன் விநாயகன். எனவே, விநாயகர் முழுமுதற் கடவுள் ஆவர். விநாயகனை உள்ளன்போடு வணங்குபவர்களின் வெம்மையான வினைகள் வேரோடு கழையப்படுகின்றன. அவர்களுக்கு வருகின்ற விக்கினங்கள், வில்லங்கங்கள்: இடர்கள், இடையூறுகள் அனைத்தும் முற்றாகத் தீர்க்கப்படுகின்றன. விநாயகரை விரும்பி, இடைவிடாது வழிபாடு செய்து வருபவருக்கு, மனத்தூய்மை, மொழித்தூய்மை, செயல்த்தூய்மை என்னும் திரிகரணசுத்தி கிட்டுகின்றது. அதன் காணரமாக எடுத்த காரியங்கள் அனைத்தும் சிரமமின்றிச் சித்திக்கின்றன. திருவும், கல்வியும், சீரான வாழ்வும் அவர்களுக்குத் தழைத்து ஓங்குகின்றன. நினைத்த காரியங்களோ, எடுத்த கருமங்களோ முட்டின்றி அடையப்-பெறுதலுக்கு விநாயகரின் திருவருள் மிகவும் இன்றியமையாதது என்பதை உணர்ந்த-படியினால்தான், எக்கருமத்தையும் எச்-செயற்பாட்டையும் தொடங்கும்போது முதலில் விநாயகரை நினைந்து, வணங்கி, வழிபட்டு ஆரம்பிக்கும் மரபு இந்துக்களிடம் தொன்று தொட்டு இருந்து வருகிறது.

ஓம் எனும் பிரணவ மந்திரம் மந்திரங்கள் எல்லாவற்றிற்கும் மூலமாகும், ஆதியாகவும் அமைந்துள்ளது. ஓம் எனும் வடிவமாகவும், பிரணவப் பொருளாகவும் விநாயகர் விளங்குகின்றார். "பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்" எனப் பழந்தமிழ் நீதிநூல் ஆன வெற்றிவேற்கை கூறுகிறது.

சிந்தூரன் என்பான் வரங்கள் பல பெற்று, அவற்றின் பலத்தினால், தேவர்களுக்கும், பூவுலகிலுள்ளவர்களுக்கும் இன்னல்களையும் தொல்லைகளையும் கொடுத்து வந்தான். தேவர்களை அழித்தொழிக்க எண்ணினான். அத்தகைய கொடியவனான சிந்தூரனைச் சங்காரம் செய்து தேவர்களைக் காப்பாற்றுவதற்கு விநாயகர் அவதரித்த திருநாள் தான் ஆவணிச் சதுர்த்தி ஆகும்.

முன்பு ஒருமுறை திருக்கயிலாயத்திற்குப் பிரமதேவர் சென்று சிவபெருமானைத் தரிசித்தவேளை, நாரதரும் அங்கு ஒரு கனியுடன் வந்திருந்தார். அப்பொழுது பிரம்மதேவர் நாரதர் கொண்டு வந்த கனியை வாங்கி, முருகனுக்குக் கொடுக்கும்படி சிவபெருமானை வேண்ட சிவனும் அப்பழத்தை முருகனிடம் வழங்கினார். இதனைக் கண்ணுற்ற மூத்த பிள்ளையான விநாயகர் சினங்கொண்டு பிரமதேவரை நோக்கினார். விநாயகரின் கோப நோக்கு, பிரமனைப் பயங்கொள்ளச் செய்தது. தன் பிழையைப் பொறுத்தருளும்படி பிரமன் விநாயகரை பணிந்து நின்றான். இக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த சந்திரன் தன்னையுமறியாமல் ஏளனமாகச் சிரித்துவிட்டான். சந்திரனின் இச்சிரிப்பு பெரியோர்களை அவமதித்த குற்றமாகக் கொள்ளப்பட்டது. பெரியோர்கள் கூடியிருந்த அவையில் அடக்கம் பேணாது ஏளனச் சிரிப்புச் சிரித்த சந்திரன் விநாயகரால் சபிக்கப்பெற்றான்.

சந்திரன், அதன் பிரகாசத்தை இழக்கும்படி நேர்ந்தது அச்சாபத்தினால்.

தேவர்கள் சந்திரனுக்குச் சாபவிமோசனம் அளிக்குமாறு விநாயகரை மன்றாடினர். கருணை கொண்ட விநாயகர் "வருடத்தில் ஆவணி மாத சதுர்த்தியன்று சந்திரனைப் பார்ப்பவர்கள் துன்பம் அடைவார்கள்" என்று கூறிச் சந்திரனுக்குக் கொடுக்கப்பட்ட சாபத்தைக் குறைத்துவிட்டார். மேலும் "சதுர்த்தி தோறும் விரதமிருந்து தம்மை வழிபடுபவர்கள் புண்ணியப் பேறுகளை அடைவர்" என்றும் விநாயகர் திருவருள் பாலித்தார்.

விகட சக்கரர் விநாயகன் ஆடிய நடனத்தை தேவர்கள் எல்லோரும் பார்த்துப் போற்றி மகிழ்ந்தனர். ஆனால் சந்திரனுக்கோ சிரிப்பு வந்துவிட்டது: சிரித்தும் விட்டான். அதனால் சந்திரனுக்கு விநாயகர் சாபம் கொடுத்தார். சதுர்த்தி தினத்தில் சந்திரனைப் பார்ப்பவர் பாவம் செய்தவர் ஆவர் என்பதே அச்சாபம். இன்றும் சதுர்த்தியன்று தோன்றும் ஐந்தாம் பிறைச் சந்திரனைப் பார்ப்பதை மக்கள் தவிர்த்து வரும் வழக்கம் காணப்படுகிறது. சந்திரன் விநாயகரை வணங்கி வழிபட்டு அருள்பெற்ற தினமும் ஆவணிச் சதுர்த்திநாளே.

ஆவணிச் சதுர்த்தி விரதத்தை அனுட்டிப்பவர்கள் விநாயகரின் திருவருட் கடாட்சம் பெற்று இசுபரசுகங்களைப் பெறுவர். வாழ்க்கையில் எத்துன்பமோ, இடரோ ஏற்படாது. அஞ்ஞான இருள் அகன்று மெய்ஞ்ஞானம் கைவரப் பெறும். வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம் எனும் முக்கனிகள், கரும்பு, எள், கடலை, அவல், அப்பம், மோதகம், கொழுக்கட்டை, வடை, பொரி உருண்டை என்பவற்றை விநாயகருக்கு நிவேதித்து கணேச அஷ்டகம் கூறிப் பூசை செய்து அவரை வழிபடவேண்டும்.

விநாயக புராணம் படிப்பதாலும் நல்ல பயனைப் பெறமுடியும். விநாயகரை அறுகம்புல் கொண்டு அருச்சிப்பது உவந்த முறையாகும்.

விக்கினங்கள் நிறைந்த இன்றைய காலகட்டத்தில் விக்கினேஸ்வரனான விநாயகப்பெருமானைத் தொழுது வணங்கி வழிபாடு செய்தலே விக்கினங்கள் நீங்கப்பெற்று நாம் உய்வு பெறுவதற்கு ஒரே வழி என்பதை உணர்வோமாக.

## கோயிலுக்குள் செல்லுமுன் செருப்பைக் கழற்றிப் போடுவது ஏன்?

புண்ணியகருமங்கள் எல்லாமே காலணி இல்லாமல் செய்ய வேண்டும் என்று கூறுவதுண்டு. என்றாலும் கோயிலில் நுழையும் போது செருப்பணியல் ஆகாது என்பது கட்டாயம். சில கோயில்களில் சட்டையும் அணிவது தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் எல்லாக் கோயில்களிலும் செருப்பணிவது கட்டாயமாக தடை செய்யப்பட்டுள்ளது. இந்த தடை காரணமாக சிலர் கோயிலுக்கு வெளியில் நின்று வணங்கி விட்டுச் செல்வதையும் நாம் காண்கிறோம்.

கோயில் சுவர்களுக்குட்பட்ட இடம் தெய்வ பூமி என்பதே இந்து மத நம்பிக்கை. இறைவன் வேறெங்கும் நிலை கொள்ளவில்லை என்று இதற்கு அர்த்தம் கொள்ள வேண்டாம். செருப்பைக் களைந்து கோயிலுக்குள் நுழையும் பக்தரின் பாதங்கள் இயல்பாகவே காந்த சக்தியுடைய தரையில் பதிகின்றன. மனிதனின் உடல் நலத்துக்கு உத்தமமானதெனக் கண்டறிந்துள்ள பூமியின் காந்த சக்தியின் ஒழுக்கு, பாதம் தரையில் பதியும் போது உடலுக்குள் செலுத்தப்படுகின்றது. அதுமட்டுமல்ல மூலிகைகளுடைய மலர்களும், இலைகளும் கலந்த தண்ணீர் விழுந்த பூமியானதால் கோயில் சுற்றுமுள்ள மண்ணுக்கு மருத்துவ குணங்களும் இருக்கலாம்.

இவையெல்லாம் மனதில் கொண்டு கர்வத்தையும், காலணியையும் களைந்து இறை தரிசனம் செய்யும் பொது நவீன சாஸ்திரம் விவரிக்கின்ற "மாக்னடிக் தெரபி" அல்லது காந்த சிகிச்சை நமக்குள் நடக்கின்றது.

# கோயில்களும் கலைகளும்

திருமதி. தேவகுமாரி ஹரன் - ஆராய்ச்சி அலுவலர்

சமயம் என்பது மனிதனை மனிதனாக மாற்றுவது எனத் தமிழில் பொருள்படும். இச்சமயத்தை வளர்ப்பதற்கு சமய அடிப்படையிலும், தத்துவ அடிப்படையிலும் உருவாக்கம் பெற்றனவே திருக்கோயில்கள். இத்திருக்கோயில்கள் மனிதனது ஆத்மீக உணர்வுகளை வளர்க்கும் நிலையங்களாக மாத்திரமன்றி இசை, நடனம், சிற்பம், ஓவியம், கட்டிடக் கலை ஆகியவற்றை வாழ்விக்கும் பொது நிலையங்களாகவும் விளங்கின. சமுதாயமும், சமயமும் கொண்ட பிணைப்பினால் கோயிலைத் தழுவிய குடிமக்களும், குடிகளைத் தழுவிய கோயிலுமாகச் சிறப்புப் பெற்றன.

அகப்பிணியின்றி புறப்பிணியைத் தீர்க்கும் மருத்துவ மனைகளாகவும் கோயில்கள் விளங்கின. இவற்றினால் கோயில்களின் சிறப்பினை உணரலாம். பிறவிப்பெருங்கடலில் இருந்து உயிர்களை கரையேற்றுவிக்கும் துறைகளாக பயன்படுவதால் கோயிலைத் துறைகள் எனவும் அழைத்தனர். கோயில்களுக்கு பல்வேறு பெயர்கள் வழங்கப்படுகின்றன. தேவகிருகம், தேவாகாரம், தேவாயதனம், தேவாலயம், தேவகுலம், தேவமந்திரம், தேவபவனம், அர்சாகிருஹம் என்பனவாகும். ஆலயம் என்பது ஆன்மா அடங்கும் இடம் என்பதுடன் ஆணவம் அடங்கும் இடம் என்றும் பொருள்படும். அர்ச்சாகிருஹம் என்பது வழிபடும் இடம் எனப் பொருள்படும். இக்கோயில்கள் இறைவனுக்காக அமைக்கப்படும்பொழுது இக்கோயில்களை அடிப்படையாகக் கொண்டு சிற்பக்கலை, கட்டடக்கலை, ஓவியக்கலை என்பன வளர்ச்சி பெற்றன.

கோயில் கட்டிடக் கலையில் பண்டுதொட்டே அழகுறும் விதத்துடன் முன்னேறிவந்த இந்துக்கள் இறைவனுக்கும் பெரிய அளவில் திருக்கோயில்கள் பலவற்றைக் கட்டினர். அவர்களின் கோயில் அமைப்புக்களை பல வகையாக காணலாம். இவற்றுள் மூவகைப் பிரிவுகளை (பாணிகளை) குறிப்பிட முடியும். நாகரம் எனப்படும் கோயில் பிரிவானது விமானம் சதுரவடிவமானதாகவும், வேசரம் வட்ட வடிவமானதாகவும், திராவிட முறையானது எண்கோண முறையிலும் அமையும். திராவிட சிற்ப முறையில் தமிழர்களும், ஹொய்சாலர்களும், சாளுக்கியர்களும் கோயிலை எழுப்பியுள்ளனர். சங்ககாலம் தமிழர் வரலாற்றில் முக்கியமான காலப்பகுதியாகும். இக்காலத்தில் மண்ணாலும், செங்கற்களாலும் கோயில்கள் எடுப்பிக்கப்பட்டன. இவ்வகைக் கோயில்கள் மண்டளிகள் என அழைக்கப்பட்டன. பல்லவ காலப்பகுதியில் மலையில் குடையப்பட்ட கோயில்கள் அமைக்கப்பட்டன. இவை குடபோகங்கள் என அழைக்கப்பட்டன. அதேபோன்று தனிப்பாறைகளில் செதுக்கப்பட்ட கோயில்கள் மலைத் தளிகள் எனவும், கருங்கற்களையடுக்கி கட்டப்பட்ட கோயில்கள் கற்றளிகள் எனவும் வழங்கப்படுவனவாயின.

கோயில்களே மக்கள் வாழ்க்கையின் இதயத்தானமாக வழங்கப்படுவனவாயின. பல்லவர் காலத்து குகைக் கோயில்களும், குடைவரைக் கோயில்களும், கற்றளிகளுமாக தோன்றிய கோயில்கள் சோழர் பாண்டிய காலத்தில் கோயில் அமைப்பாலும், சிற்ப

வேலைப்பாட்டாலும் மிகவும் வளர்ச்சி கண்டன. பின்னர் விஜயநகர நாயக்க மன்னர்கள், ஹொய்ல மன்னர்கள் மராட்டிய காலத்தில் சிற்ப அமைப்பில் வளர்ச்சி பெற்றன.

கோயிலைப் பொறுத்தே இந்துக்கள் தம் உடலையும், உள்ளத்தையும், ஆன்மீகத்தையும் வளர்த்துக் கொண்டனர். இதனால் அவர்களின் சிந்தனை விரிவிற்கேற்ப கோயில்களும் அமைந்தன. கோயில் கோபுர வழிபாட்டினைத் தூவ லிங்க வழிபாடாகவே மதித்தனர். திருவீதி வலம் வருவதாலும், திருச்சுற்றாலை வழியே கருவறையை நாடி நடத்தலால் அவர்களுக்கு இயல்பாகவே உடற்பயிற்சி கொள்ள வழி ஏற்படுகின்றது. தியான மண்டபங்களிலே அமர்ந்து சிந்திப்பதால் - தியானிப்பதால் மன நிறைவு ஏற்படுகின்றது. இவ்வாறு ஆலயங்கள் ஆன்மீக நலத்திற்கு வாய்ப்பு அளிக்கின்றன.

மக்களின் உடலமைப்பை அடிப்படை-யாகக் கொண்டே கோயில்கள் அமைக்கப்பட்டன என மக்கள் கொண்டனர். மனித உடலானது தோல், இரத்தம், இறைச்சி, எலும்பு மச்சை, வேதை, சுவேத நீர் என்னும் ஏழுவகைத் தாதுக்களால் அமைந்தது போல கோயிலும் செங்கல், வெண்கல், கருங்கல், சுண்ணாம்பு, மணல், நீர், காரம் ஆகிய ஏழு வகைப் பொருள்களால் உருவாக்கப்பெறும் என்று சிற்பிகள் கூறுவர். மக்கள் தம் வசதி வாய்ப்பிற்கேற்ப கோயிலமைப்பினைக் கொண்டனர். முதலில் கருவறையையும் அதன் முன் அந்தரான மண்டபத்தையும் அமைத்தனர். பின்னர் மக்களின் தத்துவ உணர்வுகளும், வசதிகளும் பெருகப் பெருக அர்த்த மண்டபமும், அந்தராள மண்டபத்திற்கு எதிரே பல அங்கங்களையுடைய மகா மண்டபம், ஸ்நாபன மண்டபம், நிருத்த மண்டபம் ஆகிய மண்டபங்களை கட்டினர். இவ்வாறு கட்டப்பெற்ற 06 மண்டபங்களும் மூலாதாரம் தொடங்கிய ஆறு ஆதாரங்களாக மதித்துப் போற்றினர்.

## கருவறை

கருவறை அமைப்பைக் கட்ட உடலின் 06 உறுப்புக்களை ஆதாரமாகக் கொண்டனர். கருவறையின் பகுதிகளாகிய அதிஷ்டானம், கருவறை, பிரஸ்தாரம், கண்டம், பண்டிகை, தூபி என்பன மனித உடலின் அடி, உடல், தோள், கழுத்து, தலை, முடி ஆகியவற்றுடன் ஒப்பிடப்படுகின்றது. ஆலயத்தின் அடிப்பாகம் அதிஷ்டானம் எனப்படும். இது கட்டடத்தின் அடித்தளமாகும். ஆலயத்தூண்களையும், சுவர்களையும் தாங்கி நிற்கும். அதிஷ்டானம் பல படைகளையுடையது. உபானம், பத்மம், ஜகதி, குமுதம், கல், கம்பம், பட்டிகை என்பன அதிஷ்டான படைகளாகும். ஆலயத்தின் மூலஸ்தானம் கர்ப்பகிருஹம் எனப்படும். இதுவே கோயிலின் புனிதமான பகுதியாகும். ஆலயத்திற்குரிய மூலவரின் படிமம் இங்கு ஸ்தாபனம் செய்யப்பட்டிருக்கும். இதன் வெளிப்புறச்சுவர்களில் மூன்று பாகங்களிலும் மூன்று பக்கங்களிலும் கோஷ்ட பஞ்சரங்கள் (தேவகோட்டங்கள்) அமைந்திருக்கும். இவை விக்கிரகங்கள் வைப்பதற்காக அமைக்கப்பட்டன.

தென்புறச் சுவரில் உள்ள தேவகோட்டத்தில் தட்சிணாமூர்த்தியும், மேற்கே லிங்கோற்பவரும், வடக்கே பிரமன் அல்லது துர்க்கை விக்கிரங்களையும் அமைப்பர். கர்ப்பகிருஹத்திற்கு முன்னால் அர்த்த மண்டபம் அமைந்திருக்கும். இதனைச் சோழர்கால சாசனம் ஒன்று திரு இடைக்கட்டு என்று குறிப்பிடுகின்றது. சில கட்டடங்களிலே அர்த்த மண்டபமும், கர்ப்பகிரஹத்தை ஒட்டியதாய் அமைந்திருக்கும். ஆனால் திருவையாறு பஞ்ச நதீஸ்வரர் கோயில், கீழையூர் அவனி, கந்தர்ப்ப ஈஸ்வரம் ஆகியவற்றில் இரண்டும் தனித்தனியாய் அமைந்திருந்தன. பிற்காலத்தில் அவற்றுக்கிடையே

அந்தராளத்தை அமைத்து இரண்டையும் தொடுத்து விட்டனர். அர்த்த மண்டபத்தின் முன் இருப்பது மகா மண்டபம் ஆகும். கர்ப்பகிருஹத்திற்கு தெற்கு நோக்கியவாறு தேவியின் ஆலயம் அமையும். அதற்கும் கருவறையும், அர்த்த மண்டபமும் உண்டு. இரண்டிற்கும் பொதுவாக பொதுமண்டபம் அமையும். தேவிக்கு தனி ஆலயம் அமைக்கும் வழக்கம் பிற்பட்ட காலத்தில் ஏற்பட்டது என்பர்.

## விமானம்

விமானம் என்னும் சொல் கருவறையின் மேல்பகுதியை குறிக்கும். உபானம் முதல் தூபி வரையுள்ள ஆலயம் முழுவதும் விமானம் எனப்படும் என்பதைத் தஞ்சைப் பெருவுடையார் கோயில் சாசனங்கள் மூலம் அறிய முடிகின்றது. தானும் தனது தமக்கையாரும் வழங்கிய தானங்களை கோயில் விமானத்திலே சிவலோகமாக எழுதுமாறு கட்டளையிட்டதாக முதலாம் இராஜராஜன் குறிப்பிடுகின்றான். அந்த சாசனங்கள் எல்லாம் கர்ப்பகிருஹச் சுவர்களிலும், அதிஷ்டானப் பகுதிகளிலும் எழுதப்பட்டிருக்கின்றன. ஆதலால் விமானம் என்பது கட்டடத்தின் முழுப்பகுதியினையும் குறிக்கும் என்பது தெளிவாகின்றது. விமான தேவதைகள் கர்ப்ப கிருஹத்தின் சுவர்களிலுள்ள தேவகோஷ்டங்களில் மட்டுமன்றி மேற் தளங்களிலும், கிரீவத்தின் தேவ-கோஷ்டங்களிலும் அமைக்கப்படும்.

கோயில்களின் பெயர்கள் விமானங்களின் அமைப்பைக் கொண்டே ஏற்பட்டுள்ளன. கரகக் கோயில், ஞாழற் கோயில், கொகுடில் கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில் என ஆறுவகைக் கோயில்கள் அப்பரது தேவராங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆயினும் சிற்ப நூல்கள் விஜயம், ஸ்ரீபோகம், ஸ்ரீவிலாசம், ஸ்கந்த காந்தம், ஸ்ரீகரம், ஹஸ்திபிரஷ்டம், கேசரம் என ஏழுவகைக் கோயில்களைக் குறிப்பிடுகின்றன. கோயிலின் தூபியினாது ஐம்பூதங்கள் தொடங்கிய 36 தத்துவங்களாலும் உருவான இதயத்தாமரையில் பரமன் எழுந்தருளியிருக்கும் உண்மையைக் குறிக்கும் என்பர். தூபியும் கோபுர தூலலிங்கமென்றும், விமானத்துள் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கம் சூக்குமலிங்கமென்றும் அதற்கு முன் உள்ள பலிபீடமே பத்திரலிங்கமென்றும் திருமூலர் கருதுகின்றார். கோயிலின் அமைப்பு அகன்று விரிந்த அடித்தளத்திலிருந்து மேலே செல்லச் செல்ல குவிகின்றது. தூபியின் முடிவடைவதைப் பரும்பொருளினின்றும் மனித சூக்குமத்தை அடைய வேண்டுமென்பதை உணர்த்தும் என்றும், உச்சியில் காணப்பெறும் அமுத கலசம் பிறப்பற்ற பெரும் பிறவியை உணர்த்துமென்பர்.

## கோபுரம்

கோபுரம் தென்னிந்தியக் கட்டிடக்கலை அமைப்பின் சிறப்பான அம்சமாகும். நாகர முறையிலே அமைந்த கோயில்களிலே கோபுரங்கள் காணப்படுவதில்லை. அது பிரதான வாசலில் அமைக்கப்படும் அலங்காரத் தோற்றமான பிரமாண்டமான அமைப்பாகும். 12ஆம் நூற்றாண்டு வரை தென்னிந்தியாவிலே கோவிலின் மூலஸ்தானமாகிய விமானத்தையே அளவிற் பெரியதாகவும், வனப்புமிக்கதாகம், அலங்கார தோற்றம் கொண்டதாகவும் அமைத்தார்கள். விமானத்தின் வளர்ச்சியின் உச்ச வளர்ச்சியினை தஞ்சை பெருவுடையார் கோயிலில் காணலாம். 12ஆம் நூற்றாண்டு முதலாக விமானங்களை விட கோபுரங்கள் வளர்ச்சி பெற்றன.

திருக்கோயிலிலுள்ள திருக்கோபுரம் மனிதனுடைய மயக்கத்தை நீக்கியருள வல்லதாய் விளங்குகின்றது. தம் உடம்பையே தாமாகக் கொள்வது மயக்கம். அந்த மயக்கத்தை நீக்கி "மனித உடம்பல்ல ஆன்மா" என்று

உண்மையை இடைவிடாது உணர்த்தி நிற்பது கோபுரம். ராஜகோபுரம் தூலலிங்கம் எனப்படும். இக்கோபுரத்தின் அமைப்பைக் கவனித்தால் மானிட வடிவங்கள், தேவர் வடிவங்கள், பறவைகள், விலங்குகள் அனைத்தையும் காணலாம். இது உலக உற்பத்தியில் இவற்றிற்கு எல்லாம் இடமுண்டு என்பதை விளக்குகின்றது. கோபுரத்தின் வாயில்கள் ஒற்றைப் படை எண்ணில் அமைந்திருக்கும். மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று என அமைந்திருக்கும். மூன்று வாயில் ஜாக்கிரத, சொப்பன, சுஷிப்தி என்ற மூன்று அவத்தைகளையும், ஐந்து வாயில்கள் ஐம்பொறிகளையும் மனம், புத்தி என்ற இரண்டும் சேர்த்த ஏழினையும், ஒன்பது வாயில்கள் அந்த ஏழோடு சித்தம், அகங்காரம் என்ற ஒன்பதினையும் குறிப்பவை. சிவாகம வாக்கியத்தின்படி இறைவன் கோபுரத்திலும், விமானத்திலும், வாயிற்படியிலும், மண்டபங்களிலும், பலிபீடத்திலும், மூலலிங்கத்திலும் எப்பொழுதும் வெளிப்பட்டிருக்கின்றார் என்பதால் தூலலிங்கமான கோபுரத்தை வணங்கியே உட்சென்று இறைவனை வழிபடுதல் வேண்டும் என்பது விதி.

## பிரகாரங்கள்

கோவில்களுக்கு அழகைக் கொடுப்பவை பிரகாரங்கள். இப்பிரகாரங்கள் வளரும்போது கோவிலைச்சுற்றி திட்டமிட்டமைக்கப்படும் நகரம் ஒன்று வனப்புடன் உருவாகின்றது. இதற்கு உதாரணமாக மதுரை மாநகரைக் கூறமுடியும். பிரகாரங்கள் 3, 5 என்ற முறையில் அமையும். பிரகாரம் 03 வகை உடம்பு, தூல சூட்சும், காரணம் என்னும் மூவகை உடம்புகளைக் குறிக்கின்றன. கோயிலை 3, 5 முறை சுற்றுவதற்கான காரணம் மூவகை உடம்புகளையும், ஐந்துவித தோசங்களையும் கடந்து இறைவன் விளங்குகின்றான் என்பதை நினைப்பதற்காகும். இவற்றைக் கடந்தால் இறைவனது சாமீப்ய நிலையை அடையலாம் என்னும் உண்மையை உணர்தல் வேண்டும்.

## பலிபீட தத்துவம்

கோபுரவாயிலைக் கடந்து உள்ளே செல்கின்ற மனிதன் நன்மை, தீமைகளைப் பகுத்தறியும் உணர்வினனாவான். எனவே அவன் இச்சைகளால் காம, குரோத, லோபமோக மதமாச்சாரியங்களாகிய மிருக இச்சைகளால் என்றும் துன்பமேயன்றி இன்பமில்லை என்பதை உணர்ந்து பலிபீடத்தை நெருங்கியதும், இச்சைகளாகிய மிருகங்களைப் பலி கொடுக்கும் பொருட்டே கீழே விழுந்து வணங்குகின்றான். இச்சைகளைப் பலி கொடுத்து எழுந்த அவன் அந்தரான்மா நிலையை அடைகின்றான். இந்த அந்தரான்மா நிலையை உணர்த்துவது பலிபீடம்.

கொடிமரம் தத்துவான்மா நிலையினை உணர்த்துவது. கொடிமரம் திருக்கோயில் மூலஸ்தானத்துக்கு நேராக நிறுத்தப்படுகின்றது. கொடிமரத்தின் முன் 3,5,7 முறைகள் பணிந்து வழங்குதல் வேண்டும்.

மேற்கையோ, தெற்கையோ வணங்கும்பொழுது கால்நீட்டுதல் வேண்டும். தரையில் வீழ்நது வணங்கும்போது உடம்பில் எவ்வளவு தூசிகள் படிகின்றனவோ அவ்வளவு வருடகாலம் நாம் வாழ்வோம் என்று வேதம் கூறுகின்றது என்பர்.

## நந்தி

கொடிமரத்திற்கு அடுத்த நிலையில் இருப்பது, இறைவன் வாகனமாகிய நந்தியெம்பெருமான். வாகனம் எதுவாயினும் அது சீவான்மாவைக் குறிக்கின்றது. மூலப்பொருளாகிய இறைவனை நோக்கியவாறு வாகனம் அமைந்திருக்கும் பதியை அடைய வேண்டியது பசுவின் குறிக்கோள். பதியைச் சென்றடைவதற்கு எல்லாக் காலத்திலும் இறைவன் பக்கத்திலேயே

இருத்தல் வேண்டும் என்ற கோட்பாட்டை வாகனம் விளக்கி கொண்டுள்ளது. திருச்சுற்றில் நடந்து வரும் பக்தன் திருக்கோயிலினுள்ளிருக்கும் இறைவனையும் அவனைப் பார்த்த வண்ணம் இருக்கும் வாகனத்தையும் சேர்த்தே வலம் வருகின்றான்.

திருக்கோயிலைச் சுற்றி வலம் வருங்கால் உள்ளிருக்கும் இறைவன் தன் வலப்புறத்தில் இருக்குமாறு பார்த்துக்கொள்கிறான் பக்தன். இதுவே வலம் வருதல் என்பதன் பொருள். இது பிரணாயமத்தின் சின்னமுமாகும். ஒழுங்குபட்ட மேலான மனம் பிரணாயாமத்திற்குத் தகுதியுடையதாகின்றது. மனத்தகத்து உண்டாகும் மாறுதலுக்கு ஏற்ப சுவாசிக்கின்ற காற்றில் வேறுபாடு உண்டாகின்றது. கீழான மனப்பான்மையுடையவருக்கு சுவாசத்தின் போக்குவரவு அல்லது பிரண்யாமம் முறையாக நிற்கின்றது. தங்குதடையின்றி அமைதியாக வலம் வரும்போது பிரணாயாமமும் ஒழுங்காக நிகழ்ந்து விடுகின்றது. சூக்குமமான உடலின் கண் நிகழும் நிகழ்ச்சி பிரணாயாமம் வலம்வருதல் என்னும் உடலின் தூலமான செயல் அதன் புறச்சின்னமாக அமைந்துவிடுகின்றது. வலம்வருதலின்போது விநாயகருக்கு ஒரு முறையும், சூரியனுக்கு 02 முறையும், சிவனுக்கு 03 முறையும், அம்மனுக்கு 04 முறையும் வலம்வருதல் வேண்டும்.

கோயிலுக்குச் செல்லும் பொழுது வெறும்கையுடன் செல்லக்கூடாது என்று கூறப்படுகின்றது. அவ்வாறு செல்லும்பொழுது தேங்காய், பழம், பாக்குடன் செல்லுதல் வேண்டும் என்பர் பெரியோர்கள். இதன் பொருள் பின்வருமாறு அமையும்.

**தேங்காய்** - மும்மலங்களால் பீடிக்கப்பட்ட ஆன்மா.

**பழம்** - அடியார்களின் நல்வினைப் பயனைக் குறிக்கும்.

**வெற்றிலைப் -பாக்கு** - அவருடைய முக்குணங்களைக் குறிக்கும்.

**கற்பூரம்** - இறைவனோடு இரண்டறக் கலக்கும் நிலையை உணர்த்தும்.

இப் பொருட்களை கொண்டு சென்று ஆசாரியரிடம் கொடுத்து அவர் அனுமதியுடன் இறையருள் பெறுதல் என்பதாகும்.

“கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டா” எனப் பண்டு தொட்டே இந்துக்கள் கூறிவருகின்றனர். அப்பரடிகள் “திருக்-கோயிலில்லாத திருவிலூரும்” எனக்கூறிச் செல்லுதலால் கோயிலைத் தம் வாழ்க்கையுடன் தமிழர்கள் பிணைத்துக் கொண்டார்கள். வரலாற்று அடிப்படையிலே நோக்குகையிலே நாடாண்ட மன்னர்களும், வள்ளல்களும், பெரும் பொருட் செல்வர்களும் அழகுக்கலைகளை வளர்க்கும் பண்ணைகளாகிய கோயில்களை பராண ஆகம அடிப்படையில் தோற்றுவிப்பதில் நாட்டம் கொண்டிருந்தனர். திருக்கோயில் நாகரிகத்தில் சிறப்புறுந் தமிழ்நாட்டில் கி.பி ஏழாம் நூற்றாண்டிற்கு முன்னரும் கோயில்கள் பல திறத்தனவாக அமைந்திருக்கின்றன. ஆலமரத்தைச் சுற்றிலும் செங்கல்லால் ஆன அமைப்பு இருந்ததையும், அம்மரத்திற்கு படையல் வைத்து வழிபட்டதையும் பண்டைய தமிழ் இலக்கியமான அகநானூறு கூறுகின்றது. இவற்றை கற்கோயிலாக மாற்றிய பெருமை பல்லவரைச்சாரும். மலைகளையே குடைந்து கோயில்களாக மாற்றிய அருங்கலையைத் தமிழகத்துக்கு அறிமுகப்படுத்திய பெருமை அவர்களுக்கே உண்டு. கடினமான பாறையில் குடைவரை அமைப்பதும், அதில் சிற்பங்களை செதுக்குவதும் மகேந்திரனின் பாணி புதிய கண்டுபிடிப்பாகும். இதன்பின்னர் கட்டுமான கோயில்கள் அமைக்கப்பட்டன. சோழர்காலத்தில் கோயில்கள் கட்டுவதே தொழிலாக மாறியது. பெரிய விமானங்களைக் கொண்ட

கற்கோயில்கள் சோழர் காலத்தில் எழுந்தன. சோழப் பேரரசின் பிற்காலத்திலேயே கோயில்களின் நாற்புறங்களிலும் உள்ள நுழைவாயிலின் மீது ஏழு நிலை மாடங்கள் கொண்ட கோபுரங்கள் அமைக்கும் பழக்கம் ஏற்பட்டது. (சிதம்பரம் வடபுறவாயில் விக்கிரம சோழன் வாசல்) விஜய நகர காலப்பகுதியில் கோவிலை அண்டி பல மண்டபங்கள் அமைக்கும் பழக்கம் ஏற்பட்டது.

கோயில்களை அடிப்படையாகக் கொண்டு சிற்பக்கலைகளும் வளர்ச்சி பெற்றன. தெய்வத் திருவுருவங்கள் பல அமைக்கப்பட்ட இவை கலைவனப்புடன் அமைக்கப்பட்டன. மரத்தாலும், சுதையாலும் உருவங்களைப் படைத்து களித்தனர். பொன்னாலும், வெள்ளியாலும், கலப்பு உலோகங்களாலும் சிற்பங்களை கண்டனர். அவ்வாறான சிந்தனையால் உருவாக்கப்பட்டவையே பஞ்சலோக சிலைகளாகும். பஞ்சலோக சிலையில் பட்ட நீர் (அபிடேக தீர்த்தம்) மக்களின் நோய் தீர்க்குமென்ற நம்பிக்கையைப் போல நவபாஷாணச் சிலைமேல் பட்ட நீரும், பஞ்சாமிருதமும் நோய் தீர்க்குமெனக் கருதினர்.

பல்லவ காலத்தில் அமைக்கப்பட்ட சிற்பங்கள் பிரசித்தி பெற்றவை. மாமண்டூர் சிற்பங்கள், மகிஷாசுரமர்த்தினி, கங்காவதரணம், வராக அவதாரம், சப்த மாதர் போன்ற பல சிற்பங்கள் பிரசித்திபெற்றவை. சோழர்காலத்து செப்புத்திரு மேனிகள் பிரசித்தமானவை. சோழப்பெருமன்னர்கள் தாம் எடுப்பித்த கோயில்களுக்கு செப்புத் திருமேனிகள் பலவற்றை செய்தளித்தனர். தமிழகம் தோற்றுவித்த கலைப்படைப்புக்களில் ஆடல்வல்லான் நடராசமூர்த்தியாக உள்ள உருவே உலகோர் அனைவரின் கவனத்தை கவர்ந்தது. சோழப் பெருமன்னர் காலத்தில் துவாரபாலகர் சிலைகளும், பெரிய நந்திகளும் சோழர் கலைக்கு எடுத்துக்காட்டாகும். விஜயநகர காலப்பகுதியும் சிற்பக்கலைக்கு சிறப்பான காலப்பகுதியாகும். கிருஷ்ணாபுரத்தில் உள்ள சிற்பங்கள் மிகச்சிறப்பு பெற்றவை. அதெபோன்று நாயக்கர் கால மண்டபங்களில் தூண் சிற்பங்களும் வனப்புற அமைக்கப்பட்டன. சிறப்பாக குதிரை, யானை மீதும் அமர்ந்தோடும் வீரர்களின் சிற்பங்கள் உயிரோட்டமானவை.

தெய்வப் படிமங்களில் திருக்கோலங்களை ஆசனங்கள் என்று அழைப்பர். அவை ஸ்தானகம், ஆசனம், சயனம், ஸ்தானாசனம், சயனாசனம் என 5 வகைப்படும். பங்க இலட்சணம் பின்வருமாறு கூறப்படும். ஆபங்கம், சமபங்கம், அதிபங்கம் ஆகும். கோயில்கள் ஓவியக் கலையின் உறைவிடங்களாகவும் விளங்கின. புராண இதிகாசக் கதைகளை மக்களுக்கு எடுத்தியம்புவனவாக இவை பெரும்பாலும் காணப்பட்டன. ஆன்மீக நெறியினை வளர்க்க இவை பெரிதும் உதவின. இத்தகைய ஓவியங்களை திருவண்ணாமலை, திருவரங்கம், தஞ்சை, திருநீழிமலை, சிதம்பரம், மதுரை போன்ற பல கோயில்களில் ஓவியக்கலையின் மாண்பினைக் காணக்கூடியதாகவுள்ளது.

## திருக்கோவில்களும் இசையும்

இசை வடிவாய் அமர்ந்தவன் இறைவன். அவன் ஒலி வடிவா இருக்கின்றான் என்பதை அப்பரடிகள்,

“ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே
உலகுக்கு
ஒருவனாய் நின்றாய் நீயே

என்றும்

“ஏழ் இசையால் இசைப் பயனாய்

என்று சுந்தரரும்

பாடியுள்ளனர். இறைவனை வழிபடுவதற்கென்றே சில வழிமுறைகள் உள்ளன. அவற்றுள் இசை முறைமையும் ஒன்றாகும். இசையால் இறைவனை வழிபடுதலே சிறந்ததும், முதன்மையானதும்

ஆகும். இசையை அறிந்தால் இறைவனை அறியலாம் என்பது ஆன்றோர் வாக்கு.

"நாதம்பலத்தில் லயித்திடுமானால்
நாதத்தை அறிய வரத்தினை
அடைந்திடலாம்"

இது திருமூலர் வாக்கு. தமிழர்தம் இசைப்பண் என்று பெயர் வைத்தனர். பண் என்னும் பதம் பண்ணுதல் என்ற வினையடியாக பிறந்து பிடறு, நெஞ்சு, நாக்கு, மூக்கு, அண்ணாக்கு, உதடு, பல் ஆகிய எட்டினாலும்: கிரியையாகியை எடுத்தல், படுத்தல், கம்பிதம், நவிதம், குடிலம், ஒலி, உருட்டு, நாக்கு ஆகிய எட்டினாலும் பண்ணப்படுவதால் பண் என்ற பெயராகின்றது. பண்ணிசை என்பதனை பண்பட்ட சமூக அமைப்பில் இருந்து வெளிப்பட்ட இசை மரபு எனவும் கொள்ளலாம். தமிழ் இலக்கியங்கள் பண்களை வகைப்படுத்தியுள்ளன. அவை பாலைப்பண் (பாலை), குறிஞ்சிப்பண் (குறிஞ்சி), மருதப்பண் (மருதம்), முல்லை (முல்லை), நெய்தல் (நெய்தல்). இப்பாகுபாடு பிற்கால இசையில் இருக்கவில்லை. சங்ககால மக்கள் இசைக்கருவிகளையும் பயன்படுத்தியுள்ளதுடன் பண்கள் பாடப்படுவதற்குரிய காலத்தையும் கண்டறிந்தார்கள். செல்வழி (மாலை), பாலை (நண்பகல்), சாதாரி (மாலை), விளரி(12-3), மருதம் (விடியல்) இவை இறைவனை ஏத்திப் பாடுவதற்கு பயன்பட்டது.

தமிழரின் இசையெழுச்சிக் காலம் என கி.பி 7 - 9ஆம் நூற்றாண்டினைக் கூறலாம். தேவார திவ்விய பிரபந்த இசையானது சைவ வைணவ நாயன்மார், ஆழ்வார்களால் அருளப்பட்டு, இறைவழிபாட்டுக்கு உகந்ததாக ஆன்மீக சிந்தனையை வழங்கியதாக பண்சுமந்த பாடல்களாக திகழ்ந்தன. பல்லவர் காலத்தே எழுந்த பக்தி இலக்கியமான தெய்வீக திருமுறைகளின் தோற்றம் முக்கியமானதாகும். பல்லவர்காலத்தே கலைகள் வளர்ச்சியடைந்தன. கோயில்களே கலைகளின் இருப்பிடங்களாக இருந்தன. கோயில்களில் அருட்சான்றோர் அருளிய பாசுரங்கள் இசைக்கருவிகளுடன் பாடப்பட்டன. திருப்பதியில் இசைக்கருவிகளுடன் விண்ணப்பம் செய்ததற்கு இசைவாணர்களை நியமித்தமை பற்றிச் சோழர் கல்வெட்டுக்கள் கூறுகின்ற பராந்தகன் முதலே திருப்பதியம் பாடுவோருக்கு தானங்கள் வழங்கப்பட்டமை அறியமுடிகின்றது. ராஜேந்திரன் காலத்தில் தேவாரநாயகம் என்னும் அதிகாரி குறிப்பிடப்படுகிறார். இதிலிருந்து இந்த வேலைகளை செம்மையான முறையில் நடைபெறுவதை கண்காணிக்க தனியான ஒரு அரசாங்கத்துறையே முறைப்படி நடந்து வந்தது. விக்கிரம சோழன் காலத்தில் திருவேங்கை வாசல் இறைவன் முன்னர் இசை நலஞ்சான்ற கூத்துக்கள் பல நடித்ததற்காக ஏழு நாட்டு நங்கை என்பவளுக்கு விளைநிலத்தைத் தானமாக அளித்தமை பற்றிக் கல்வெட்டு உள்ளது.

திருக்கோவில்களில் மட்டுமே காணப்பெறும் பஞ்சமூர்த்தி தொடர்பான கவுத்துவமும், நவசந்தி கவுத்துவமும் தனித்தன்மையான கோயிலிசை மாட்சிக்கு சான்றாகும் என்பர். திருக்கோயில்களில் இன்ன இன்ன காலங்களில் இன்ன இன்ன பண்கள் இசைக்க வேண்டும் என மரபுகள் கூறுகின்றன. கோயில் இசைகருவிகளாக சங்கு, நாதசுரம், பஞ்சமுக வாத்தியம், கொம்பு, சேமக்கலம், திமிலை, துந்துபி வேறு போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன. மணியோசை ஒலிக்காத கோவிலே நமது சமயத்தில் இல்லை. எல்லாம் பூசை வேளைகளிலும் தேவர்களைக் கூவியழைப்பதற்கும், அரக்கர்களைத் தூர விரட்டுவதற்கும் மணி ஒலி உண்டாக்கப்படுகின்றது. தேவாரங்களில் 103

பண்கள் குறிப்பிடப்படுகின்றன. அவற்றில் 23 பண்களே தேவாரங்களில் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றில் அந்தாராளன் குறிஞ்சிப் பண் ஒரு பதிகத்திலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது.

## நாட்டியக்கலை

கோயில் அம்சமாக வளர்க்கப்பட்ட கலை நாட்டியக் கலையாகும். கோயில் சந்நிதானங்களிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் சிறப்பாக வளர்க்கப்பட்ட கலை. கோயில்களில் இக்கலையினை வளர்க்கும் பெண்கள் பல பெயர்களால் அழைக்கப்பட்டனர். இவர்கள் பதியிலார், தேவரடியார், கூத்தியர், தனிச்சேரிப்பெண்டிர் என அழைக்கப்பட்டனர். இவ் நடன மாதர்கள் கோயிலில் வீற்றிருக்கும் அடிமைகளாக அர்ப்பணித்து கோயில் நடையிலேயே வாழ்வது வழக்கம். இந்நாட்டிய மங்கையர் பற்றி தேவாரங்களில் செய்திகள் காணப்படுகின்றது. திருவீழிமிழலைப்பதிகம் இதற்கு உதாரணமாகும்.

தேவாலயங்களில் கன்னிகையர் மட்டுமல்லாமல் ஆண் நடிகர்களும் பல ஆட்டங்களை நடத்தி வந்தனர். கடவுள் வழிபாட்டிற்கும், சிறப்பாய் திருவிழாக் காலங்களிலும் தேவ சம்பந்தமான கதைகளை இவர்கள் ஆடிக் காண்பித்து வந்தனர். இவர்களுக்காக சாக்கைக் காணி, நிருத்ய போகம் என்ற மான்யங்கள் விடப்பட்டன. இவர்களுடைய நாட்டியத்திற்காக கோயிலில் நாட்டிய மண்டபம், நடமந்திரம், கூத்தம்பலம் என்று தனியிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. தஞ்சை, சிதம்பரம், கும்பகோணம் முதலிய கோயில்களில் சிறப்பாக கோபுரங்களில் நாட்டிய நிலைகள் செதுக்கப்பட்டுள்ளன. நித்ய பூஜையிலே கடவுளுக்கு அளிக்கப்படும் பதினாறு உபசாரங்களிலே நாட்டியமும் ஒன்று.

கோயில்கள் கலைகளின் இருப்பிடாக மட்டுமன்றி, வளர்ப்பனவாக மட்டுமன்றி அப்பகுதியில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவனவாகவும் காணப்பட்டன. இதற்காக கோயில்களின் நிதி பயன்பட்டுள்ளது. திருக்கோயில் என்பது கற்களால் கட்டப்பட்ட கட்டடம் என்பது மாறி அதுவே சிறு நகரமாக விளங்கியது. கோயில்கள் அவ்வூர் மக்களின் அரசியல், சமூகம், பொருளாதாரம் ஆகிய பல்வேறு துறைகளைச் சார்ந்த பல்வேறு இயக்கங்களிலும் பங்குகொண்ட சமூக நிறுவனங்களாக திகழ்ந்தன. கோயில்கள் கல்வி நிலையங்களாகவும், மருத்துவ நிலையங்களாகவும், ஏழையர்க்கு அன்னம் பாலிக்கும் இடங்களாகவும் அவை திகழ்ந்தன.

புதிய நிலங்கள் உழவுக்கு உட்படுத்தப்பட கோயில்கள் உதவின என்பதை ஸ்ரீரங்கம் கோயில் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. திருநெடுங்களம் கோயில் விளைநிலங்களாக மாற்ற நடவடிக்கை எடுத்த "குடிநீங்கா தேவதானமாக அளிக்கப்பட்ட நிலம் பயிர் செய்வதற்கு ஏற்றவாறு செய்யப்பட்டதை காடுவெட்டி கொண்டு உசர்ப்பலி உசர்க்கவும், குழிப்பிலி குழிக்கவும் பெறுவதாக" என்று கல்வெட்டு குறிக்கின்றது. பல சோழர் கல்வெட்டுக்களில் இருந்து ஊரவையினர் கோயில்களிடம் இருந்து கடன் பெற்று பின்னர் திருப்பி தர இயலாத நிலையில் கோயில்களுக்கு நிலங்களை அளித்து கோயில்களுக்கு உரிமையான நிலங்களின் மேலுள்ள வரிகளை நீக்கியும் கடனை அடைத்ததாக தெரிகின்றது.

தஞ்சை மாவட்டம் புஞ்சை என்ற ஊரில் உள்ள கல்வெட்டு ஓர் அரிய செய்தியைக் குறிக்கின்றது. ஒருகாலத்தில் நிலங்கள் விளையவில்லை. பஞ்சம் ஏற்பட்டது. பஞ்சம் நீங்குவதற்காக அவ்வூர்க் கோயில் நகைகளை விற்றுப் பஞ்சம் தீர்த்தார்கள். பின்னர் பஞ்சம்

தீர்ந்து நாடு வளமானபோது முன்னர் விற்ற கோயில் நகைகளை மீண்டும் செய்து கொடுத்தார்கள். கோயில்களில் யாத்திரிகர்களுக்கு தினமும் அன்னதானம் வழங்கப்பட்டது. வழிப்போக்கர்களுக்கு உப்பும், விளக்கு எண்ணையும், மருத்துவ உதவியும் வழங்கியதை கோவிந்தப்புத்தூர் கல்வெட்டு கூறுகின்றது. அவிநாசி கோயிலில் மிகப் பெரிய இரண்டு, கல்தொட்டிகள் கிடக்கின்றன. பஞ்ச காலத்தில் அக்கல்தொட்டிகளில் கஞ்சி ஊற்றப்படும் என்றும் மக்கள் அக்கஞ்சியை குடித்தும் பசியாறினர் என்றும் தெரியவருகின்றது.

கோயில்கள் மிகப்பெரிய வேலைவாய்ப்பு நிறுவனங்களாக நிலவின. தஞ்சைக் கோயிலில் 609 பணியாளர்கள் இருந்துள்ளனர். பெருந்திருவிழாக்களின்பொழுது சுவாமி தூக்குவது, தேர் இழுப்பது, பந்தல் அமைப்பது போன்ற பல்வேறுவிதமான கோயில் வேலைகளைச் செய்வதன் மூலம் சாதாரண மக்களுக்கு வேலைகள் கிடைக்கப்பெற்றன. அதேபோன்று கோயில்கள் நீதி வழங்கும் நீதிமன்றங்களாகவும் திகழ்ந்தன. இதனை பெரியபுராணம் சுந்தரர் தடுத்தாற் கொண்ட புராணத்தின் மூலம் அறியலாம். கோயில்களில்தான் ஆவணக் காப்பகம் இருந்ததை அறியக்கூடியதாக உள்ளது. திருவண்ணாமலை தாமரைப்பாக்கம் கோவில் கல்வெட்டு ஒன்று ஓர் அரிய வழக்கு விசாரணையைக் கூறுகின்றது. இவ்வழக்கில் அண்ணன் தம்பியருக்கும் இடையே ஏற்பட்ட வழக்கில் ஒருவன் இறந்துவிட்டான். பெற்றோரைப் பார்க்க யாரும் இல்லாததால் கொலை செய்யப்பட்டவனுக்கு கோயிலில் நந்தா தீபம் ஏற்ற வேண்டும் என்ற அழகான தீர்ப்பு வழங்கியது.

புகழ்பெற்ற உத்திரமேரும் கல்வெட்டு குடவோலை மூலம் தேர்தல் நடத்துவதை தெளிவாகக் கூறுகின்றது. திருக்கோயில்கள் மருத்துவமனைகளாகவும் செயற்பட்டன. மருத்துவ மூலிகைகள் கோயில்கள் மூலம் வளர்க்கப்பட்டன. திருவாவடுதுறையில் உள்ள விக்கிரம சோழனின் கல்வெட்டு அவ்வூரில் மருத்துவக் கல்லூரி இருந்ததைக் குறிப்பிடுகின்றது. வீர சோழன் ஆதுலர்சாலை, சுந்தர சோழ விண்ணகர் ஆதுலர்சாலை என்பவை பெயர் தெரிந்த மருத்துவமனைகள். இவற்றின் செலவிற்கு மருத்துவக் காணி என்ற பெயரில் நிலங்கள் வழங்கப்பட்டன. இங்கு மருத்துவர் சல்லியக் கிரியை பண்ணுவார். மருந்து இடும் பெண்கள், நாவிதன் போன்றோர் பணிபுரிந்தனர். மருந்து கொண்டுவரப் பணியாளர்கள் இருந்தனர்.

திருக்கோயில்கள் மூலம் கல்விப்பணி நடைபெற்றது. எண்ணாயிரம் என்ற ஊரில் வேதப் பாடசாலை நிலவியதை அவ்வூர்க் கல்வெட்டு குறிக்கிறது. அவர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய முறைகளையும் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. அதேபோல திருபுவனி என்ற ஊரில் இருந்த கல்லூரி பற்றி இராஜாதிராஜன் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. இடைக்காலத்தில் நலிவுற்ற சமுதாய மக்களுக்கு அரசர்கள் கோயில்கள் மூலம் சில உரிமைகளை வழங்கினர். கொங்கு நாட்டில் கம்மாளர்களுக்கும், இடையர்களுக்கும், சிவப்பிராமணர்களுக்கும், ஆடல் மகளிர்களுக்கும் வழங்கப்பட்ட உரிமைகளை கொங்கு நாட்டுக் கோயில்கள் கூறுகின்றன. இவ்வுரிமைகளை அவர்கள் எப்போதும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கொங்கு நாட்டுக் கோயில் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. மக்களுக்கும் அரசுக்கும் இடையில் பாலமாக நின்று அரசு நிர்வாகம் நடைபெறுவதற்கு சிறந்த கருவியாக அமைந்தது. இவ்வாறாக பொதுமக்களின் மொத்த சமுதாய சொத்தாக கோயில்கள் விளங்கின.

# சேக்கிழாரின் பெரியபுராணம் - ஒரு சமய சமூகப் பெட்டகம்

எஸ். துஷ்யந்

## முன்னுரை

சைவத் திருமுறைகள் பன்னிரண்டினுள் கடையாக, நிறையாக அமைந்திருப்பது பெரியபுராணமாகும். இதனைத் திருத்தொண்டர் புராணம் எனவும், திருத்தொண்டர் மாக்கதை எனவும் சிறப்பிப்பர். "பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ' என்று சிறப்பிக்கப்படுபவரும் இக்காப்பியத்தை அருளியவரும் சேக்கிழார்பெருமான் ஆவார். இவர் சுந்தரமூர்த்தி சுவாமி அருளிய திருத்தொண்டர் தொகையை முதல் நூலாகவும், நம்பியாண்டான் நம்பி அருளிய திருத்தொண்டர் திருவந்தாதியை வழிநூலாகவும் கொண்டு, இப் பெருங்காப்பியத்தை தந்தருளினார். இந்நூல் இரண்டு காண்டங்களை-யும், பதின்மூன்று சருக்கங்களையும், நாலாயிரத்து இருநூற்று எண்பத்தெழு விருத்தப்பாடல்களையும் கொண்டிருப்பதோடு அறுபத்துமூன்று தனியடியார் வரலாறுகளும், ஒன்பது தொகையடியார்களது வரலாறுகளும் ஆராயப்பட்டுள்ளன. இதில் தமிழ்நாட்டு சைவசமய நெறிமுறைகளையும், பண்டைத் தமிழர் வாழ்க்கைமுறைகளையும், அவர்களின் தம்நாகரிக நுண்ணுணர்வுகளையும் அதில் பரக்கக் காணலாம். இந்நூலில் எக்காலத்திற்கும், எவர்க்கும் பொருந்தக் கூடிய பொருள் பொதிந்த சமய, சமூக சிந்தனைகள் ஆங்காங்கு மணிகளென ஒளி வீசித் திகழ்கின்றன. அவற்றையெல்லாம் எடுத்துச் சிந்தித்துப் பார்க்கும் போது. அவற்றைப் பாடிய தெய்வச் சேக்கிழாரப் புலவரின் புலமைகள் எம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன. எனவே சமய சமூகப் பெட்டகமாக அமையும் இப் பெரியபுராணத்தை ஆழமாகச் சிந்தித்துக் கற்போருக்கு ஓர் அருவிருந்தாகும்.

## பெரியபுராணம் காட்டும் சமய நெறி

### சைவ சமயம்

சைவ மெய்யுண்மைகளின் ஆழ அகலங்களை எடுத்துக் காட்டும் கலங்கரை விளக்காய் பெரியபுராணம் காட்சியளிக்கின்றது. வேதாகம வழியில் நெறிப்பட்டதே சைவ சமயம் என்பதை 'வேதநெறிதளைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க' எனச் சேக்கிழார் ஓர் பாடல் தொடரில் சுட்டிக் காட்டுகின்றார். பெரியபுராணம் சைவக்காப்பியம் என்பதற்கேற்ப சிவபெருமானின் அடையாளங்களையும் அருட்செயல்களையும் சேக்கிழார் தன் நூலில் தெளிவாகப் பதிவு செய்துள்ளார்.

'அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்' (01)
'இன்ன தன்மையன் என்று அறியாச் சிவன்' (23)
'முந்தை மறை ஆயிரம் மொழிந்த
திருவாயான்' (179)
'அருமறை முறையிட்டு இன்னும் அறிவதற்கு
அரியான்' (192)
'முன்னாகி எப் பொருட்கும் முதலாகி
நின்றான்' (1421)
'எவ்வுயிர்க்கும் தாயானான்' (2385)
'அருவாகி உருவாகி அனைத்துமாய்
நின்றபிரான்' (4163)

எனவரும் பாடல் தொடர்கள் குறிப்பிடற்பாலனவை.மேலும் சிவலிங்கம் சைவசமயத்தில் தொன்மவழிபாடு; அது உருவமும் அன்று; உருவம் அற்றதும் அன்று அருவமும் உருவமும் இணைந்த ஓர் சிவவழிபாட்டுச்சின்னம் எனச் சேக்கிழார் மேல்வரும் பாடலில் விளக்கம் தருகின்றார்.

**"காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீள் நாகம் அணிந்தார்க்கு நிகழ் குறியாம் சிவலிங்கம்"**
(3648)

### சிவனடியார்

சமண ஆதிக்கத்தைத் தடுத்து சைவத்தை வளர்க்க சிவனடியார்களின் கதைகளை சேக்கிழார் பெரியபுராணமாக எழுதினார் என்று கூறப்படுகின்றது. சிவன்மீது பற்றுக்கொண்ட அறுபத்துமூன்று நாயன்மார்களையும், ஒன்பது தொகையடியார்களையும் ஒரு குலமாக ஒருங்கிணைத்துப் பேசுவதை 'சிவனடியார்' என்ற பதம் தாங்கிநிற்கின்றது. இவர்களின் வரலாற்றைக் கூறுவதன் மூலம், சைவத் திருமுறைகளில் தேவாரங்கள் தோற்றிய பதிகவரலாற்றையும், அவற்றின் பொருள் விளக்கங்களையும், சிவபெருமானின் திருவருள் பெருக்கால் அவ்வப்போது நாட்டில் நிகழ்ந்த அற்புதங்களையும், அதனால் சமூகத்தில் நிகழ்ந்த மலர்ச்சியையும், அதனால் சைவசமயம் பெற்ற பெருமையையும் சேக்கிழார் இந்நூலில் விளக்கியிருப்பது மானுடர் எவரும் செய்ய முடியாதவோர் கைங்கரியம் எனக்கூறுவது வியற்கப்பாலது.

பெரியபுராணம் பிழிந்த சாரம் 'தொண்டு' எனும் வழிபாடே ஆகும் "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பரின் வாக்கும் "தொண்டு புரி பலனை எதிர்பாராதே" என்ற கிருஷ்ணரின் வாக்கும் இதனை மேலும் வலுப்படுத்துகின்றது. சிவனடியார்கள் தங்களுடைய இறைத் தொண்டிற்கு எத்தகைய இடர்கள் வந்தாலும், இறைவன் மீது அன்பு கொண்டு தங்கள் இறைபணியைச் செவ்வனே செய்வார்கள் என்பதை மூர்த்திநாயனார் கண்ணப்பர் நாயனார் வரலாற்றிலிருந்து சேக்கிழார் படம் பிடித்துக்காட்டுகின்றார்.

### சிவவழிபாடு

பெரியபுராணம் சிவவழிபாட்டையும் அதன் பேற்றினையும் இயம்புகின்ற இலக்கியமாகவும் அமைந்துள்ளது. சைவாகம வழிபாட்டில் இறைவனை வீழ்ந்து வணங்கும் முறைகளாக பஞ்சாங்க நமஸ்காரம், அட்டாங்கநமஸ்காரம் என இரண்டு உள்ளன. இதில் பஞ்சாங்க நமஸ்காரத்தைப் பற்றி 'மண்ணுற ஐந்து உறுப்பால் வணங்கி' (270) என்றும் அட்டாங்க நமஸ்காரத்தைப் பற்றி அங்கம் மாநிலத்து எட்டுற வணங்கி" என்றும் சேக்கிழாரால் விளக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

சிவனடியார்கள் குரு, லிங்க சங்கம வழிபாட்டில் நின்று உயர்பேறடைந்தவர்கள் என்பதைச் சேக்கிழார் கூறும் இவர்களது வரலாற்றுச்செய்திகளினின்று இனம் பிரித்துக் காட்டுகின்றார். அவற்றில் குருவழிபாட்டில் பன்னிருவரும், லிங்க வழிபாட்டு நிலையில் மூப்பத்து மூவரும், சங்கவழிபாட்டில் இருபது பேரும் அடங்குகின்றனர்.

இளையான்குடிமாறர், இடங்கழியார், அப்பூதியடிகள், அமநீதி நாயனார், மானக்கஞ்சாறயர் முதலிய நாயன்மார்கள் தாம் புரியும் சிவப்பணிகளோடு சிவனடியார்களுக்கு பசி போக்க திருவமுது செய்யும் பணிகளையும் சிறப்புடன் செய்து வந்தார்கள் என்பதையும் சேக்கிழார் பெரியபுராணத்தில் எடுத்துக்காட்டியுள்ளார். இளையான்குடிமாற நாயனார் தம்பதிக்கு இறைவன் அருள் செய்த வரலாற்றை மேல்வரும் பாடல் விளக்குகின்றது.

*"அன்பனே! அன்பர் பூசை அளித்த நீ அணங்கினோடும்*
*என்பெரும் உலகம் ஏந்தி இருநிதிக் கிழவன் தானே*
*முன்பெரு நிதியம் ஏந்தி மொழி வழி ஏவல் கேட்ப*
*இன்பமார்ந்திருக்க என்றே அருள் செய்தான் எவர்க்கும் மிக்கான்"*

### சிவனடியார் கூட்டச்சிறப்பு

பெரியபுராணத்தின் முதற்சருக்கத்தில் சிவனடியார்களின் திருக்கூட்டச் சிறப்பின் பெருமைகள் விதந்துரைக்கப்பட்டுள்ளன. சிவனடியார்கள் புறத்தூய்மையும், அகத்தூய-

மையும் உள்ளவர்கள். அவர்கள் பூசும் திருநீறு போல் புனிதர்கள். அவர்கள் இன்பதுன்பங்களில் பாதிப்போ, பொன் பொருள்களில் நாட்டமோ இல்லாதவர்கள் என்பதனை மேல்வரும் பாடல் சான்றுரைக்கின்றது.

*"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்*
*ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்*
*கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி*
*வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"*
*(143)*

*சிவனடியார்களின் அகப்புறப் தூய்மைகளைப்*
*"ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே*
*பாரம் ஈசன் பணி அலது ஒன்றிலர்*
*ஈர அன்பினர் யாதுங் குறைவிலர்*
*வீரம் என்னால் விளம்பும் தகையதோ"*
*(144)*

## சிவசின்னம்

சிவசின்னங்களில் பெருமை மிக்கது திருநீறு. திருநாவுக்கரசர், திலகவதியார் வரலாற்றிலிருந்து சேக்கிழார் திருநீற்றின் உன்னதத்தை எடுத்துக் காட்டுகின்றார். இறைவனின் திருவுளப்பாங்கின் கொடிய சூலை நோய் பெற்ற நாவுக்கரசர் திலகவதியாரை அண்டிய போது திருவைந்தெழுத்து ஓதி திருநீற்றைக் திலகவதியார் கொடுக்க சூலை நோய் நீங்கிப் பெருவாழ்வு பெற்றார் என மேல்வரும் இரண்டு பாடல் வரிகளின் மூலம் உணர்த்துகின்றார்.

*"நின்மலன் பேர் அருள் நினைந்து*
*சென்று திரு வீரட்டம் புகுவதற்குத்*
*திருக்கயிலைத்*
*குன்று உடையார் திரு நீற்றை அஞ்செழுத்து*
*ஓதிக் கொடுத்தார்"*

"திருவானன் திருநீறு திலகவதியார் அளிப்பப்
பெருவாழ்வு வந்தது எனப் பெருந்தகையார்"

## சிவமந்திரம்

தூல சூட்சும பஞ்சாட்சரங்களின் மறைபொருளைப் பற்றியும், அவற்றில் அடங்கியுள்ள தத்துவங்களைப் பற்றியும், அவற்றை ஓதும் முறை, அதனால் ஏற்படும் பயன் பற்றியும் பல சமய நூல்கள் எடுத்தியம்புகின்றன. எனினும் பெரியபுராணத்தில் சேக்கிழார் பல சிவனடியார்கள் இம்மந்திரத்தை ஜெபித்து இம்மை, மறுமைப் பயன்களைப் பெற்றார்கள் எனவும் எடுத்துக் காட்டுகின்றார்.

திருநகரச்சருக்கத்தில், அந்நாட்டு மக்கள் திருவைந்தெழுத்தை முறையாக ஓதுவதனால் அவர்களைப் பிடிக்க பிறவிப்பிணியும் அஞ்சும் என "ஓதிய எழுத்தாம் அஞ்சும் உறுபிணிவரத்தான் அஞ்சும்" (84) என்ற பாடலடியில் குறிப்பிடுவதோடு, திருக்காட்சி சிறப்புப் பகுதியில் சிவனடியார்களின் பெருமைகளை 'நீரந்த நீற்று ஒளியும்,' 'புரந்த அஞ்செழுத்தும் ஓசையும்,' என்று வர்ணிக்கின்றார். ஆனாய நாயனார் ஆநிரைகளைக் காத்து வந்தபோது, சிவன் கொன்றை மரத்தில் காட்சியளிக்க அன்பின் உருக்கத்தால் தன் வேய்ங்குழலில் 'ஐந்தெழுத்தை' இசையாக்கிச் சமர்பணம் செய்ய எம்பிரானும் அகமகிழ்ந்து அருள் கொடுத்தார் என்பதை **"எடுத்த குழல் கருவியினில் எம்பிரான் எழுத்து அஞ்சும்"** பாடலில் விளக்கியுள்ளார்.

நாவுக்கரசர் கடலிலிருந்து மீண்டும் வரும் போது பாடிய "சொற்றுணை வேதியன்" என்று தொடங்கும் முதற் பதிகத்தைக் கொண்டு "அற்ற முன் காக்கும்" என்று குறிப்பிட்டும் சேக்கிழார் பாடியிருப்பதும் கவனிக்கத்தக்கது

"சொற்றுணை வேதியன் என்னுந் தூய் மொழி
நற்றமிழ் மாலையா நமச்சிவாய என்று அற்ற
முன் காக்கும் அஞ்செழுத்தை அன்போடு பற்றிய
உணர்வினால் பதிகம் பாடினார்" (1319)

இதே போல் நாவுக்கரசரின் பல இடங்களில் மீண்டும் மீண்டும் இதன் உண்மையை சேக்கிழார் வலியுறுத்திக் காட்டுகின்றார். இவர்களைப் போல் திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார், அமர்நீதிநாயனார், புகழ்ச்சோழநாயனார் போன்றோரின் வரலாறுகளிலும் சிவன் ஐந்தெழுத்து மந்திரத்துனுள் இருந்து அவர்களுக்கு அருள் வழங்கிய காட்சியை பல பாடல்களில் சேக்கிழார் பதிவு செய்து இருப்பது நோக்கத்தக்கது.

## சிவபக்தி

தமிழ்நாட்டுச் சிவனடியார் வரலாற்றை முதன் முதலில் பக்தி ரசத்தோடு பெரியபுராணத்தில் காட்டிய பெருமை சேக்கிழாரையே சாரும். பக்தியென்பது இறைவனிடம் செலுத்தப்படும் அன்பான ஓர் அனுபவநிலையாகும். இதை அனுபவித்தே சேக்கிழார் பெரியபுராணம் பாடியிருக்கின்றார். இச்சிறப்பை நன்குணர்ந்த திரிசிபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் " பக்திச் சுவை சொட்டப் பாடிய கவிவலவ" என்று சேக்கிழாரைப் புகழ்ந்துள்ளார்.

பெரியபுராணத்தில் சைவப்பக்திரசம் வெளிப்படுத்தும் முறைகளை சேக்கிழார் நாயன்மார்களின் வாழ்க்கை முறைகளிலிருந்து சித்தரித்துக்காட்டுகின்றார். சாக்கியநாயனார் பௌத்த சமயத்தவராக இருந்து கொண்டு சிவலிங்கத்திற்குக் கல்லெறிந்து வழிபட்டார். எந்த வேடம் பூண்டாலும் சிவனின் தாளை மறவாமல் பக்தி கொள்வதை நாள்தோறும் கொண்டிருந்தார் என்பதை சேக்கிழார் மேல்வரும் பாடலொன்றில் சித்தரித்துள்ளார். இப்பாடல் உண்மையான பக்தனின் நிலைப்பாட்டை தெளிவாக எடுத்தியம்புகின்றது.

*"எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்*
*மன்னிய சீர்ச்சங்கரன் தான் மறவாமை பொருள் என்றே*
துன்னிய வேடந்தன்னைத் துறவாதே தூய சிவம்
தன்னை மிகும் அன்பினால் மறவாமை தலை நிற்பார்"

ஈசன் மீது அன்பு கொண்டு எது செய்தாலும் அது எப்பிரானுக்கு பக்தி வழிபாடாகவே ஏற்கப்படும் என்பதைக் கண்ணப்ப நாயனாரின் வரலாற்றிலிருந்து உணர்த்துகின்றார். குடும்பித் தேவரைக் கண்ட கணத்திலிருந்து கண்ணப்பர் அவர் மீது அன்புருவமாக மாறினார் என்பதை "பொங்கிய ஒளியின் நீழல் பொருவில் அன்புருவம் ஆனார்" எனச் சேக்கிழார் விளக்குகின்றார். அத்துடன் திருக்காளத்தி மலையிலே இறைவனைக் கண்டு அணைத்துக் கொண்டு நீங்காது நின்ற நிலையினை "வங்கினைப் பற்றிப் போகா வல்லுடும்பு என்ன நீங்கள்" என்றும் பாடுகின்றார் இக்கண்ணப்பனின் பக்தியை மாணிக்கவாசகப் பெருமானும் "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்;" என்று மெச்சிப் பாடியுள்ளார்.

## சைவ சித்தாந்தம்

சைவத்தின் சிறப்புக்களை உலகிற்கு எடுத்துக்காட்டிய சேக்கிழார் அடுத்து சைவ சித்தாந்த சிந்தனைகளையும் பெரியபுராணத்தில் பதித்திருப்பது அவரின் புலமையை மேலும் ஒருபடி உயர்த்திக் காட்டுகின்றது. பதி,பசு, பாசம், சைவ நாற்பாதங்கள், இருவினையொப்பு, மலபரிபாகம், தீட்சை, பஞ்சாட்சரமந்திரம், முக்தி ஆகிய சைவசித்தாந்தக் கருத்துக்கள் பெரியபுராணத்தில் பொதிந்துள்ளன.

"உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர் மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்திவ ணங்குவாம்"

எனும் முதல் பாடலையே சேக்கிழார் சித்தாந்த விளக்கமாக முன்வைத்துள்ளார். இதில் முதல் வரிப்பாடல் இறைவனின் சொரூபநிலையாகவும், இரண்டாம்

வரிப்பாடல், இறைவனின் உருவ இயல்பாகவும், மூன்றாம் வரிப்பாடல் இறைவனின் தடத்த நிலையாகவும், நான்காம் வரிப்பாடல் சந்நிதிபாத நிலையாகவும் அமைந்துள்ளது. இப்பாடல் விளக்கத்தையொத்த பாடலாக சிவஞான போத 12ஆம் சூத்திரம் அமைந்திருக்கின்றது என்று கூறினால் அதில் தவறு எதுவுமில்லை.

*"சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்*
*பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்*
*உவமையிலா கலை ஞானம் உணர்வரிய மெய்ஞ் ஞானம்*
*தவமுதல்வர் சம்பதர் தாமுணர்ந்தார் அந்நிலையில்"*

எனும் பாடலில் சேக்கிழார், ஞானப்பால் உண்ட சம்பந்தருக்குக் கிடைத்த கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் என்னும் நால்வகைநெறிகளை உணர்த்திக் காட்டுகின்றார். இதனை சிவஞான சித்தியார் பாடலில் அடியொற்றியும் நோக்கலாம்.

*"கேட்டலும் சிந்தித்தல் தெளிதல் நிட்டை கிளத்தலென*
*வீரிரண்டாங் கிளக்கின் ஞானம்."*

பிறவியென்னும் கடலில் தடுமாறும் மக்களை கரையேற்றும் வல்லமை அஞ்ஞெழுத்து மந்திரத்திற்குண்டு என்பதை நாவுக்கரசரின் வரலாற்றிலிருந்து சேக்கிழார் மேல் வரும் பாடலில் எடுத்துக் காட்டுகின்றார்.

*"இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்*
*வருபவக் கடலில் வீழ்மாக்கள் ஏறிட*
*அருளும் மெய் அஞ்செழுத்து"*

மும்மல விளக்கத்துடன் மலநாசம் பெற்ற ஆன்மா இரசவாதத்தால் இரும்பு பொன்னாவது போல் சிவச்சுூர்பு அடையும் என்பதைக் கண்ணப்ப நாயனாரின் வரலாற்றிலிருந்து பிரதிபலித்துக் காட்டுகின்றார்.

*"முன்பு திருக்காளத்தி முதல்வனார் அருள் நோக்கால்*
*இன்புறுவே தத்திரும்பு பொன்னானாற் போல் யாக்கை*
*தன் பரிசும் வினையிரண்டும் சாருமல மூன்றுமற*
*அன்பு பிழம் பாய்த்திரிவர் அவர் கருத்தின் இளவினரோ"*

## பெரியபுராணம் காட்டும் சமூக நெறி

### அரசியல்

சோழமன்னருக்கு அமைச்சுப்பதவி வகித்த சேக்கிழார் பெரியபுராணத்தில் அரசியல்நெறி முறைகள் பற்றியும் இயம்பியுள்ளார். சேர, சோழ, பாண்டிய அரசர்களும், வேளிர் குலத்தவரும், வேறு பல மரபினருமாக பதின் நான்கு பேர்களை சேக்கிழார் குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

அவர்களின் பட்டியல்கள் மேல்வருமாறு

| | |
|---|---|
| சேரமன்னர் | - சேரமான் பெருமான் |
| சோழமன்னர்கள் | - கோச்செங்கட்சோழன், புகழ்ச்சோழன் |
| பாண்டியமன்னர்கள் | - நின்றசீர்நெடுமாறன், மங்கையர்க்கரசி |
| குறுநிலமன்னர்கள் | - மெய்ப்பொருள் நாயனார், நரசிங்கமுனையரையர், பெருமிழலைக்குறும்பர், இடம் கழிநாயனார். |
| படைத்தலைவர்கள் | - சிறுதொண்டர், மானக்கஞ்சாறர், ஏயர்கோன் கலிக்காமர், கோட்புலியார். |
| அமைச்சர் | - குலச்சிறையார். |

கன்றை இழந்த பசு ஆராய்ச்சி மணியடித்து நீதிகேட்டதற்கிணங்க தன்மகனையும் கன்றைக் கொன்றது போலக் கொன்றான் மனுநீதிச்சோழன். தன் அரசாட்சியில் மக்கள் மட்டுமல்லாது பிற உயிரினங்களும் துன்பப்படக்

கூடாது என்று நினைப்பவன். தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் பாகுபாடு பாராமல் தண்டனை வழங்குபவன் எவனோ அவனே உண்மையான அரசாட்சி புரியும் அரசன் என்பதை மேல்வரும் பாடலில் எடுத்துக் காட்டுகின்றார்.

*"மாநிலங் காவலனாவான் மன்னுயிர் காக்குங்காலை*
*தானதனுக் கிடையூறு தன்னால் தன் பரிசத்தால்*
*ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர் தம்மால்*
*ஆனபய மைந்துந் தீர்த் தறங் காப்பா னல்லனோ"*

இப்பாடலின் மூலம் தன்னால், தன் பரிசனத்தால் ஊனமிகுபகைத்திறத்தால், கள்வரால், உயிர்கள் தம்மாலான பயம் முதலிய ஐந்தும் தீர்த்து அறம் காப்பான். என்று அரசனின் கடமைகளை சேக்கிழார் வலியுறுத்துகின்றார்.

## இல்வாழ்க்கை

பெரியபுராணம் இல்வாழ்க்கைக்குரிய நல்வாழ்வியல் நெறிகளையும், அதன் நுண்ணுணர்வுகளையும் இயம்புகின்ற காப்பியமாகும். சேக்கிழார் பல இடங்களில் இல்லறத்தின் சிறப்புக்களை எடுத்துக் காட்டியுள்ளார். "செம்மை இல்லறமே நல்லறமாகும்" இல்லறத்தில் கணவன் மனைவிக்குள் ஏற்படும் பிரச்சினைகளைப் பிறர் அறியாவண்ணம் வாழ வேண்டும். தன் கொள்கைக்கு இணங்கக்கூடிய இல்லறத்தாளை தேர்வு செய்யவேண்டும், 'வையகம் போற்ற இல்லறம் சிறக்க அறம் புரிந்து ஏனைய உயிர்களுக்கு ஒத்தாசையாக வாழ வேண்டும் இவ்வாறான வாழ்வியல்களைச் சேக்கிழார் அடியார்களின் வாழ்வில் இருந்து தெளிவுபடுத்தியுள்ளார்.

திருநீலகண்டநாயனார் திருநீலகண்டத்துப்பெருமான் மீது பக்தி கொண்டவர். திருமணமானவர். இவர் தாசி வீட்டிற்குச் சென்று வருவதையறிந்த அவரின் மனைவி கணவனிடம் ஒன்றும் வினவாமல் தன் கடமைகளை அவருக்குச் செய்து கொண்டுவந்தாள். ஒரு நாள் தன் மனைவியை ஆசை மொழிபேசி தொடமுற்பட்ட போது திருநீலகண்டப் பெருமான் மீது ஆணையாக இனி என்னைத் தொடக் கூடாது என்று ஆணையிட்டாள். அன்றிலிருந்து ஒரு பெண்ணையும் தொடுவதில்லை என உறுதிபூண்டு, இப்பிரச்சனையை அயலவரும் அறியாத வண்ணம் வயதாகும் வரை வேறுவேறாக வாழ்ந்தார்கள் என்பதை சேக்கிழார்.

*"கற்புறு மனைவியாரும் கணவனார்க் காண எல்லாம்*
*பொற் புற மெய்யுறாமல் பொருந்துவ போற்றிச் செய்ய*
*இன்புறம் பொழியாது அங்கண் இருவரும் வேறுவைகி*
*அன்புறு புணர்ச்சியின்மை அயலறியாமை வாழ்ந்தனர்"*

என்றும். அவர்களின் இல்லறச் சிறப்பை "வையகம் போற்றும் செய்கை மனை அறம் புரிந்து வாழ்வோர்" என்றும் விளக்குகின்றார்.

*'இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்புவதற்கே'* என்ற திருவள்ளுவரின் கூற்றுக்கமைய சேக்கிழாரும் காரைக்காலம்மையார், இளையான்குடிமாறநாயனார், இயற்பகைநாயனார் சிறுதொண்டர் ஆகியோரின் வரலாற்றிலிருந்து விருந்தோம்பல் சிறப்பை நன்கு எடுத்துக் காட்டுகின்றார். காரைக்காலம்மையாரின் இல்வாழ்க்கை அறச்சிறப்பை *"ஓங்கிய அன்புறு காதல் ஒழிவின்றி மிகப் பெருகப் பாங்கில் வரும் மனை அறத்தின் பண்புவழாமையில் பயில்வார்"* எனச் சிறப்பிக்கின்றார். அம்மையாரின் இவ்ஈதல் தொண்டை சமுதாயக் கொள்கையாக கொண்டொழுக வேண்டும் என ஞானசம்பந்தன் கருதியதை சேக்கிழார் மேல்வரும் பாடலில் விளக்கிக் காட்டுகின்றார்.

*"மண்ணில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்*

*அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்*
*கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டு ஆர்தல்*
*உண்மை ஆம் எனில் உலகர் முன் வருக என உரைப்பார்''*

இளையான்குடிமாறநாயனார் இல்லறத்திலே விருந்தோம்பல் பண்பிலே வழுவாது நின்று இறைபணியில் நின்று வாழ்ந்தார். இவரின் விருந்தோம்பல் முறையே சேக்கிழார் மேல்வரும் பாடலில் காட்டியுள்ளார்.

*''காலினால் தடவிச் சென்று கைகளால்*
*சாலிவெண் முளை நீர் வழிச் சார்ந்தன*
*கோலி வாரி இடா நிறை யக் கொண்டு*
*மேல் எடுத்துச் சுமந்தொல்லை மீண்டனர்''*

## திருமணமுறைகள்

சேக்கிழார் அக்காலத்தில் நிலவிய திருமணமுறைகள், திருமணச்சடங்குகள், திருமணச்சம்பிரதாயங்கள் முதலியவற்றை பெரியபுராணத்தில் உள்ளடக்கிக் காட்டுகின்றார். திருமணமுறைகளிலே நிச்சயார்த்த திருமணம், காந்தர்வ திருமணம், கலப்புத்திருமணம் பற்றி பல அடியார்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து எடுத்துக் காட்டுகின்றார். காரைக்கால் அம்மையார், மானக்கஞ்சாற நாயனார், திருஞானசம்பந்தர், முதலிய அடியார்களின் வரலாற்றில் மணமகளின் வீட்டைச்சார்ந்த பெரியோர் சிலர் பெண்ணின் பெற்றோரை நாடிப் மணம் பேசி முடிப்பர். இதனைப் பேசி முடிந்த திருமணம் எனக்கூறுவர். காந்தர்வ திருமணத்திற்கு சுந்தரமூர்த்தி நாயனாரின் வரலாற்றிலிருந்து சேக்கிழார் ஆதாரம் காட்டுகின்றார் பூங்கோயிலில் உள்ள இறைவனை வணங்கிவிட்டு தன்அடியார்களுடன் நம்பியாரூரர் திரும்பிக் கொண்டிருந்த போது பரவையாரைக் கண்டு காதல் கொண்டார் என்பதை

*'கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் பெருவாழ்வோ*
*பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ''*

எனும் பாடலில் குறிப்பிட்டதோடு, பரவையார் நம்பியின் முகம் கண்டு முகம் நாணினாள் அவனும் காதல் கொண்டாள் என்பதை,

*''முன்னே வந்தெதிர் தோன்றும் முருகனோ பெருகொளியால்*
*தன் நேரில் மாரனோ தார்மார்பின் விஞ்சையனோ''*

எனும் பாடலிலும் வெளிக்காட்டுகின்றார். அத்தோடு ஆதி சைவராக விளங்கிய சுந்தரர் வேளார் குலத்தில் பிறந்த சங்கிலியாரையும் மணந்தார் இது அக்காலத்தில் நிலவிய கலப்புத் திருமணமாகக் கூறலாம். சாதகம் பார்த்தல் குலம், குடி, உரிமை எனும் முன்றும் அமையக்கூடிய பெண்ணைமணம் பேசுதல், கடவுள்காப்புக் கட்டுதல், மணமகனை வரவேற்றல், நீர்வார்த்தல், நிறைகுடம் வைத்தல், பொன்மணி நூல்பூட்டுதல், பாணிக்கிரகணம், தாம்பூலம் போன்ற திருமணச் சடங்கு சம்பிரதாயங்களையும் சேக்கிழார் பெரிய-புராணத்தில் எடுத்துக்காட்டுகின்றார்.

## பெண்களின் உரிமை

பெரியபுராணத்தில் சேக்கிழார் 28 பெண்கள் பற்றிய செய்திகளைத் தருகின்றார். அவர்களில் மங்கையர்க்கரசியார், இசை-ஞானியார், காரைக்காலம்மையார் ஆகிய மூவர் மட்டுமே நாயன்மார்களாக வழிபடும் அருட்பேறு பெற்றவர்கள். பெண்களுக்கும் ஆன்மீகத் துறைக்கும் வெகுதூரவதிஷ்டம் என்ற காலகட்டத்தில் தான் விரும்பிய ஆன்மீகத் துறையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட முதல் பெண் காரைக்காலம்மையார் என்றால் அதை மறுப்பதற்கு எவரும் இல்லை. தான் கணவனால் புறக்கணிக்கப்பட்டாலும் முகம் தொலைந்து போகாமல் ஆன்மீகத்தில், துறவறத்தில் ஈடுபடுத்திய தாயவள் என்பதை சேக்கிழார் அம்மையாரின் வரலாற்றிலிருந்து பெண் உரிமை பற்றிப் பேச முயல்கின்றார். சேக்கிழார் இல்வாழ்க்கையில் பெண்களுக்குள்ள உரிமையையும், அவர்களின் பேறுகளையும்

இளையான் குடிமாற நாயனாரின் இல்லத்தரசி இசைஞானியார் போன்ற அடியார்களின் வரலாறுகளில் இருந்தும் எடுத்துக்காட்டுகின்றார் அதிலும் குறிப்பாக காரைக்காலம்மையாரையும் மங்கையர்க்கரசியாரையும் பெண்குலத்திகே பெருமையாய் அமையும்படியாக தெய்வ அங்கீகாரத்தை அளிக்கின்றார்.

*"மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்*
*வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி*
*செங்கமலத் திருமடந்தை கன்னி நாடான்*
*தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப்பாவை"*

## ஒழுக்க நெறி

சேக்கிழார் மானிட வாழ்க்கை வளம் பெற ஏராளமான ஒழுக்கநெறிச் சிந்தனைகளை நாயன்மார்களின் வாழ்வியலில் இருந்து எடுத்துக்காட்டுகின்றார். சமத்துவம் பேணல், ஜீவகாருண்யம், கொடை, கற்புநெறி, முதுசொம்கேட்டல், விருந்தோம்பல், நீதி, சமுதாயவழிப்புணர்வு போன்ற நல்ல சிந்தனைகளை வாழ்க்கை முறைகளில் சேக்கிழார் இணைத்துக் காட்டியிருப்பது அவருடைய மாண்புகளை மேலும் ஒருபடி உயர்த்திக் காட்டுகின்றது.

பெரயபுராணம் ஓர் சமரச சமத்துவ முரசு என்று கூறுவதற்கிணங்க சிவ அடியார்கள் அனைவரையும் ஒரே சமத்துவமாகக் இக்காவியம் விளக்கிக்காட்டுவது வியறக்கப்பாலது. அதுமட்டுமன்றி சாதியால் உண்டாகும் ஏற்றத் தாழ்வுகளைப் போக்கி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த பல நிலைகளில் சேக்கிழார் பெருமான் பல அடியார்களின் வரலாறுகளைத் தந்துள்ளார். நாயன்மார்களிலே வேளாளர், அந்தணர், ஆதிசைவர். வணிகர், இடையர், வேடர், புலையர், குயவர், பாணர், சாலியர், ஏகாலியர், எனும் வகுப்பினரைச் சேர்ந்தவராக விளங்கிய போதிலும் சாதிப்பிரிவினை காட்டாது எல்லோரும் ஒரு குலம் எனக்கருதி திருவிழா எடுத்து, இறைவழிபாடு ஒருமித்து நடத்தினார்கள் என சேக்கிழார் குறிப்பிடுகின்றார். இதை சாதியொழிப்புக்கு எதிராக வழங்கும் ஓர் சீரிய சிறந்த செய்தியாகக் கூறலாம்.

பெரியபுராணத்தில் வரும் அடியார்கள் அறத்தை தங்கள் முழுமையான வாழ்க்கை நெறியாகவே கருதினார்கள். அறங்கள் முப்பத்திரண்டு வகையாகச் கூறப்படுகின்றது. இவற்றில் ஏறத்தாழ அறங்களில் நாயன்மார்கள் நின்று ஒழுகியுள்ளனர் என்பதைச் சேக்கிழார் நன்கு புலப்படுத்துகின்றார். திருக்கோயிலில் தொண்டு செய்த அறுவரை இப்புராணம் இனம் காட்டுகின்றது. மூர்ததி நாயனார் தம் கையையே சந்தனக்கல்மீது தேய்த்தார் என்று எண்ணும் போது அவரின் அறத்தொண்டின் பற்று எமக்கு நன்கு புலப்படுகின்றது.

"நாளும் பெருங்காதல் நயப்புறும் வேட்கையாலே
கேளும் துணையும் முதற்கேடில் பதங்களெல்லாம்"

என்று இவரைப் பற்றி சேக்கிழார் பாடியுள்ளார் இவ்வாறு சேக்கிழார் தொண்டினை தூய்மை, உண்மை, அறம், நீதி, அன்பு, அருள், தியாகம், பகிர்தல், தர்மம் போன்ற மனித வாழ்வியலுடன் தொடர்புபடுத்திக் காட்டுகின்றார்.

## தமிழர் இசைமரபு

"இசை விளங்கிட இயல்பினில் பாடி நின்றேத்தி" என்று சேக்கிழார் இசைமரபுகளை பெரியபுராணத்தில் தொடங்கி வைத்துள்ளார் பண்ணிசை, இன்னிசை, தமிழிசை, ஏழிசை போன்ற இசைக்குறிப்புகள், இசைக் கருவிகள் பற்றிய குறிப்புக்கள் முதலியவற்றை சுட்டிக்காட்டுகின்றார்.

திருஞானசம்பந்தரின் புராணத்தில் தமிழர் இசையறிவுடன் சுருதி உணர்வும் மிக்கவர்கள் என்பதை சேக்கிழார் தமது பாடல் வழியாகத் தெளிவுறுத்துகின்றார்.

*"சொற்றமிழ் மாலையினிசைகள் சுருதி யாழ்முறை*
*தொடுத்தே*
*அன்றை நாள் பேலொன்றும் அகலா*

*றன்புடனமர்ந்தார்"*

தமிழர் அமுதச் சுவையுடைய இசைப்பாட்டை இசைத்துப்பாடும் திறமை வாய்ந்தவர்கள் என்பதை திருநீலகண்ட நாயனார், மதங்கசூளாமணி ஆகியோர் அக்கைங்கரியத்தில் ஈடுபட்டவர்கள் என்பதை மேல்வரும் பாடலில் சேக்கிழார் காட்டுகின்றார்.

*"திரு நீலகண்டத்துப் பெரும் பாணர்*
*தெள்ளமுதின் வரு*
*நீர்மை இசைப்பாட்டு மதங்க சூளாமணியர்"*

சேக்கிழார் பண்ணிசைக் கருவிகளாக விபஞ்சி, வீணை, யாழ்,குழல், சங்கு, தாளம், கொம்பு, கின்னரம், தாரை முதலியவற்றையும் தாளஇசைக் கருவிகளாக முழவு, தண்ணுமை, படகம், சிறுபறை, பேரிகை, பம்மை, முரசு, உடுக்கை போன்ற கருவிகளையும் அடியார்கள் பலரின் வரலாறுகளில் பதிவு செய்திருப்பது கூறத்தக்கது.

முடிவுரை

மேலே கூறப்பட்ட செய்திகளின் மூலம் சேக்கிழாரின் பெரியபுராணம் சமய சமூக சிந்தனை மரபுகளை விபரிக்கும் பெட்டகம் என்பது தெள்ளத் தெளிவாகின்றது. சேக்கிழார் இவ்வாறான திருத்தொண்டர்களின் மாக்கதைகளைப் பாடியிருக்காவிட்டால் தமிழ்,சைவ உலகம் பெரியபுராணம் எனும் பெட்டகத்தை இழந்திருக்கும் அதன் மூலம் சைவ சமயமும் சமூக வாழ்வியலும் குறைபட்டிருக்கும் என்றும் கூறுவதில் தவறில்லை.

*" தெய்வ வருட் சேக்கிழார் செந்தமிழ் நூல்*
*யாத்திலரேல்*
*உய்யு நெறி நீறஞ் செழுத்துண்மை சைவமறை*
*மூவர் தமிழ் மூலரம்மை வேந்திருவர்*
*பாட்டமிழ்தம்.*
*யாவருணர் வாருய்ய இங்கு"*

---

# விரத நாட்களில் ஏன் எண்ணை தேய்த்து குளிக்கக் கூடாது?

விரத நாட்களிலும் நோன்பு நாட்களிலும் எண்ணை பூசிக் குளிக்கலாகாது. எண்ணை தேய்த்துக் குளிப்பதை மிக முக்கியமானதாகக் கருதியிருக்கும் நாம் இப்படி ஒரு விதிவிலக்கைக் கொண்டாடுவது வெறும் மூட நம்பிக்கை என்று கூறிவந்தனர். ஆனால் இதன் விஞ்ஞான அங்கீகாரம் இப்போது வெளிப்பட்டுள்ளது. சனி கிரகத்தின் சக்தியிலிருந்து உருவானதாகக் கருதிவரும் எண்ணை தலைக்கு சுற்றிலும் ஒர் புகை வளையம் உருவாக்குகின்றது. இவ்வளையம் இருப்பதால் கிரகங்களினின்று வரும் காந்த அலைகள் உடலுக்குள் நுழைய இல்லாமல் போகின்றது. விரத நாட்களில் உடல் மற்றும் மனதுக்கு தூய்மை மிக முக்கியமானதால் கிரகங்களினின்றும் நட்சத்திரங்களினின்றும் பூமிக்கு வரும் காந்த சக்தி அலைகள் உடலுக்கு மிக அவசியம். இவ்வலைகள் உடலுக்குள் நுழைய எண்ணை தடையாக இருப்பதால் தான் விரத நாட்களில் எண்ணை தேய்த்துக் குளிப்பதற்கு விதி விலக்கு ஏற்பட்டுள்ளது.

# திருப்புகழில் மாணிக்கவாசகர்

## சேது முருகபூபதி

*"செருக்கும் அம்பல மிசைதனில் அசைவுற நடித்த சங்கரர் வழிவழி அடியவர் திருக்குருந்தடி அருள்பெற அருளிய குருநாதர்"*

என்று திருப்பரங்குன்றத் திருப்புகழில், நமக்கு அருணகிரிநாத் ஸ்வாமிகள், மாணிக்க வாசக ஸ்வாமிகளை அறிமுகப்படுத்துகிறார்! இந்த மாணிக்க வாசகர் யாராம்? வழி-வழியாக தொண்டு செய்து வந்தவராம்! திருஅம்பலத்தில் அசைந்து நடித்து கூத்தாடும் அம்பலவாணின் வழி-வழி அடிமையாம்! வழி-வழியாகத் தொண்டு செய்து இறை நிழலில் இடம் பெற்று இறைவனுக்கு தொண்டு செய்து வந்ததினால், அருணகிரியார், மாணிக்கவாசகரை வழி-வழி அடிமை என்று குறிப்பிட்டுள்ளார். இந்தச் சிவப்பரம் பொருள்தான். மாணிக்கவாசகருக்கு திருப்பெருந்துறையில், திருக்குருந்த மரத்து அடியில், அருள்பெறும் வண்ணம், அருள் செய்த குருநாதர் என்ற உண்மையை இரண்டே வரிகளில் அருணகிரியார் குறிப்பிடுகிறார்.

மாணிக்கவாசகருக்கு திருவடி தீட்க்ஷை கிடைத்த இடம். தீட்சை என்ற சொல்லுக்கு "தீ" என்றால் கொடு என்றும் "க்ஷை" என்றால் கெடுத்து என்று பொருள்படும். அதாவது ஆன்மாவை மேவி உள்ள தீமைகளை கெடுத்து ஆன்மாவுக்கு நல்லறிவு என்ற சிவ அறிவை கொடுப்பதற்கு பெயர் தீட்க்ஷை. வந்த கடமையை முடிந்ததும் மாணிக்கவாசகர், சிதம்பரத்து நடராஜர் திருவடியை ஒளிவடிவாய் அடைந்தார். இதில் இன்னொரு உண்மையையும் உணர வேண்டும்! சிவபெருமானின் சந்நதியில் இருந்து, உயிர் ஊழாக, தெய்வகாரியத்துக்கு என்று, சிவஞானியர்கள் மீண்டும் பிறப்பார்களாம். அப்படிச் சிவஞானம் பெற்று சிவத்தோடு ஐக்கியமான ஜீவன்தான் மாணிக்கவாசகர். அப்படிச் சிவத்தோடு ஐக்கியமான ஜீவனாக இருந்தாலும், சிவத்தின் கொள்கைக்கு ஆபத்து வரும்போது, அதே சிவம், தன்னுடைய குருஅருள் பெற்ற சிவஞானத்தை **ஜீவனாகத்தரம் இறக்கச் செய்து, தனக்குரிய பெருளாக அதே சிவம், ஆக்கிக்கொள்ளும் என்றும் இந்த அனுபவ உண்மையை** உணர்ந்து, மாணிக்கவாசகர் தன்பூர்வ ஞானத்தோடு கூடிய தொண்டைச் செய்தும், உடல் ஊழாக சில துன்பங்களை அனுபவித்து சிவக்கொள்கையையும் முப்பொருள் உண்மையையும் நிலைநிறுத்தி விட்டு மீண்டும் அந்த ஆடல்வல்லானிடம் ஒளி வடிவாய் இணைந்தார் என்பதைத்தான், நடித்த சங்கரர் என்று **அருணகிரியார்** குறிப்பிடுகிறார்.

சிவஞானப்பேறாய், சிவத்தின் சந்நிதியில் இருந்தவர்களுக்கு மறுபிறப்பு இல்லை என்ற உண்மை ஒருபுறம் இருந்தாலும், முப்பொருள் உண்மைகளுக்கு சோதனை வரும் போது, தன்னுடைய ஆற்றலால், ஞானமாய் உள்ளதை, நம்மைப் போன்ற ஆன்மாக்கள் உய்வடையும் பொருட்டு, நம் பதியான, சிவப்பரம்பொருள். ஞானிகளை நம்முன் பிறக்கவைக்கும்! அப்படி பிறக்கவைக்கப்பட்டவர்தான் மாணிக்கவாசகர். அதனால்தான் எல்லாவித நன்மைகளையும் செய்து இறைவனே வலியச் சென்று அவரை ஆட்கொண்டான்! ஏனெனில், அனுப்பியவர்க்குத்தானே உண்மை தெரியும். இறைவனே தன்னை வலிய வந்து ஆட்கொண்டதையும், விட்டு அகன்றதையும், பலப்பல இடங்களில் திருவாசகத்தில் குறிப்பிட்டு மகிழ்கிறார். சில இடங்களில் புலம்புகிறார். புலப்பத்திற்காக பாடப்பட்டதுதான் வாழாப்பத்து (28). உயிருக்கும் இறையாண்மைக்கும் உள்ள உறவையும், உண்மையையும் நாயகி-நாயக பாவத்தில் சொன்னவர்தான் மாணிக்கவாசகர்.

3-ம் நூற்றாண்டில் மாணிக்கவாசகர் தமிழ் பாடிய காலத்தில் அதுவரை முப்பொருள் உண்மை பேசி வந்த தமிழ் சமுதாயம் கண்ட இறையாண்மை கொள்கைக்கு, பௌத்தத்தினால் ஆபத்து வந்தது! முப்பொருள் உண்மை என்பது பதி-பசு-பாசம். அதாவது இறை-உறை-சிறை எனப்படும்! பௌத்தமதமானது பாச அறிவையும், பசு என்ற உயிரறிவையும் மையமாக வைத்தும் உலகாயுத அறிவையும் மையமாக வைத்தும் எட்டுவித ஆசைகளையும், குணங்களையும் கொள்கையாக வைத்து பேசியதோடு நிறுத்திக் கொண்டது. இந்த கொள்கையை கற்பித்த புத்தரையே தெய்வமாக எண்ணி வாழ்ந்ததோடு அல்லாமல், இவற்றிற்க்கெல்லாம் மேலாக உள்ள. இறையாண்மையை தன்னுள் அடக்கி உள்ள பதி தத்துவத்தை விலக்கிவிட்டது! அதாவது, இறைவனைப் பற்றி கவலைப்படாமல் உலகாயுத மற்றும் சாங்கியங்களில் பெரிதும் நிலைகொண்டது! இறைவனை மறந்து செயல்படுவது என்பது, நன்றி கெட்ட செயல் என்பதனால், பதித் தத்துவத்தை மீண்டும், மக்கள் மத்தியில் நிலைபெறச் செய்ய வேண்டிய அவசியம் அப்பொழுது ஆன்ம இலக்கியம் பாடிய மாணிக்கவாசகருக்கு ஏற்பட்டது! தென்னாடுடைய சிவனே போற்றி-என் நாட்டவருக்கு இறைவா போற்றி என்ற முத்திரைச் சொல்லை சொல்வதன் நோக்கமே அவர் பாடிய போற்றி- அகவலாகும். இப்படி பதிக் கொள்கைக்கு சோதனை வரும்போது, திருக்கயிலையில் இருந்து சிவப்பரம் பொருள் தமிழைக் காக்க, தமிழ் கையாண்ட இறையாண்மையை காக்க அவ்வப்போது ஞானியர்களை அனுப்பி உள்ளார். முதலில் வந்தவர் அகத்தியர், பின்பு முருகன், பிறகு திருமூலர். பிறகு சுந்தரர். தமிழன் தமிழால் இறையாண்மையை பாடியது கூட தமிழ் சமுதாயம் கண்ட கடவுட் கொள்கை காப்பாற்றப்பட வேணும் என்பதற்காகத்தான் பாடியுள்ளான் என்ற உண்மை புலனாகும். அதுமட்டுமல்ல தமிழும் காப்பாற்றப்பட வேண்டிய ஒரு சூழ்நிலை உருவானது. சேக்கிழார் காலத்தில் மன்னனைத் திருத்தும் கடமை இருந்தது. அதற்காக பாடப்பட்டதுதான திருந்தொண்ட-மாக்கதை. திருத்தொண்டமாக்கதையை படிக்கும் போது சேக்கிழார் பெருமான், மாணிக்க-வாசகத்தின் மறுபிறப்போ என்று எண்ணத் தோன்றும்

அடுத்தபடியாக திருவண்ணாமலைத் திருப்புகழில்

*"நரிமிகுக் கிளைகளைப் பரியெனக் கடிவளக்*
*கையில் பிடித்தெதிர் நடத்திடும் ஈசன்"*

என்று மாணிக்கவாசகருக்காக சிவபெருமான் குதிரைச் சேவகனாக வந்த சம்பவத்தை அருணகிரிநாதர் குறிப்பிடுகிறார். இந்த வரிகளில் ஒரு பெரிய யோக சாஸ்திர உண்மை அடங்கியுள்ளது. ஆக்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் அரசாங்கத்திற்கு சொந்தம் என்று மேல் எழுந்த வாரியாகச் சொன்னாலும் அவைகள் உண்மையிலேயே மக்களுக்கு சொந்தமானது என்றும், அவைகளை மக்களின் நலன் கருதியே செலவிடப்பட வேண்டும் என்று மாணிக்கவாசகர் எண்ணினார். மக்களின் நலனை மறந்து பாதுகாப்பு என்பதன் பெயரால் தேவையில்லாமல் குதிரை வாங்க வேணும் என்று அரிமர்தன பாண்டியன் எண்ணியது இறைவனுக்கே பிடிக்கவில்லை என்றும், ஒருவருக்கு உரியதை உரிமை இல்லாதவர் செலவு செய்தால் எப்படி வஞ்சகத்தனமானதோ அதுபோல வஞ்சனையை வஞ்சனையால் சரி செய்வதற்காகத்தான் யாராலும் கட்டுப்படுத்த முடியாத விலங்கான நரியை பரியாக மாற்றி, மறைமுகமாக பாண்டிய மன்னனுக்கு உணர்த்த நரியை பரியாக்கியதாகவும், நரி என்பது கீழ்நோக்கும் குணமுடையது என்றும் பரி என்பது மேல் நோக்கும் குணமுடையது என்றும் கீழ்நோக்கிச் செல்லும் காற்றை மேல் நோக்கிச் செலுத்தினால் மதி மண்டலம் வெதும்பி, ஞானப்பால் சுரக்கும் என்றும் ஞானப்பால் சுரந்த மாத்திரத்தில் ஆயிரம் இதழ்கள் உடைய தாமரை மலர் போன்ற குதிரையில் இறைவன் பரிமேல் அழகனாக எழுந்தருளியிருப்பான் என்ற யோக சாஸ்திர உண்மைகளை இந்த திருப்புகழில்

புதைத்து வைத்துள்ளார்.

அதே போல திருக்கூடலலையாற்றூர் திருப்புகழில்

*வேற்றுருவிற்போந்து மதுராபுரி யிலாடிவைகை*
*யாற்றின்மண றாங்குமழுவாளி யென தாதை*
என்றும்

மதுரைத் திருப்புகழில்
*வாதபூரனை மதித்தொரு குருக்களென*
*ஞானபாதம் வெளியிட்டு நரியிற் குழுவை*
*வாசியாமென நடத்துவகை யுற்றரச னன்புகாண*
*மாடையாடை தர பற்றிமுலை கைத்து வைகை*
*யாற்றின் மீதுநட மிட்டும ணெடுத்து மகிழ்*
*மாது வாணி தருபிட்டு நுகர்பித்தன்*
என்றும்

பழமுதிர்ச்சோலை திருப்புகழில்
*ஆதித்தார் மனதிற் புகுமுத்த ம*
*கூடற்கே-வைகையிற் கரை கட்டிய*
*ஆளொப்பாயிதிர் பிட்டமுதுக் கடிபடுவோனே*
என்றும்

பழமுதிர்ச்சோலை திருப்புகழில்
*வாசி வாணிகனெனக் குதிரைவிற்று மகிழ்*
*வாத வூரனடிமைக் கொளுக் ருபைக் கடவுள்*
என்றும்

குதிரை மாற்றியதையும், பிட்டுக்கு மண் சுமந்ததையும், அருணகிரிநாதர் சொல்லி மகிழ்வதன் உள்நோக்கம் என்னவென்றால் தமிழ்ச் சமுதாயம் கண்ட இறையாண்மைக் கொள்கை என முப்பொருள் உண்மைக்கு விரோதமாக கடவுட் கொள்கை மறுப்புடைய பௌத்தத்தில் இருந்து "நமச்சிவாய" கொள்கையை காப்பாற்றுவதற்காக இறைவனால் அனுப்பப்பட்டவர் மாணிக்கவாசகர் என்றும், அவர் செய்த திருப்பணியின் உண்மை புரியாமல் அவரைத் தண்டித்த பாண்டிய மன்னனுக்கு புத்தி புகட்டும் வகையில் வெள்ளம் வரச் செய்து, இயற்கை உபாதைகளினால், நாடு காப்பாற்றப்பட வேணும் என்றால் மன்னனாக இருந்தாலும் மக்களின் துணையுடன் தான் இயற்கை சீற்றத்தை தடுக்கமுடியும் என்பதற்காக வைகை கரையை அடைக்க வீட்டுக்கொரு ஆள் தர வேணும் என்றும் பிள்ளைப் பேறு இல்லாதவளுக்கு ஆளாக வந்த சிவபெருமானை பாண்டியமன்னன் பிரம்பால் அடிக்க அது சகல ஜீவராசிகளின் உடம்பிலும் பட்டு வலியைத் தந்தது என்றும் ஆனால் சிவபெருமான் உண்ட பிட்டானது அவரோடு நின்றுவிட்டது என்றும், அது மற்றவருக்கு கிடைக்கவில்லை. அது ஏன்? பிட்டு என்பது தமிழ்நாட்டு உணவு வகைகளில் ஒன்று. மாவிளக்கு போடுவது, தெள்ளுமாவு இடித்து படைப்பது, பிட்டு மாவு இட்டு வழிபடுவது எல்லாம், இந்த ஆன்மாவை மேவி உள்ள வினைக் கழிவாக, இறைவனிடம் படைத்து நாம் மற்றவர்களுக்கு பிரசாதமாய் கொடுப்போம். அது போல ஒரு பெண் வயதுக்கு வந்துவிட்டால் பிட்டு, களி போன்றவைகள் கொடுப்போம் எதற்காக என்றால் வயதுக்கு வந்த பெண்ணின் வினைஉபாதைகளில் இருந்து காக்கவே செய்யும் ஏற்பாடாகும். அதனால் சிவபெருமான் வந்தியிடம் பெற்ற பிட்டு உணவை தான் மட்டும் உண்டானே தவிர வினைக் கழிவாக வந்ததை பிற ஆன்மாக்களை சென்றடையாமல் தன்னுள்ளேயே நிறுத்திவிட்டார். சிவபெருமான் உண்டது வந்தி என்பவள் எத்தனையே பிறவிகளில் செய்த வினையே பிட்டு வடிவில் சிவம் ஏற்றுக் கொண்டதனால், அந்த பிட்டு என்ற வினை மற்ற ஜீவன்களை தொடவில்லை என்பதனால் பிட்டுக்கு மண் சுமந்த உண்மைக்கு பின்னால் உள்ள சித்தாந்த ரகசியத்தை அருணகிரிநாதர் திரும்ப திரும்ப சொல்கிறார். இந்தப் பிட்டை உண்டதனால், வினைக்கழிவு ஏற்பட வந்திக்கு சிவலோகம் சித்தித்தது. ஆகவே ஆன்மாக்களாகிய நமக்கு வினைக்கழிவு ஏற்பட்டால் இந்த ஜீவனானது சிவமென சிறந்துவிடுமாம்.

இப்படி உண்மை பேசிய வைகை நதியின் உயிரானது 1886ம் வருடம் கட்டப்பட்ட பெரியார் அணையினால் எடுக்கப்பட்டது என்பதை நாம் மறந்து விடமுடியாது. தமிழ் வளர்த்த வைகை என்றும் சிவபெருமானுடைய 64 திருவிளையாடல்களுக்கும் களமாக அமைந்த வைகை நதியின் தலைவிதியை இன்று

பாருங்கள். வைகை நதிக்கு மறுவாழ்வு கிடைக்க வேணும் என்று சொன்னால் உச்சநீதி-மன்றத்தினுடைய உத்தரவை கேரள அரசாங்க் மதிக்க வேண்டும் என்பதே இந்த வைகை நதியை தோற்றுவித்த சிவ பெருமானுடைய ஆசையும் ஆகும். பெரியார் அணை கட்டப்பட்டதனால் வாழாவெட்டி ஆக்கப்பட்ட வைகைக்கு மறுவாழ்வு கிடைக்க எல்லாம் வல்ல சிவத்தை வேண்டுவோம்.

ஊமைப் பெண்ணான சிங்களத்து பௌத்த மன்னனின் மகளைப் பேச வைத்த அற்புதத்தை சிதம்பரத்தில் நிகழ்த்திக் காட்டியவர் மாணிக்கவாசகர். சிவபெருமான் அசரீரியாக தோன்றி பிச்சாவரத்தில் இருக்கக் கூடிய மாணிக்கவாசகரை சிதம்பரத்துக்கு கொண்டு வந்த சம்பவமாகும். அவர் தங்கியிருந்த இடம்தான் பித்தன் வரம். தற்போது பிச்சாவரம் என்று அழைக்கப்படுகிறது. தில்லை அம்பலவாணரின் அருளினால் பௌத்த மன்னனையே திருத்தியவர் மாணிக்கவாசகர். இன்றும் இலங்கை மக்களுக்கு ஜாதி, சமய,மத மொழி போன்ற துவேஷம் இல்லாமல் அந்த மக்களை ஒன்றிணைத்து வாழக்கூடிய ஒரு அமைதின சூழ்நிலை உருவாக வேண்டிய அவசியத்தையும் அதே சிவத்திடம் வேண்டுவோம்.

ஆகவே வழி வழி அடிமையென வந்த மாணிக்கவாசகருக்கு, திருக்குருந்த மரத்தடியில் உபதேசம் செய்து தீட்சை வழங்கியதும் நரியைப் பரியாக்கியதும், பிட்டுக்காக மண்சுமந்த இந்த மூன்று சம்பவங்களும் இந்த தமிழ்சமுதாயம் கண்ட முப்பொருள் உண்மையை காக்க வந்த சம்பவம் என்றும், பௌத்தத்தில் இருந்து இந்த தமிழ்தான் திருவாசகம் என்ற தேன்.தேன் தன்னையும் காத்துக் கொண்டு தனக்குள் போடப்பட்ட பொருளையும் காக்கக் கூடியது. அதுபோல சிவத்தையும் காட்டி அந்த சிவத்திற்குள் தங்கியிருக்கக்கூடிய ஜீவனையும் காக்கக்கூடிய இயல்புடைது என்பதனால் திருவாசகத்தை தேன் என்றார்கள். வேதம் படித்தால் ஞானம் கிட்டும் ஆனால் திருவாசகம் படித்தால் இந்த ஜீவன் சிவமாகிவிடும். ஜீவனை சிவமாக்கும் ஆற்றல் உடையது என்றும், தாய்மொழியான தழிழைச் செம்மொழியாக்கிய பெருமை திருவாசகத்திற்கு உண்டு என்றும் இழந்த இறையாண்மையை ஆன்மா மீண்டும் பெறும் என்பதே உண்மை என்று உறுதி கூறி முடிக்கிறேன். இந்த கட்டுரையை இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு சமர்ப்பிக்கிறேன். மாணிக்கவாசகரை ஆட்கொண்ட சிவம் இலங்கை மக்களையும் காக்கும்படி வேண்டிக் கொள்கிறேன்.

---

## ஆலயம் என்பது மனித உடம்பைப் போலவே அமைக்கப்பட்டிருக்கின்றது என்பதன் விளக்கம்

| ஆலயத்தின் பாகம் | | எந்த மனித உடம்பின் உறுப்புக்களைப்போல அமைக்கப்பட்டுள்ளது என்பது |
|---|---|---|
| பாதங்கள் | - | முன்கோபுரம் |
| முழங்கால் | - | ஆஸ்தான மண்டபம் |
| துடை | - | நிருத்த மண்டபம் |
| தொப்புள் | - | பலிபீடம் |
| மார்பு | - | மகாமண்டபம் (நடராஜன்) |
| கழுத்து | - | அர்த்த மண்டபம் (நந்தி) |
| சிரம் | - | கர்ப்பகிரகம் |
| சிரத்திலுள்ள | | |
| வலது செவி | - | தட்சிணாமூர்த்தி |
| இடது செவி | - | சண்டிகேசுவரர் |
| வாய் | - | ஸ்நபந மண்டப வாசல் |
| மூக்கு | - | ஸ்நபந மண்டபம் |
| புருவ மத்தி | - | லிங்கம் |
| தலையின் உச்சி | - | விமானமாகும் |
| ஷேத்திரம் | - | சரீரப் பிரஸ்தாரம் |

என்று சொல்வார்கள்.

# யாகம் செய்வது ஏன்?

*காஞ்சி மாமுனிவர் சந்திரசேகரேந்திர ஸ்வாமிகள்*

மந்திரங்களை வாயால் சொல்லிக்கொண்டு, அதோடு கூட அதற்கான ஒரு காரியத்தையும் அக்னி முகமாகப் பண்ணுவது தான் (யக்ஞம்) யாகம். 'யஜ்' என்கிற வேர்ச் சொல்லிலிருந்து வந்தது 'யக்ஞம்' 'யஜ்' என்றால் வழிபடுவது, பக்தி செலுத்துவது என்று அர்த்தம். பரமாத்மாவிடமும், தேவதைகளிடமும் ப்ரீதிபூர்வமான உணர்ச்சியுடன் ஒரு வழிபாடாகச் செய்யப்படுகிற கர்மமே யக்ஞம்.

நம் மதத்தில் மட்டும் ஏன் யக்ஞம் இருக்கிறது? என்று ஆலோசிக்கிறபோது, இவ்வுலகில் மனிதர்களாகிய நம்முடைய ஜீவனரீதியைக் கவனிப்போம் ஓர் ஊரில் ஒரு தான்யம் அதிகமாக விளைந்தால், அதை அந்த தான்யம் விளையாத ஊருக்கு அனுப்பி, நம் ஊரில் விளையாததும். அந்த ஊரில் விளைவதுமான மற்றொரு தான்யத்தை வாங்கிக் கொள்கிறோம். தச்சன், கொல்லன் முதலியவர்கள் நமக்காகச் சில காரியங்களைச் செய்கிறார்கள்; நாம் அவர்களுடைய காலக்ஷேபத்திற்கு வேண்டியவைகளைக் கொடுக்கிறோம். பசுக்களுக்குப் புல் போடுகிறோம். அவை நமக்குப் பால் கொடுக்கின்றன. நாம் ராஜாங்கத்திற்கு வரி கொடுக்கிறோம். அவர்கள் நமக்குத் தீங்கு வராமல் காவல் கட்டுச் செய்கிறார்கள். இப்படி உலக முழுவதுமே பரிவர்த்தனை க்ரமத்தில் (Exchange ) நடந்து வருகிறது. இப்படியே நாம் லோகாந்தரங்களுடன் சில பரிவர்த்தனை செய்துகொண்டிருக்கிறோம். இஞ்ஜீனியர் முதலியவர்கள், பெய்த மழை நீரை ஒழுங்காகப் பிரித்து ஆறு முதலியவைகளில் பாயும்படி விடுவார்களேயொழிய, மழைபெய்யும்படி செய்ய அவர்களால் முடியாது. மழை பெய்ய வேண்டுமானால், நாம் சில பொருள்களைத் தேவலோகத்திற்கு அனுப்ப வேண்டும். இந்த பரஸ்பர பரிவர்த்தனையையே கீதையில் சொல்லியிருக்கிறது.

*தேவான் பாவயதானேன தேதேவா பா வயந்து வ:*
*பரஸ்பரம் பாவயந்த ச்ரேய: பரம் அவாப்ஸ்ய*

இதன் அர்த்தம்: "யாகத்தைக் கொண்டு நீங்கள் தேவர்களைத் திருப்தி செய்து வையுங்கள். அந்த தேவர்கள் மழை முதலியவற்றால் உங்களுக்கு க்ஷேமத்தைச் செய்யட்டும்; இப்படியே நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டு, மேலான க்ஷேமத்தை அடையுங்கள்."

யாகம் என்பது மந்த்ரம், தேவதை, ஹவிஸ் என்ற மூன்று ஸ்வரூபமாக உள்ளது. அவைகளுள் மந்தரம் என்பது வாயால் சொல்லப்பட வேண்டும். தேவதையை மனசால் தியானம் செய்ய வேண்டும். ஹோமம் செய்வதற்கு முக்கியமாக வேண்டிய திரவியமே ஹவிஸ். அது காரியத்தில் ஆஹுதியாக அக்னியில் செலுத்தப்பட வேண்டியது. இவ்வாறு மனோ-வாக் காயம் என்ற மூன்றும் ஒருமுகப் படுத்தப் பெறுகின்றன.

ஹவிஸ்ஸில் நெய் முக்கியம். வெறும் நெய்யே ஹோமம் செய்யப்படுவது மட்டுமின்றி, வேறு எதை ஹோமம் செய்தாலும், அதை நெய்யால் சுத்தி செய்தே ஆஹுதி பண்ண வேண்டும்.

'வேள்வி' என்று இதற்கு ரொம்பவும் பழைய தமிழ்ப் பெயர் இருக்கிறது. ஒரே பரமாத்மாவுக்காக இல்லாமல், பல தேவதைகளுக்கு ஆஹுதிகளை அர்ப்பணம் பண்ண வைப்பதே யக்ஞம். இந்த யக்ஞம் என்பது தான் பாக்கி மதங்களில் இல்லாமல் நமக்கு மட்டும் இருப்பதாகும்.

யக்ஞத்திலே அநேக விதமான திரவியங்களை மந்திர பூர்வமாக அக்னியில் போடச் சொல்லியிருக்கிறது. இப்படிப் போடுவதற்கு ஹோமம் என்று பெயர். அக்னியில் போட்டாலும் அக்னிக்கே இந்தத் திரவியங்களை ஸமர்ப்பணம் பண்ணினதாக அர்த்தமில்லை. அக்னியை உத்தேசித்த மந்திரங்களைச் சொல்லி அதில் போடுவது மட்டுந்தான் அக்னியைச் சேர்கிறது. ஆனால் மற்றத் தேவதைகளான ருத்ரன், விஷ்ணு, இந்திரன், வருணன், மாதரிச்வன் (வாயு), ஸோமன் முதலானவர்களுக்கான ஆஹுதிகளையும் அக்னியில்தான் போடவேண்டும். அக்னி இவற்றைத் தானே எடுத்துக் கொள்ளாமல், இவற்றின் ஸாரத்தை அந்தந்த தேவதைக்கு அனுப்பி வைப்பான். பல அட்ரஸ்களுக்கு எழுதின கடிதங்களை ஒரே தபால் பெட்டியில் போடுகிற மாதிரி, பல தேவதைகளுக்குமான அவிகளை (ஹவிஸ்களை) அக்னியொன்றிலேயே ஆஹுதி பண்ண வேண்டும்.

மற்ற மதங்களுக்கும் வைதிக மதத்துக்கும் இருக்கிற பெரிய வித்யாஸம், ஒரே ஒரு கடவுள் என்று சொல்லி அவருக்கு மட்டும் வழிபாடு பண்ணுவது என்றில்லாமல், பல தேவர்களுக்கு அக்னிமுகமாக ஆஹுதி பண்ணுவதுதான். யக்ஞத்துக்கு மூன்று விதமான பிரயோஜனங்கள். ஒன்று, இங்கே உயிர் வாழ்கிற போதே நமக்கும் ஸமஸ்தப் பிராணிகளுக்கும் தேவர்களின் அருளினால் க்ஷேமத்தைப் பெறுவது. இரண்டாவது, செத்துப்போன பிறகு நாம் தேவ லோகம் போய் ஆனந்தமாக இருப்பது.

தேவலோக வாஸம் நிரந்தரமானதில்லை. நம் புண்ணியம் தீருகிற வரைதான் அங்கு இருக்க முடியும். தேவலோக இன்பம் என்பது பரம பக்தர்கள், ஞானிகள் ஆகியவர்கள் அடைகிற ஆனந்தத்தைப்போல் பூர்ணமானதுமல்ல. ஸ்வர்க்க ஸௌக்யம் என்பது ஆத்மானந்தம் அல்லது ஈசவரனை அநுபவிக்கிற இன்பத்துக்கு ஸமதையே இல்லை. இந்திரனின் இன்பமும் ஆத்மானந்தத்தில் துளித்துளிதான் (லேச லேசம் தான்) என்று ஆசார்யாள், 'மநீஷத பஞ்சகத்தில் சொல்லியிருக்கிறார். ஆனாலும் இந்த மநுஷ்ய லோகத்தில் ஓயாமல் அழுதுகொண்டிருப்பதைக் காட்டிலும் ஸ்வர்க்க வாஸம் என்பது எத்தனையோ ஆயிரம் மடங்கு உயர்ந்ததுதான். இப்படி தேவலோக வாசத்தை விரும்பி நாம் யக்ஞ கர்மாநுஷ்டானம் பண்ணினால், விரும்பிய அந்தப் பலனை அது கொடுக்கிறது என்பது யக்ஞத்தின் இரண்டாவது பிரயோஜனம்.

மூன்றாவதுதான் முக்கியமானது. அது என்னவென்றால் பலனை நினைக்காமல் கீதையில் சொன்னபடி நிஷ்காம்யமாக யக்ஞம் புரிவதால் ஏற்படுவது. இந்த லோகத்தில் நமக்கு க்ஷேமம் வேண்டும் பிறகு தேவலோகம் போக வேண்டும் என்பதெல்லாம் பலனை உத்தேசித்துத்தான். இப்படி உத்தேசிக்காமல். "லோக க்ஷேத்துக்காக இது நமக்குக் கடமையாக வந்திருக்கிறது" என்ற ஒரே உணர்ச்சியோடு, சொந்தப் பலனில் பற்றில்லாமல் யக்ஞங்களைப் பண்ணினால்,அது விரைவிலேயே சித்த சுத்தியைக் கொடுத்து, நம்மை ஞான மார்க்கத்தில் சேர்த்து, முடிவிலே சாச்வத ஆனந்தமான மோக்ஷத்தில் சேர்த்துவிடும். அதாவது, பரமாத்மாவோடு பரமாத்மாவாக நாம் கரைந்திருக்கிற நிலைக்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிடும்.

ஆத்ம ஸாக்ஷாத்காரத்தையும் ஞானத்தையுமே சொன்ன ஆதிசங்கர பகவத்பாதாள், "வேதோ நித்யம் அதீயதாம்: தத் உதிதம் கர்ம ஸீ அநுஷ்டீய தாம் - தினமும் வேதம் ஓதுங்கள்; அதில் சொல்லியிருக்கிற யக்ஞாதி அநுஷ்டானங்களை நன்றாகப் பண்ணுங்கள்" என்று சொன்னது. இந்த மூன்றாவது பிரயோஜனத்தை உத்தேசித்துத்தான். இந்த - லோக வாழ்க்கை நன்றாக இருப்பதற்காகவோ, பிறகு தேவலோகம் என்றும் ஸ்வர்க்க லோகம் என்றும் சொல்லப்படும் கேளிக்கை உலகத்தில் நாம் போய் இருப்பதற்காகவோ அவர் இப்படிச் சொல்ல வில்லை. இப்படிப்பட்ட அல்ப பலன்களை நினைக்காமல், ஆத்மாவைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே வேத கர்மாக்களை நிஷ்காம்யமாகப் பண்ணினால், அது சித்த சுத்தி தரும் என்பதால்தான் ஆசார்யாளும் யக்ஞா நுஷ்டானம் பண்ணவேண்டும் என்று ஆக்ஞை போட்டிருக்கிறார்.

- 'தெய்வத்தின் குரல்" நூலிலிருந்து.

---

# பன்னிரு கீதைகள்

குருக்ஷேத்திரப் போர்க்களத்திலே அர்ஜினனை முன்வைத்து அகில உலகத்துக்கும் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா அருளியது - பகவத் கீதை.

பகவான் ராமனாக அவதரித்து பரதனை முன்வைத்து சித்திரக்கூட்டத்தில் புரிந்த தத்துவ உபதேசமே - ராம கீதை.

அகஸ்தியர் ராமனிடம் சிவபெருமானின் பெருமைகளை விளக்கி பாசுபத விரதத்தைப் போதிப்பதே - சிவகீதை.

தன்னை மகளாக அடைய விரும்பிய பர்வதராஜனுக்கு அம்பிகை அருளியதே - தேவி கீதை.

முத்கள புராணத்திலே ஸ்ரீகணபதியே உபதேசித்துள்ள சத்தியத் தத்துவமே - கணபதி கீதை.

ஸ்காந்த புராணத்தில் உமாமகேஷ்வரர் சம்வாதவடிவில் குருதத்துவ இலக்கணமாக விளங்குவதே - குருகீதை.

நசிகேஸ்ஸுக்கு யமதர்ம ராஜனே உபதேசித்தும், கடோப உபநிஷத்தில் விரிவாகக் கூறப்படுவதும்தான் - யம கீதை.

ஸ்ரீமத் பாகவதத்தில் பதினோறவது ஸ்கந்தத்தில் பகவான் கண்ணன் உத்தவருக்கு உபதேசித்த தூயதத்துவமே - ஹம்ஸ கீதை.

பால சந்நியாசியான தத்தாத்ரேயர், யது மகராஜனுக்கு செய்த உபதேச ஜோதியே - தத்த கீதை.

ஜனக மகராஜாவுக்கு அஷ்டாவக்ரர் என்ற மகான் செய்வித்த சத்தியோப தேசமே - அஷ்டாவக்ர கீதை.

" காணும் அனைத்துமே பிரம்மம். நாமனைத்தும் அதன் ஸ்வரூபமே பேத புத்தியிலுள்ள மோகத்தை விலக்கு" என்று பிரம்ம புத்திரரான ரிபு அவரது சீடர் நிதாகருக்கு அருளிதே - ரிபு கீதை.

மனிதனின் முழுமுதற் சத்ருவான மனதை அடக்கியாளும் வழிமுறைகளைத் தெளிவாகக் கூறி தெய்வபக்தியை வலியுறுத்துவதே பிக்ஷு கீதை.

# பூரண கும்பம்

உலகமும் அதிலுள்ள தாவர சங்கமப் பொருட்களும் சகல ஆத்மாக்களும் நீரிலிருந்தே உண்டாகின்றன. மறுபடியும் பிரளய காலத்தில் தண்ணீரிலேயே லயமாகி விடுவதாக வேதம் கூறுகிறது. ஆகையால் ஆதிகர்த்தாவாகிய இறைவன் நீரின் மூலம் உருவ வழிபாட்டுக்குக் கொண்டுவருவதே பூரண கும்பத்தின் அர்த்தம்.

இப்பூர்ண கும்பத்தை மனித உடலாகப் பாவித்து அதில் இறைவனை தியான, ஜெப, பிரார்த்தனையின் மூலம் யாக சாலையில் வைத்து யாகமும் பூஜைகளும் செய்யப்படுகின்றன. சக்தி வாய்ந்த ஸ்ரீ ஜாக்ஷரங்கள் கொண்ட மந்திரங்களில் கும்பநீர் சுத்தி செய்யப்பட்ட அதில் தெய்வ ஆவாகனம் செய்யப்படுகிறது. இந்த நீர் கெடாதிருக்க, கராம்பு, ஜாதிக்காய், பச்சைக்கற்பூரம், குங்குமப் பூ முதலிய திரவியங்கள் சேர்க்கப்படுகின்றன. அஷ்ட லஷ்மிகளின் கடாட்ஷம் நிறைந்திருக்க மாவிலை வைக்கப்படுகிறது. தேங்காய், மஞ்சள், குங்குமம், பூ, தர்ப்பை, கூர்ச்சம், ஸ்வர்ணம், அக்ஷதை ஆகிய எட்டு மங்களப் பொருட்களால் கும்பம் அலங்கரிக்கப்படுகிறது.

## கும்ப தத்துவம்

மங்கல காரியங்களுக்காக வைக்கப்படும் நிறைகுடத்தில் 5 மாவிலைகள் இடம் பெறுகின்றன. இவ்வைந்து மாவிலைகளும் ஐம்புலன்களையும் நினைவுபடுத்துவதாக அமைகின்றன. குடமும் நீரும் நமது உடலை நினைவுபடுத்துவதாகும். நிறைகுடமாகிய பூரண கும்பத்தை ஒரு முழுமதியாக ஒப்பிட்டார் கம்பர். எப்படியிருப்பினும் மனித உடல் ஐம்புலன் சிரசு இவற்றை அடக்கும் கருவியாக பூரணகும்பம் இடம்பெறுகிறது. பூரணகும்பம் இல்லாத சடங்குகளே இல்லை என்றே கூறலாம். கும்பமானது பூசைக்கு உட்படுத்தும் போது (யாகங்களில் அபிஷேகங்களில்) வாழை இலையின் நுனி வடக்கு முகமாகவோ அல்லது கிழக்கு முகமாகவோ அமைய வைக்க வேண்டும்

## நிறைகுடம்

குடம் - தசை, அதனுள் உள்ள நீர் - இரத்தம். குடத்தைச் சுற்றியுள்ள நூல்-நாடிகள். மாவிலை-சடை, தேங்காய்-தலை, வஸ்திரம்-தோல், அதற்குள் இடும் ரத்தினம்- எலும்பாகப் பாவனை செய்யப்படும். வாழையிலை-ஆசனம், நெல்-ஆசனம்.

## நிறைகுடம் வைத்தல்

ஒரு மேசையில் தலைவாழையிலை ஒன்றை எடுத்து விரித்து அதன்மேல் நெல் அல்லது பச்சை அரிசி பரப்பி அதன் மேல் கும்பத்தை வைக்க வேண்டும். இரு அருகிலும் குத்துவிளக்கு ஒவ்வொன்று வைக்க வேண்டும். ஒரு தட்டில் வாழைப்பழச் சீப்பு ஒன்று வெற்றிலை, பாக்கு (முழுப்பாக்கு3) அல்லது சீவல், தேசிக்காய் ஒன்று வைக்க வேண்டும். பிள்ளையார் மஞ்சளில் பிடித்து வைக்கலாம் அல்லது ஏதாவது ஒரு சின்ன பிள்ளையார் சிலை வைக்கலாம். வலப்பக்கம் இன்னொரு தட்டில் சந்தனம், குங்குமம், பன்னீர் செம்பு, விபூதி வைக்க வேண்டும்.

நிறைகுடத்திற்கு ஒரு சிறிய மாலை போடலாம். விளக்குகளை பூக்களால் அலங்கரிக்கலாம். நாம் கும்பத்தை நோக்கும் போது பிள்ளையார் இடப்பக்கத்தில் இருக்க வேண்டும்.

நிறைகுடமானது ஒரு மங்களச் சின்னம் அதை வாசலில் வரவேற்பிற்காக வைப்பர். இங்கு நாம் கும்பத்தை நோக்கும் போது வாழையிலை நுனி எமக்கு இடப்பக்கம் அமைய வைக்க வேண்டும்.

# திருமந்திரத்தில் சக்திவழிபாடு

## சேது முருகபூபதி

*"தேவர்குறளும் திருநான்மறையின் முடிவும்*
*மூவர்தமிழும் முனி சொன்ன கோதையும்*
*திருவாசகமும் மூலன் சொன்ன சொல்லும்*
*ஒரு வாசகம் என்று உணர்"*

இது தமிழ் மூதாட்டி ஔவையின் பாடல். இதில் திருமந்திரத்தை மூலன் சொன்ன சொல் என்று குறிப்பிடுகிறார். வடக்கே இருந்து இரண்டு சுந்தரங்கள் வந்தது. ஒன்று திருத்தொண்டர் தொகை தந்த சுந்தரர். மற்றொன்று திருமூலர் என ஆன சுந்தரநாதன். சுந்தரநாதன் கயிலாயத்தில் இருந்து அகத்தியரிடம் தமிழ் கற்றுக் கொள்வதற்காக, தவத்தையும் நல்ல பண்புகளை மட்டுமே சுமக்கும் ஒழுக்கத்தையே பொதியாக சுமந்து விளங்கும் பொதிகை மலையை நோக்கி வந்த சுந்தரநாதன், சாத்தானூரில் இறந்து கிடந்த மூலன் உடம்பில் புகுந்தான். அஷ்டமா சித்திகள் பெற்றவன் என்பதனால் கூடு விட்டு கூடு பாய்ந்து மூலன் என்ற தமிழ் உடம்பில் புகுந்த மாத்திரத்திலே அவன் ஆன்மாவிற்கும் தமிழ் பாடல் ஆற்றல் வந்தது. சொல்லுலகம் என்ற காட்டில் மொழி என்ற கிளையில் ஆன்மா என்ற பறவை தங்கும். எந்த கிளையில் ஆன்மா என்ற பறவை தங்குகிறதோ அதன் இயல்பாகவே மாறும். அதுபோல தமிழ்மொழி பேசிய மூலன் உடம்பில் சுந்தரநாதன் என்ற ஆன்மா நுழைந்ததும் தமிழ் மொழி பேசும் ஆற்றல் வந்தது. அதுமட்டுமில்லை வேத மார்க்கத்தினால் இருட்டடிக்கப்பட்டு இருந்த (பதி-பசு-பாசம்) என்ற முப்பொருள் உண்மையை மையமாக வைத்து மீண்டும் தமிழ்ச் சமுதாயம் கண்ட சைவ நீதி என்ற உண்மையை தமிழால் தமிழனுக்கு சொல்லும் வன்மையையும் திருமூலர் சொல்லி உள்ளார். இதுதான் அநாதி சைவம் எனப்படும்.

சொல்லுலகத்தில் மந்திரம்-பதம்-வண்ணம் என்று மூன்று நிலைகள் உண்டு. மந்திரம் என்றால் சொற்றொடர் எனப்படும். 'மந்' என்றால் நினைப்பது என்று பொருள், 'திரம்' என்றால் நினைப்பவரை காப்பாற்றுவது என்று பொருள். மந்திரம் என்றால் நினைப்பவரை காக்கும் சொற்றொடர் எனப் பொருள்படும். ஒருவருடைய சொல் நினைப்பவரை காக்கும் ஆற்றலை எப்பொழுது பெறும் என்றால் சொல்லைச் சொல்லுபவன் கல்வி, கேள்வி, ஞானம் போன்றவைகளில் சிறந்தவனாகவும், அன்பு, பண்புகளில் உயர்ந்தவனாகவும் கருவி, கரண ஒழுக்கங்களில் தவறாதவனாக விளங்கினால் அவனுடைய சொற்கள் தெய்வீகத் தன்மை பெறும். இந்த ஆற்றல்களை சமயக் குரவர்கள் பெற்றிருந்தார்கள். ஆகவே அவர்கள் பாசுரம் பாடியே அதிசயத்தையும் அற்புதத்தையும் காண்பித்து பேசப்பட்ட கடவுட்கொள்கைகளில் சைவ நீதியே சிறந்தது என்று நிலைநாட்டவும் செய்து பிறந்த மந்திரங்களில் நமச்சிவாயம் என்ற மந்திரமே சிறந்தது என்று நிலை நாட்டவும் செய்துள்ளார்கள். இப்படி பாசுரங்களில் ஆச்சரியத்தை உண்டாக்கிய சமயக் குரவர்களை போல நம்மால் செய்ய முடியவில்லை ஏன் ? மேலே சொன்ன மூன்று தகுதிகளும் ஒருங்கே நம்மிடத்தில் யாரிடத்திலும் இல்லை என்பதுதான் உண்மை. தெய்வ நம்பிக்கையை கூட அற்புதத்தையும் ஆச்சரியத்தையும் காட்டி வளர்த்து வந்ததனால் அதுபோல அற்புதத்தையும் ஆச்சரியத்தையும் கண்கூடாக காட்டினால் தான் நம்ப முடியும் என்று பகுத்தறிவாதம் பேசுகிறார்கள். அதில் தவறில்லை.

இறைவன் மந்திர வடிவானவன் என்பதை திருஞானசம்பந்தர் மந்திரமாவது திருநீர் என்றார்.

*"மறைமொழி மாந்தர் ஆணையில் கிளர்ந்த*

*நிறை மொழிதானே மந்திரம்''* என்பார் தொல்காப்பியர்

*''நாதவிந்துக்கள்லாதி நமோநம*
*வேத மந்திர ஸ்வரூப நமோ நம''*
என்பார் அருணகிரியார்.

இப்படி தான் பாடிய மூவாயிரம் பாடல்களுக்கு "திருமந்திரம்'' என்று பெயர் பெற்று உள்ளது என்றால் அந்த பாடல்களின் அருமை பெருமைகளை முழுவதும் சொல்லமுடியாது இருந்தாலும் தலைப்பை ஒட்டி ஒரு சிலவற்றைச் சிந்திப்போம்.

"திரு'' என்ற சொல்லுக்கு இறவாத இன்ப-அன்பு எனப் பொருள்படும். திரு என்ற அடைமொழி உடைய ஆன்ம இலக்கியம் ஏதாவது ஒன்றைப் படித்தால் அது என்ன செய்யும் என்றால் இது நாள் வரை ஆன்மாவை நோய் போல் ஒட்டி வந்த பிறப்பு இறப்பு என்ற நோயை உயிரில் இருந்து கழித்து விடும். அப்படி இறப்பு கழிக்கப்பட்ட உயிர்-பிறப்புக்கு தகுதி அற்றதாகிவிடும். பிறப்புக்கு தகுதி இல்லாத ஜீவனை சிவமெனச் சிறக்கச் செய்து உய்வு என்ற உரிமையை தந்து இறைவனுக்கு உரியதாக ஆக்கும். ஆன்மா என்றைக்குமே சுதந்திரம் இல்லாத ஒன்று அது இறைவனையோ அல்லது பாசத்தையோ சார்ந்திருக்கும்.

திருமூலரின் திருமந்திரம் 12 திருமுறைகளில் 10ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. காலத்தால் முந்தியது. திருமந்திரம் என்பதுமே அது சிவத்தைப்பற்றித் தானே இருக்கும் என்று நாம் சிந்திப்போம். அங்கே சக்திக்கு என்ன வேலை என்று எண்ணுவோம். ஆனால் சாக்த தர்மத்தில் வாழும் சக்தி உபாசகர்கள் கூட ஆச்சர்யப்படும் வகையில் திருமந்திரத்தில் பராசக்தியைப் பற்றி ஒருபாடு குறிப்பிட்டுள்ளார்.

*''விண்ணின்று இழிந்து வினைக்கீடமாய்*
*மெய்கொண்டு*
*தண்ணின்ற தாளை தலைக்காவல் முன்வைத்து*
*விண்ணன்று உருக்கி ஓர் ஒப்பிலா ஆனந்த*
*கண்ணென்று காட்டி களிம்பறுத்தானே'',*

அதாவது ஆன்மாக்களை மேவி உள்ள களிம்பை அகற்றுவது இறைவனின் கருணையினால் நிகழ்வது. அதனால் ஆன்மாவை விட்டு எப்பொழுதும் இறைவன் நீங்கமாட்டான் காவலாக இருப்பான் என்று திருமூலர் கூறுகின்றார். தண்ணின்ற காவல், தலைப்பெய்தி என்பதன் பொருள், காரணங்கள், இரண்டு என்றும் ஒன்று அநாதி காரணம் மற்றொன்று ஆதிகாரணம் என்றும் பிரிக்கப்படுகிறது. அநாதி தொட்டே ஆன்மாவை மேவி உள்ள (பாசம்) ஆணவம் போன்ற மும்மலங்களின் வஞ்சனை காரணமாய் (பசு) ஆன்மா தன் வலிமை குன்றி இருக்கும் என்றும் இதற்கு துணையாக (பதி) ஆகப்பட்ட இறைவன், மனம், புத்தி, சித்தி போன்ற மூன்று அந்தக் கரணங்களை துணைக்கு வைத்து உதவுவார் என்றும் துணையாக வந்த அந்த கரணங்கள் தன்னுடைய நோக்கத்தை மறந்து ஆன்மாவை உண்மை நெறியை விட்டு விலகச் செய்து இறையாண்மையை மறைக்கும். இது, அநாதி காரணம் இதற்கு ஆன்மா எந்த-வகையிலும் பொருப்பு இல்லை. இந்த அநாதி காரணமாய் உண்மை நெறியை விட்டு விலகிய ஆன்மா வலிமை குன்றும். அப்பொழுது ஆணவம் மேவும். மேவிய ஆணவம் ஆன்மாவை வினைப்படச் செய்யும். இப்படி வினைவயப்பட்ட ஆன்மாவுக்கு அந்தக் கரணங்களும் தன் நிலை மறந்து வழி நடத்தும். வினை வழியே செல்லும். துணைக்கு வந்த அந்த கரணங்களும் தன் கடமையை மறந்து வினைவயப்பட்டதனால் மீள வகையறியாது, இழந்த இறையாண்மையைப் பெற முடியாமல் தத்தளிக்கும். இது அதிகாரணம் எனப்படும். ஆன்மாக்களை கரை சேர்க்கும் பொருட்டு பதியான இறைவன் ஆகமம், வேதம் போன்றவைகளை அருளியதோடு அல்லாமல், இறைவன் தனது உள்ளம் என்ற கயிலாயத்தில் இருந்து அகம் அல்லது நான் என்ற முனைப்புடன் பிரிந்து சென்ற ஆற்றலே பராசக்தி எனப்படும். பரசிவத்தின் உள்ளத்தில் இருந்து பிரிந்ததனால் அந்த ஆற்றலுக்கு பராசக்தி எனப்பட்டது.

இவைகள் யாவும் அருவநிலையில் நடக்கும் சம்பவங்கள்.

இந்த சக்திதான் எப்படியெல்லாம் வடிவம் மாறுகிறது, என்ன செய்கிறது என்பன போன்ற உண்மைகளை திருமூலர் தாம் பாடிய திருமந்திரத்தில் நான்காம் தந்திரத்தில் ஒன்பது தலைப்புகளில் 373 மந்திரங்களாக பாடியிருக்கிறார்.

ஆன்மாக்களை உய்வடையச் செய்ய வேணும் என்ற இறைவனின் உள்ளமே அருளாக மாற அதுவே சக்தியாய் பரிமணித்தது என்றும் அரனுக்கு சக்தியாய் விளங்கும் அருட்சக்தியே இறைவன் என்பவனின் திருஉள்ளப்படி மூன்று கண்டங்கள் என்று திரிபுரையாகவும் அவை, சக்கரம், மந்திரம் என ஆனது என்றும் மாமாயை எனப் பிரிந்து, சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை என்றும் விந்து, வைகரி வாக்கு-ஓம் என்ற பிரணவம் மற்றும் ஆறு இறுதிகளை உடைய மந்திரம் என்றும், மாமாயை எனப் பிரிந்தது சுத்தமாயை, குடிலை, விந்து, குண்டலினி மாயை எனப் பிரிந்து அதுவே அசுத்தமாயை, அதோமாயை, மோகினிமாயை எனவும், மாமாயையானது திரிபுரமாயை என்றும், திரிபுரமாயையானது ஒலி-உலகு, பொருள்-உலகு எனவும் மூன்று கண்டங்கள் (அக்கினி-சூரிய-மதி) எனவும் பிரிந்து திரிபுரை எனப்பட்டவள் பரை-அபிராமி- அகோசரி என்றும் உருவானது என்றும்,

*"தாளணி, நூபுரஞ் செம்பட்டுத் தானுடை*
*வாரணி கொங்கை மலர்க் கன்னல் வாளிவில்*
*ஏரணி அங்குச பாசம் எழில் முடி*
*காரணி மாமனி குண்டலக் காதிக்கே"*

என்று இராஜ ராஜேஸ்வரியையும்

*குண்டலக்காதி கொலைவில் புருவத்தள்*
*கொண்ட வரத்தின் மன்னு கோலத்தள்*
*கண்டிகையாரங் கதிர்முடிமாமாதிச்*
*சண்டிகை நாற்றிசை தங்கி நின்றாலே*

என்று சண்டிகா தேவியைப் பற்றியும்

*"நின்று திரிபுரை நீளும் புராதனி*
*குன்றலில் மோகினி மாதிருக் குஞ்சிகை*
*நன்றறி கண்டிகை நாற்காற் கரீடனி*
*துன்றிய நற்சுத்த தாமரைச் சுத்தையே"*

என்று கஜலட்சுமியையும்

*"சுத்தவம் பாரத்தனத்தி சுகோதயன்*
*வத்துவ மாயா ஞமாசக்திமாபரை*
*அத்தகையான மனோரணி தானுமாய்*
*வைத்தவக் கோல மதியவளாகுமே"*

என்று மனோ ஆரணியைப் பற்றியும் என்றெல்லாம் சொல்லால் அடையாளம் காட்டிய திருமூலர் எங்கு சிவமுள்ளதோ அங்கே தானும் பிரியாது இருப்பாள் என்பதையும் எல்லாம் சக்தியின் செயலே என்றாலும் எங்கே சிவம் உள்ளதோ அங்குதான் சக்தி செயல்பட முடியும் என்பதை சிவமில்லையேல் சக்தி இல்லை என்பதை

*"தானெங் குதங்குள தையன் மாதேவி*
*ஊனெங்குள அங்குள்ளுயிர்க் காவலன்*
*வானெங்குள அங்குளேவந்து மப்பாலாம்*
*கோனெங்கும் நின்ற குதிபல பாரே"*

என்றும்,

*நின்றா ளவன்றன் உடலும் உயிருமாய்ச்*
*சென்றாள் சிவகதி ரேம் பராசத்தி*
*ஒன்றாக என்னுட் புகுந்துணர் வாகியே*
*நன்றாள் பரங்சுடர் ஏடங்கை யாளே.*

இதன் பொருள் பராசக்தி உயிருட்கலந்து நிற்கும் நிலையை உணர்த்துதலை அறிவிக்கின்றது. இந்தப் பாடலின் பொருள் பரசிவத்தின் உடலும், உயிருமாக கலந்து நின்றால், உயிர்களோடு உடனாய்ச் சேர்ந்துள்ள பராசக்தி சிவகதிக்கண் சென்றாள் என்றும் என்னோடு ஒன்றாக அடியேன் உயிருக்குள் புகுந்து உணர்வாகி நின்றாள். அங்ஙனம் நின்றவள் புத்தக தாரிணியாகிய பரஞ்சுடர் வடிவானவள் என்று சொல்லப்படுகிறது. அவன் தன் உடம்பிலும் உயிருமாய் நின்றாள் என்றது சிவத்தோடு அபின்னமாய் நிற்றலை

உணர்த்தியது. சிவகதி சென்றால் என்றது முத்தி இன்பத்திலே ஆன்மாக்களை உய்விப்பவள் என்பதாம். சென்றாள் என்பதனைச் செல்வித்தாள் எனப் பிறவினையாக்குக. என்னுட்புதுந்து உணர்வாகியே என்றது ஒன்றாதலை உணர்த்திற்கு. ஏடு அங்கையாள் என்பது பராசக்தியை ஞானவடிவாகிய கலைமகள் என்று குறிப்பிடுகிறார்.

*"சக்திராகத்தில் தான் நல்உயிராகி*
*ஒத்தபாசமலம் ஐந்தோடு ஆறாறு*
*தத்துவம் பேதம் சமைத்துக் கருவியும்*
*வைத்தனன் ஈசன் மலமறும் ஆறே"*

என்ற சைவ சித்தாந்தத்தின் கருவுக்கு சக்தி தத்துவம் எப்படி செயல்படுகிறது அல்லது சக்தி எப்படி எல்லாம் சிவத்தால் செயல்படுத்தப்படுகிறது என்ற உண்மையை நாம் உணர முடிகிறது.

சக்தி என்பது திரு உள்ளத்தின் வெளிப்பாடே என்றும். சிவத்தின் ஆணையின் வண்ணம் செயல்படுவது சக்தி என்ற உண்மையை சக்தியை வழிபடும் அன்பர்களும் உணர்ந்து கொள்ள வேணும் என்பதே திருமுலர் நமக்கு உணர்த்த நினைக்கும் உண்மை என்றும் ஆற்றலாய் வந்த ஒன்றின் அருளைப் பெறாமல் திருஉள்ளத்தை சேரமுடியாது என்பதே திருமூலர் காட்டும் பராசக்தி.

---

# குளித்து முடிந்தபின் ஈரமான திருநீறு அணிய வேண்டுமென்பது ஏன்?

திருநீறு அணிவதைப் பற்றிக்கூறும் போது சில நேரங்களில் ஈரமான விபூதி அணிய வேண்டுமென்றும், சில நேரங்களில் ஈரமில்லா திருநீறு அணிய வேண்டும் என்று கூறுவது ஒன்றுக்கொன்று முரண்பட்டதாக உள்ளதே என்று தோன்றலாம். திருநீறு அணிந்தவர்களை கண்டால் மனதுக்குள்ளாவது இகழும் இக்காலத்தில், இந்த முரண்பாடுக்கு விளக்கம் கூறுவது மிகவும் அவசியம். நம் முன்னோர்கள் இதற்குப் பதில் சொல்லவில்லை என்றாலும் திருநீற்றின் மருத்துவ குணங்களைப் பற்றி அவர்கள் நன்கறிந்திருந்தனர்.

அதிகாலையில் எழுந்து கை, கால், முகம் கழுவி, திருநீர்ச்சட்டியிலிருந்து ஒரு பிடி எடுத்து நெற்றியிலும் பின் மாறிடத்தும், இரு புஜங்களிலும் சில வாமஸ்தானங்களிலும் பாட்டனும், பாட்டியும் பூசிக்கொள்வதை சிலராவது பார்த்திருப்போம். மாலைப்பொழுதிலும் இவ்வாறு கை, கால், கழுவி வந்து நனைக்காமல் பூசுவதுண்டு. ஆனால் குளித்த பின் திருநீறு எடுத்து நனைத்து உடலில் பூசி வந்தனர். இப்படி இரண்டு வகையான திருநீறு பூசும் முறை பார்க்கும் போது நாம் புரிந்துகொள்ள வேண்டியது நனைக்காத திருநீறுக்கு அணுக்களை அழிக்கும் சக்தியும், நனைத்த திருநீருக்கு உடலில் மிகையாக உள்ள ஈரத்தை உறிஞ்சி அகற்றும் சக்தியும் உண்டென்பதாகும்.

இவ்வளவும் அறிந்தபின், நம் உடலில் காலையிலும், மாலையிலும் மட்டும் ஏன் அணுக்களின் பாதிப்பு உண்டாகின்றது என்பதைக் கவனிப்போம். இரவு ஒரு நபர் தூங்கும் போது அவர் படுக்கையில் லட்சக்கணக்கான அணுக்கள் பரவியிருக்கும் என்று விஞ்ஞானம் கூறுகின்றது. அதேபோல் மாலை நேரத்தில் சுற்றுச்சூழலில் எண்ணற்ற நோயணுக்கள் உலவுகின்றன என்பது அறிவியலின் உறுதியான கண்டுபிடிப்பு. அதனால் காலையும், மாலையும் நோயணுக்களின் பாதிப்பு ஏற்படாமலிருக்க ஈரமில்லாத திருநீறை அணிந்து வருகின்றனர்.

குளிக்கும் நேரம் உடலின் முட்டுக்களில் ஈரம் காரணமாக நீர் கட்டு உருவாகவும், காலப்போக்கில் அது வாயிலாக கொழுப்பு அதிகரிக்கவும் அது முட்டுவாதமாக மாறவும் வாய்ப்புண்டு. இப்படி உருவாகும் நீர்க்கட்டை தவிர்ப்பதற்காகத்தான் குளித்தவுடன் ஈரமான திருநீறு அணிவது.

04 FEB 2020

சேரல்

பெயர் :..........................................................

முகவரி :..........................................................

..........................................................